KALKI 10.10.93 ரூ 3.00

# கல்கி



## வானம் தொட்டுவிடும் தூரம்தான்..!


காயத்ரி நங்கையின் அழகுச்சித்திரம் -1



# லாரி ஸ்ட்ரைக் எதற்காக?

"தக்காளி பதினைஞ்சு ரூபா! வெங்காயம் பன்னண்டு ரூபா!" என்று கடைக்காரர் கூற, ஷாக் அடிக்கிறது.

"என்னப்பா இது, கொள்ளையா இருக்கே?"

"என்னங்க பண்றது, லாரி ஸ்ட்ரைக்!"

'எதற்கு இந்த லாரி ஸ்ட்ரைக்?' என்று வயிற்றெரிச்சலுடன் யோசிக்கிறோம். காரணங்களை விளக்குகிறார் ரமேஷ் லம்பா - தலைவர்; பொருள் போக்குவரத்துக் கழகம், சென்னை.

1. இந்தியாவின் பல்வேறு நகரங்களில் ஓரம் 'ஆக்ட்ராய்' எனும் நுழைவு வரி வசூலிக்கப்படுகிறது. இந்த வரி, பொருளை அனுப்பும் உற்பத்தியாளர் அல்லது வியாபாரி செலுத்த வேண்டியது. ஆனால் நுழைவு வரியாக செக் போஸ்டில் லாரி உரிமையாளர் செலுத்திவிட்டு, பிறகு சரக்கு அனுப்புகிறவரிடம் வசூலிக்க வேண்டியிருக்கிறது. "இது பெரும் தொல்லை; அரசாங்கத்துக்கு நுழைவு வரி வசூலித்துத் தரும் ஏஜெண்டாகச் செயல்பட நாங்கள் தயாராயில்லை; நேரடியாக உற்பத்தியாளர் அல்லது வியாபாரியிடமே வசூலித்துக் கொள்ளட்டும்" என்பது லாரி உரிமையாளர் கோரிக்கை.

2. புக்கர் - இது வடமாநிலங்கள் ஸ்பெஷல்! தேசிய பர்மிட் பெற்ற லாரியானாலும் கூட தமது மாநிலத்துக்குள் நுழையும் போது ஒரு டிரிப்புக்கு ரூ. 100/- என்று மாநில அரசு வசூலிக்கும் கட்டணம். இது சட்டத்துக்குப் புறம்பான வரி விதிப்பு என்று சுப்ரீம் கோர்ட்டே தீர்ப்பு வழங்கியும் கொடுமை தொடர்கிறது.

3. இந்திரா காந்தி ஆட்சிக் காலத்தில் தேசிய பர்மிட் வழங்குவதில் இருந்த கெடுபிடிகள் நீக்கப்பட்டு ஒரு மாநிலத்துக்கு ரூ. 1000 என்று கட்டணம் நிர்ணயிக்கப்பட்டது. அதற்கு முன் தேசிய பர்மிட் பெற கட்டுப்பாடுகள் இருந்ததால் சிபாரிசும் லஞ்ச ஊழலும்தான் கொடிகட்டிப் பறந்தன. ஆனால் இந்திரா காந்தி செய்த நல்ல காரியம், சீக்கிரமே அரசுக்குப் பணம் காய்ச்சி மரமாகி விட்டது. அவர் நிர்ணயித்த ஆயிரம் ரூபாய் கட்டணம், ரூ 1500 ஆகி, இப்போது ரூ 5000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது! ஏழெட்டு மாநிலங்கள்



● ரமேஷ் லம்பா

கடந்து போகப் பர்மிட் வாங்குவதெனில், ரூ 40,000 செலுத்தும்படியிருக்கிறது. பர்மிட் கட்டணத்தை தர்ம நியாயத்துடன் நிர்ணயிக்குமாறு லாரி உரிமையாளர்கள் கோருகின்றனர்.

4. பொருள்களை உற்பத்தி செய்யும் நிறுவனம் ''எக்ஸைஸ்'' எனப்படும் உற்பத்தி வரி செலுத்துகிறது. சரக்கை ஏற்றிச் செல்லும் லாரி டிரைவர், இந்த எக்ஸைஸ் வரி ரசீதை உடன் எடுத்துப் போய், பத்திரமாக சரக்கைப் பெறுகிறவரிடம் தர வேண்டும். இல்லாவிட்டால் சரக்கைப் பெறுகிறவர், அதைத் தமது உற்பத்தியில் மறுபடியும் பயன்படுத்தும் போது இரண்டாவது தடவையாகக் கட்டும் எக்ஸைஸ் வரியை அரசிடமிருந்து திரும்பப் பெற (ரீஃபண்டு) முடியாது. ஆக, இந்த ரசீது மிக முக்கியமானது. இது பல நாள் பயணத்தில் கசங்கவும் தொலையவும் வாய்ப்புண்டு. எனவே, 'இதற்கு நகல் தயாரித்து, நகலை செக்போஸ்ட் பரிசீலனைக்காக லாரி டிரைவரிடம் தந்து விட்டு, ஒரிஜினலை - சரக்கைப் பெறுகிறவருக்கு உற்பத்தியாளரே நேரடியாக அனுப்பி விடலாம்; இதற்கு அரசின் ஒத்துழைப்பு வேண்டும்' என்கிறது லாரி உரிமையாளர் சங்கம்.


தவிர, வழக்கமான போலீஸ் தொல்லை, செக் போஸ்ட் லஞ்ச ஊழல் பிரச்னை ஆகிய குறைகளும் இருக்கவே இருக்கின்றன.

ஒட்டுமொத்த விளைவு, நாட்டின் ரத்த நாளங்களான சாலைகளில் குருதியாகிய லாரிகள் ஓடவில்லை!

இப்போது நடந்த பேச்சு வார்த்தையில், ஐயாயிரமாக உயர்த்தப்பட்ட தேசிய பர்மிட்டுக்கான கட்டணத்தை மூவாயிரமாகவோ அல்லது அதற்கும் குறைவாகவோ குறைத்துக் கொள்வதாக அரசு உறுதிமொழியளித்துள்ளதால், இப்போதைக்கு லாரி ஸ்டிரைக் வாபஸ் பெறப்பட்டிருக்கிறது. ஆயினும், இவர்களது நியாயமான கோரிக்கைகளை அரசு நிறைவேற்று வதில் மெத்தனம் காட்டினால், மீண்டும் ஸ்டிரைக் என்கிற நிலைதான் நீடிக்கும்!

– எஸ். சந்திரமௌலி

படங்கள் : கோபிநாத்





✱ அடுத்த முதல்வர்?

# அடுத்த கர்நாடக முதல்வர் ஜாபர் ஷெரீஃப்?

மவுனச் சாமியார் ஒருவர் கட்சியின் தலைவராகவும் பிரதமராகவும் இருப்பது கர்நாடகக் காங்கிரஸின் இரு கோஷ்டிகளுக்கும் ரொம்ப வசதியாக இருக்கிறது. இரு கோஷ்டியினரும் மாறி மாறி டில்லிக்குப் பறந்து பிரதமரிடம் எதிர்த்தரப்பு பற்றிப் புகார் கூறுகிறார்கள். நரசிம்மராவோ வாய் திறப்பதில்லை; வெறுமனே தலையை மட்டும் ஆட்டுகிறார். அதைச் சம்மதமாக எடுத்துக் கொண்டு "எங்களுக்குத் தான் வெற்றி" என்று இருதரப்பினரும் மாறி மாறி அறிக்கை விடுகிறார்கள்!

தற்சமயம் கர்நாடகத்தின் அரசியல் நிலவரம் இதுதான்.

இதற்கிடையில் மந்திரிசபைக் கூட்டங்களுக்குப் போவதை எஸ். எம். கிருஷ்ணாவும் ராஜசேகரமூர்த்தியும் தொடர்ந்து புறக்கணித்து வருகிறார்கள். "ஏன் மந்திரிசபைக் கூட்டங்களில் கலந்து கொள்வதில்லை?" - என்ற கேள்விக்கு இவர்கள் சொல்லும் பதில் "எங்களுக்கு வேறு எங்கேஜ்மெண்ட் இருந்தது."

இது பற்றி மொய்லி குறிப்பிடும் போது - "அவர்கள் தங்களுடைய பொறுப்பை உணர வேண்டும். எல்லாருக்கும் புத்தி சொல்லிக் கொண்டிருப்பதற்கு நான் ஒன்றும் ஸ்கூல் ஹெட்மாஸ்டர் அல்ல. அவர்கள் தொடர்ந்து இப்படியே செய்வார்களானால் நான் முதலமைச்சர் என்ற முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும்" - என்கிறார்.

முதல்வர் மாற்றப்படவில்லையானால் எதிர்ப்பாளர்கள் பிரிந்து பங்காரப்பா தலைமையில் புதிய கட்சி ஆரம்பிக்கலாம் என்பதும் ஒரு அரசியல் வட்டாரக் கிசுகிசு. 'இப்படி மிரட்டுவதன் மூலமே காரியத்தைச் சாதிக்க எண்ணுகிறார்கள்' என்பதாகவும் ஒரு வாதம்!

இதற்கிடையில் டெல்லி மேலிடத்திலும் மொய்லியை மாற்ற முடிவு செய்திருப்பதாகத் தான் தெரிகிறது. மேலிடத்துப் பார்வையாளராக அனுப்பப்பட்டிருந்த ஏ.கே. அந்தோணி தலைமை மாற்றத்துக்குச் சிபாரிசு செய்திருப்பதாகத் தகவல். அப்படி மாறுதல் வரும் பட்சத்தில் மொய்லிக்கு பதில் எஸ். எம். கிருஷ்ணாவோ ராஜசேகர மூர்த்தியோ முதல்வரானார்களேயானால் நிச்சயம் அந்த நிமிடத்திலிருந்தே மறுபடி எதிர்ப்பு கிளம்பி விடும். மொய்லி கோஷ்டி ஒத்துழையாமையை நடத்தும். ஆகவே இரண்டு கோஷ்டிகளுக்கும் பொதுவான ஒருவரை முதல்வராக்க மேலிடம் தீர்மானித்திருக்கிறதாம். அதன் படி ஜாபர் ஷெரீஃப்பையோ அல்லது மார்கரெட் ஆல்வாவையோ முதலமைச்சராக்குவது என்பது தீர்மானமாம்.

ஒருவேளை ஜாபர் ஷெரீஃப் முதல்வரானால் வர விருக்கும் பொதுத் தேர்தலைச் சந்திக்க காங்கிரஸ் சிரமப்பட வேண்டியிருக்கும். ஏனென்றால் பாரதிய ஜனதா கர்நாடகத்தைப் பெரிதும் நம்பியிருக்கிறது. மாநாடுகள் போடுவதும், ரதயாத்திரை நடத்துவதுமாக ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கத்துடன் செயலாற்றி வருகிறது. ஷெரீஃப் முதல்வரானால் உட்பூசல் காரணமான காங்கிரஸின் பலவீனத்தை பா.ஜ.க. நன்றாகவே பயன்படுத்திக் கொள்ளும் என்றுதான் தோன்றுகிறது.

## ஸ்ரீதேவியின் பல்டி!



✱ பல்டி அறிக்கை!

தமிழக முதல்வர் ஜெயலலிதா உண்ணாவிரதம் இருந்த போது அவரைச் சென்று சந்தித்த ஸ்ரீதேவி, ரஜினிகாந்த், கமலஹாசன் ஆகியோர் நாளிதழ்களில் புகைப்படம் வரும் என்றுதான் நினைத்திருப்பார்களே தவிர பெங்களூரில் பிரச்னை வரும் என்று நினைத்திருக்க மாட்டார்கள். இந்த மூன்று பேரின் படங்களைத் திரையிட சில கன்னட அமைப்புகள் கர்நாடகம் முழுமைக்கும் 'தடை' விதித்திருப்பது தெரிந்த விஷயம். இதன்படி ரஜினிகாந்தின் 'உழைப்பாளி' திரையிடப்படுவதைத் தவிர்த்து விட்டார்கள். கமலஹாசனின் படம் எதுவும் இல்லையாதலால் தற்சமயம் அவருக்குப் பிரச்னை இல்லை. ஸ்ரீதேவி நடித்த இந்திப் படங்கள் இந்தச் சிக்கலில் மாட்டிக் கொண்டன. பார்த்தார் ஸ்ரீதேவி. "ஜெயலலிதாவை நான் சென்று சந்தித்தது அவரும் ஒரு நடிகை என்ற முறையில்தான். அது ஒரு மரியாதை நிமித்தமான சந்திப்புதானே தவிர அதற்கும் அரசியலுக்கும் - குறிப்பாக காவேரி பிரச்னைக்கும் சம்பந்தமில்லை" என்று அறிக்கை வெளியிட்டு விட்டார். இம்மாதிரியான பல்டி அறிக்கைகள் ரஜினியிடமிருந்தும், கமலிடமிருந்தும் வருமா என்பது தெரியவில்லை.

- பெர்னாண்டஸ்

கவர் ஸ்டோரி



* இருதய அறுவை சிகிச்சைக்காகக் காத்திருக்கும் நிஷாவுடன் உமா

# ஈரம்

கல்லூரிக்குக் கட் அடித்து விட்டு தியேட்டர்களின் இருட்டு மூலைகளில் உலகை தரிசிப்பதும், ஒரு வேண்டுதல் போல பெண்கள் கல்லூரி பஸ் ஸ்டாப்பு களில் தவம் கிடப்பதும், விசிலடித்து விடலைத்தனம் பண்ணு வதும், கரடியை ஒத்த சிகையலங்காரத் துடன் டீக்கடை பெஞ்சுகளில் கிட்டப்பா குரலில் 'கானா' கச்சேரி செய்வதும், வேலை தேடி விரக்தி அடைந்து, தாடி வளர்த்து தண்ணியடிப்பது மாக நமது சினிமா, இளையதலை முறைக்கு வேஷம் கட்டிக் காக பண்ணு கிறது. உண்மையில் இன்றைய இளைய தலைமுறை எப்படி இயங்குகிறது? சினிமா நாயகர்களை ரசித்தாலும் அவர்களின் ஜெராக்ஸ் பிரதியாக வலம் வருகிற மனோ பாவம் இருப்பதாகத் தோன்றவில்லை. எழுமின், விழிமின் சிந்தனைகளை மனத் திற்குள் அவர்கள் அசை போடுகிறார்கள். எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சை ஓரம் கட்டி விட்டு ஏதாவது உருப்படியாகச் செய் யலாமா என்று யோசிக்க ஆரம்பித்திருக் கிறார்கள்.

பெரும்பாலானோர் இப்படியென் றால், இன்னும் சிலர் ஆச்சரியப்படத்தக்க பரிமாணம் காட்டுகிறார்கள். அதாவது தனக்கென வாழ்ந்தது போதும்; பொதுநல நோக்கில் ஏதாவது செய்யலாம் என்கிற ரீதியில்.

தாய்க் குலத்திலிருந்து தொடங்க லாம். அவர் பெயர் உமா. வயது 23. எலக் டிரானிக்ஸில் டிப்ளமோ முடித்த பாலக் காட்டுக்காரர். அப்பா, அம்மா, சொந்த சகோதரர்கள் உள்ளிட்ட அமைதியான குடும்பம்.

பெண் படித்து வேலைக்குப் போவாள், பிறகு திருமணம், பேரன் - பேத்தி எட்ஸட்ரா எட்ஸட்ரா என பெற்றோர் வழக்கம் போல் சினிமாஸ்கோப் கனவு கண்டு கொண்டிருக்க, இவரது பார்வை வேறுவிதமாகப் பாய்கிறது.

கல்கத்தாவில் அன்னை தெரஸா. அவர்

# தொட்டுவிடும் தூரம்தான்..!

யார்? வேற்று நாட்டுக்காரார். இங்கு வந்து தொழுநோயாளிகளுக்கு உழைக்க வேண்டுமென்று அவருக்கென்ன தலையெழுத்து? அவருக்கு மட்டும் தனிப்பட்ட ஆசைகள், லட்சியங்கள் ஏன் இல்லாமல் போய் விட்டன? பொதுத் தொண்டு ஏன் அவர் லட்சியமாயிற்று?

ஞானம், போதி மரத்தடியில்தான் வர வேண்டும் என்பதில்லை. பாலக்காட்டில் ஒரு ஓட்டு வீட்டின் சமையலறையிலும் வரலாம்.

அன்னை தெரஸாவால் பெரிதும் பாதிக்கப்பட்ட உமா, தனது பாதையை முடிவெடுத்த தருணம் ஒரு தமிழ் வாரப் பத்திரிகையில் உதவும் கரங்கள் வித்யாகர் பற்றிய கட்டுரை வெளிவர, புறப்பட்டு விட்டார்!

இரண்டு வருடங்கள் உதவும் கரங்களில் பணிபுரிந்த இவரது பொறுப்பையும், தாய்மை உணர்வையும் கண்ட வித்யாகர், உமாவை உதவும் கரங்களின் கண்காணிப்பில் இயங்கும் 'கருணாலயம்' என்கிற மனநலம் குன்றியோருக்கான விடுதியின் பொறுப்பாளராக நியமித்தார். இன்று, மதுரவாயிலில் இயங்கும் இவ்விடுதியின் 70 ஆதரவற்ற, மனநலம் குன்றிய முதியோர்களுக்கு உமாதான் தாய்!

சிறியவரும் பெரியவருமாகச் சித்தம் கலங்கியவர்கள். பேசுவது, செய்வது எது குறித்தும் பிரக்ஞை அற்றவர்கள். அவர்கள் செய்யும் சகிக்க முடியாச் செயல்களை உமாவால் எப்படித் தாங்கிக் கொள்ள முடிகிறது? அவருக்கென்று ஆசைகள் ஏதுமில்லையா? இந்தப் பருவத்திற்கேயான திருமணக் கனவுகள் • இல்லவே இல்லையா? அல்லது, அவற்றையெல்லாம் வலிந்து அழித்து விடுகிறாரா?

கேள்விகள், கேள்விகள்.

உமாவின் பதில், இலவச இணைப்பாய் ஒரு புன்சிரிப்புடன் சட்டென்று வெளிவருகிறது. ''ஒரு மனுஷருக்காக ஆயுசு முழுக்க வாழுவது, ஒரு வாழ்க்கையா? அதுதான் வாழ்க்கையெனில் அப்படியொன்று எனக்கு வேண்டாம்.''

இதனை, அமெச்சூர் நாடக டயலாக் என்று கிண்டலடிப்பவர்கள் ஒரு நடை மதுரவாயிலுக்குப் போய்ப் பார்க்கலாம்.

பயமுறுத்தும் சுடுகாடு. உள்ளே நடக்கும் சாராய சாம்ராஜ்ஜியம். இவற்றைத் தாண்டி அந்த அமைதி தவழும் ஓலைக் குடிசைகள். எழுபது பேருக்கான உணவு, மருந்து இதர தேவைகளெல்லாம் அவ்வப்போது சென்னையிலிருந்து வண்டியில் வந்து விடுகிறது. (வண்டி அன்பளிப்பு : ஜூனியர் விகடன் வாசகர்கள்.) ஓரிரு இளைஞர்கள் உதவிக்கு. மற்றபடி சகல பணிகளுக்கும் உமா, உமா, உமா.

ஐம்பது வயதைத் தாண்டின கமலா மாமி, போன வாரம் தான், தனக்குக் கல்யாணம் ஆனதென்றும், புருஷன் மன்னார் குடியில் வாத்தியாராக இருக்கிறார் என்றும், 'கரெண்ட் மூலமாக'த்தான் பேச்சுத் தொடர்பு என்றும் தீவிரமாக விவரிக்கும்போது 'அப்படியா?' என்று உமா கேட்டுக் கொள்கிறார். அறுபது வயதுப் புலவர் ஒருவர் நரம்புக் கோளாறால் பாதிக்கப்பட்டு எழ முடியாமல் படுத்தபடி பிரயத்தனப்பட்டு 'மெழுகுவர்த்தி' பற்றிக் கவிதை பாடும்போது 'கஷ்டப் படாதீங்க புலவரே! மீதி

* பாம்பே சாணக்யா





* சேகர் தத்தாத்ரி

கவிதையை அப்புறம் சொல்லலாம்' என்றபடி அன்புடன் அவரை அமைதிப்படுத்துகிறார். மூன்று வயது நிஷாவின் உடலில் எப்போதும் ஒரு துர் நாற்றம். தவிரவும் தன்னிலை உணராத பிறவி. அதைத் தொட்டுத் தூக்கி, சுத்தப் படுத்தி, மருந்து கொடுத்து, உணவூட்டி...

ஓயாத இருமல் குரல்கள்... திடீர்திடீரென்று அலறல். சண்டைகள்...

ஒற்றை மனுஷியாக உமாபடும் பாடு நமக்கு வலிக்கிறது.

உமா சொல்கிறார், ''கஷ்டமா? இவர்களுக்குச் செய்வதை விட ஒரு சந்தோஷம் இருக்க முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை.''

கனத்த மனத்தைக் கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொள்ளுங்கள். இனி ஒரு இளைஞரின் கதை. உமாவினுடையது மக்கள் தொண்டென்றால் இவருடையது கலைத் தொண்டு. வசித்தது பம்பாயில். கல்லூரிப் படிப்பும் அங்கேயே. பெரிய உத்யோகம் காத்திருந்தது. அடுக்கு மாடி ஃப்ளாட்டில் அக்கடா என்று குழந்தை, குட்டியோடு காலத்தைத் தள்ளியிருக்கலாம்.

சாணக்கியாவுக்கு அந்த வாழ்க்கையில் விருப்பமில்லை. அரை நிஜார் வயதிலேயே கலையார்வம். பம்பாயில் சாணக்யாவுக்கு பல மொழி நாடகங்கள் பார்க்கிற வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அவ்வப்போது தமிழும். தமது வழக்கமான ஜோக் கதம்பக் காமெடிகள்.

அபாயகரமான தமிழ் நாடகச் சூழல் சாணக்யாவை யோசிக்க வைத்திருக்கிறது.

89-ல் சென்னை வந்து விட்டார். மனத்தில் நாடக தாகம். ஓயாத உழைப்பின் விளைவாய் 'கலா மந்திர்' என்கிற பெயரில் குழு ஆரம்பித்தார்.

சாணக்யா இதுவரை தமிழில் நான்கே நான்கு நாடகங்கள்தான் தந்திருக்கிறார். ஆனால் இவர்தான் தமிழ் நாடகத் துறையையே உத்தாரணம் பண்ண வந்தவர் என்பதாக நாலாபுறமும் கேட்கிற குரல்கள் வியப்பைத் தருகின்றன.

''நல்ல கதையும், புதிய புதிய உத்திகளும்தான் எனது ஆயுதம். மக்கள் வரவேற்பு அமோகமாக இருக்கிறது. சினிமாவுக்குக் கூடுகிற கும்பல் நாடகத்திற்கும் கூட வேண்டும். பாரம்பரியம் மிக்க இக்கலை மேன்மேலும் செழிக்க வேண்டும். எனக்கு வேறு ஒன்றும் ஆசையில்லை.''

இதே காரணத்திற்காகச் சாணக்யா, திருமணம் கூட வேண்டாம் என்று ஒதுக்கி விட்டார்.

''பசியில்லாமல் சாப்பாடு, இருக்க ஒரு இடம் - சின்னதாக ஒரு உத்யோகம் - இதற்கு மேல் நான் எதுவும் எதிர்பார்க்கவில்லை. எளிய வாழ்க்கை போதும். ஆடம்பரம், லட்சியத்திற்கு இடையூறு'' இது சாணக்யா சொன்னது. அவரது வெற்றி இதற்குப் பின்னால் தான் ஒளிந்து கொண்டிருக்கிறது போலும்.

'இயற்கைச் செல்வம் நமக்குக் கிடைத்திருக்கும் பாக்கியம். அதை அழிக்காமல் அதன் பசுமையை, அழகை, மாசற்ற காற்றை அனுபவிக்க, அப்படியே பாதுகாக்க வேண்டும்.'

சொன்னவர் மேனகா காந்தி அல்ல. முப்பது வயது இளைஞர்! பெயர் சேகர் தத்தாத்ரி.

நாலு பாட்டு, மூன்று ஃபைட் என்று ஃபார்முலாப் படம் எடுக்கிற நபர்கள் நிறைந்த திரை உலகில் சேகர் மிக வித்தியாசமாகத் தனித்துத் தெரிகிறவர்.

பாம்புகள் பற்றிய அவரது டாக்குமென்ட்ரி பரபரப்பாகப் பேசப்பட்ட ஒன்று. தவிர, அவரது 'சைலன்ட் வேலி'. 52 நிமிடங்கள் மட்டுமே திரையில் ஓடக்கூடிய 'அமைதிப் பள்ளத்தாக்கு' - கிட்டத்தட்ட ஒன்றரை வருட பொறுமையான உழைப்பில் விளைந்த உன்னதம்.

சேகருக்கு, மனிதர்களுக்கு இணையாகப் பறவைகளையும் மிருகங்களையும் பிடிக்கிறது. வனங்களும், வயல்களும் அவரை சிலிர்க்கச் செய்கின்றன. வள்ளலார் பாணியில் வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடும் மனம் முப்பது வயதிலேயே அவருக்கு வாய்த்திருக்கிறது!

ஒரு சமயம் 160 அடி உயர மரத்தில், 90 அடி உயரத்தில் ஹாரன் பில் பறவை கூடு கட்டியிருந்தது. அதற்கு இணையாக இருந்த மரத்தில் அதே உயரத்துக்கு மெல்ல மெல்ல மேடை போட்டு இலைமறைவாக அதில் குடியிருந்து அந்தப் பறவை அறியாமலேயே அதைப் பற்றிப் படம் எடுத்திருக்கிறார் சேகர்!

ஜேக்ஸன் ஹோல் வனவிலங்குத் திரைப்படவிழா விருது, இத்தாலி திரைப்பட விழா விருது, இத்தாலியின் இன்விடேஷன் பரிசு என்று அவருக்கு அயல உலக அங்கீகாரங்கள் வந்தபடி இருக்கின்றன.

உதாரணங்கள் போதும். இது விவேகானந்தரின் சிகாகோ பேச்சின் நூறாவது ஆண்டு. அவர் விரும்பினபடி மக்கள் உருவாவதெனில் அத்தனை பேரும் பொதுத் தொண்டில் இறங்கியாக வேண்டும் என்பதில்லை. அது சாத்தியமும் இல்லை. அது, ரோடைப் பெருக்கி வீட்டில் குப்பை சேர்க்கும் கதை ஆகி விடும். இளைஞர்கள் தம் கடமைகளில் கவனம் பிசகாது இருந்தாலே போதும் -

டைட்டிலை மறுபடி படித்துக் கொள்ளுங்கள்!

– கிச்சா, சாருகேசி

மேலட்டை வண்ணப்படம், புகைப் படங்கள் : கோபிநாத்

## வைரமுத்து திரைப் பாடல்கள்



# வைரமுத்துவுக்கு ஒரு தங்கச் சிறை!



வைரமுத்து பற்றி நான் எப்பொழுதும் சொல்வதுண்டு. இவர் வரிக்கு வரி மட்டும் சிந்திப்பதில்லை... வார்த்தைக்கு வார்த்தை சிந்திக்கிறார் என்று.

பாடல் எழுத, புதுமையான காட்சிகளாக மட்டும் இவருக்கு அமைத்துக் கொடுத்து விட்டால், இவர் வார்த்தைக்கு வார்த்தை சித்து விளையாடுவதைப் பார்க்க முடிகிறது.

என் படம் சிந்து பைரவி
பாடல் - நானொரு சிந்து
எடுத்துக் கொள்வோம்!

"இல்லாத உறவுக்கு என்னென்ன
பேரோ?
நாடோடிப் பாட்டுக்குத்
தாய் தந்தை யாரோ?
விதியோடு நானாடும்
வெளையாட்டைப் பாரு
வெளையாத காட்டுக்கு வெத
போட்டதாரு?"

விஷயத்தையும், வார்த்தைப் பிரயோகத்தையும் சேர்த்துக் கைகோத்து விளையாடும் லாவகத்தைக் கண்ணதாசனுக்குப் பிறகு இவரிடம்தான் நான் கண்டேன்.

"பாடறியேன்; படிப்பறியேன்" என்கிற பாடலில் ஒரு இடம்.

"சட்ஜமம் என்பதும் பஞ்சமம் என்பதும் பஞ்சப் பரம்பரைக்கப்புறம்தான்" என்று எழுதினார்.

கதையின் அடிப்படைக் கருத்தையே இந்த இரண்டு வரிகளில் கூறி விட்டார்.

இவருடைய புதுமையான சொல் பிரயோகங்களுக்கு ஆயிரமாயிரம் உதாரணங்கள் கூறலாம்.

என் படம் புன்னகை மன்னனில் வரும் மழைப் பாட்டு!

'வானிலே வானிலே நீரின்
தோரணங்களோ!'

நினைத்துப் பாருங்கள்!

மழைத் தூறல்களை எவ்வளவு அழகாகத் 'தோரணங்கள்' என்று சொல்கிறார்!

இப்படிப்பட்ட வார்த்தைப் பிரயோகங்கள் இயக்குனர்களாகிய எங்களுக்கு மிகப் பெரிய 'சவாலை' விடுகிறது. படம் பிடித்துக் காட்டும் போது 'மழைத் தூறல்கள்' வானிலே தோரணங்களாகத் தெரியவைக்க வேண்டுமே!

அதே பாடலில் இன்னொரு இடம் "பூமி எங்கும் கவியரங்கம் சாரல் பாடும் ஜலதரங்கம்" என்று மழையை வர்ணிக்கிறார்.

இந்த இடம் திரைப்படத்திலே எப்படிப் படமாக்கப்பட்டிருக்கிறது என்று நினைத்துப் பார்ப்பவர்களுக்குப் புரியும், சில நேரங்களில் இந்தக் கவிஞன் எங்களுக்கு சவாலாக மட்டு மல்ல... inspiration ஆகவும் இருக்கிறார் என்பது.

இன்னொரு இடம் -

கல்யாண தேசத்திலிருந்து அகதிகளாய் வெளியேற்றப்பட்டவர்கள் தங்களுக்குத் தாங்களே பாடிக் கொள்ளும் ஒரு பாடல் :

பூவெல்லாம் தாலி கட்டி
மணப்பதில்லை
என்றாலும் பூவுக்கென்ன
மணமாயில்லை?
எந்நாளும் பறவைக்கு நரைப்பதில்லை
பறவைக்கு மாமியார் இருப்பதில்லை!
கல்யாண பாரம் இல்லை
கண்ணீரின் ஈரம் இல்லை
மாப்பிள்ளை பேரம் இல்லை
நாத்தனார் யாரும் இல்லை

வேதனை கலந்த ஹாஸ்யத்தை இந்த வரிகளிலே இவர் வடித்திருப்பதை வெகுவாக நான் பலமுறை ரசித்துப் பாராட்டினேன்.

'சின்னச் சின்ன ஆசை' பாடலை எடுத்துக் கொள்வோம். உலகமெங்கும் தமிழர்கள் எங்கெல்லாம் வியாபித்திருக்கிறார்களோ, அங்கெல்லாம் ஒவ்வொரு தமிழன் வீட்டிலும் இன்றைக்கு இந்தப் பாடல் 'சின்னச் சின்ன ஆசை' சுப்ரபாதமாக ஒலித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னால் இதை யாராலும்

மறுக்க முடியுமா? தனது திரையுலக முதல் பாடலாக இதற்கு இசை அமைத்தவர் சின்னச் சின்ன இசை மேதை ஏ. ஆர். ரஹ்மான். அந்தப் பாடலில் வருகின்ற ''என்னை இந்தப் பூமி சுற்றி வர ஆசை'' என்று எழுதப்பட்ட வரிகளோடு... இருவருமே இன்றைக்கு 'பூமி'யைச் சுற்றி வந்து கொண்டிருக்கிறார்களே! இதைத்தான் யாராலும் மறுக்க முடியுமா?

இன்றைக்கு இந்த இரு மேதைகளும் இணைந்து உருவாக்கிய ஜென்டில்மேன் என்கிற திரைப்படப் பாடல் காஸட்டுகள் விற்பனையில் ஒரு புதிய சரித்திரத்தையே உண்டாக்கி இருக்கிறதென்பதையும், வெளிநாடுகளில் காம்பாக்ட் டிஸ்க் ஆக வெளியிடப்பட்டு அங்கேயும் விற்பனையில் ஒரு சாதனை படைத்திருப்பதையும் கேள்விப்படும் போது தமிழ்த் திரையுலகமே பெருமகிழ்ச்சி கொள்கிறது. ஏ.ஆர். ரஹ்மானைத் திரையுலகிற்கு அடையாளம் காட்டிய இயக்குனர் மணிரத்னத்தையும் வைரமுத்துவை திரையுலகில் விதைத்த பாரதிராஜாவையும் நான் நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.

''நான் சுதந்திரமானவன்; என் சுதந்திரத்தை இந்தச் சினிமா பறித்து விட்டது; இது நான் தங்க நினைத்த தங்கச் சிறைதான்! அலைந்து ஏற்றுக் கொண்ட ஆயுள் தண்டனைதான்'' என்று தமது திரைப்பாடல்கள் நூலின் முதல் தொகுதி முன்னுரையில் வைரமுத்து கூறியிருக்கிறார்.


ஆனால் இன்னொரு இடத்தில் கூறுகிறார், ''நான் தமிழர்களின் வீட்டுக் குயில் ஆனேன்'' என்று.

எல்லாக் கவிஞர்களுமா தமிழர்களின் வீட்டுக் குயில் ஆகியிருக்கிறார்கள்? வைரமுத்து ஆகியிருக்கிறார் என்றால் அது சினிமா தந்த அரியாசனம். எனவே அதைச் சிறை என்று அவர் சொல்லலாகாது. அவர் அடைந்த இந்தப் பெரும் புகழும், அவர் குறிப்பிடுவது போல் 'ஆயுள் தண்டனை' யென்றால் இந்தத் தமிழகத்திலிருக்கும் அத்தனை இளைஞர்களுக்கும் இந்த ஆயுள் தண்டனை கிடைக்கட்டும்!

(வைரமுத்துவின் திரைப்பாடல்கள் நூல் வெளியீட்டு விழாவில் வாசிக்க பாலசந்தர் எழுதி அனுப்பிய உரையிலிருந்து)

**இயக்குனர் கே. பாலசந்தர்**

திரைப்பாடல்கள் : வைரமுத்து
தொகுதிகள்
ஒவ்வொன்றும் ரூ 40/-
சூர்யா பதிப்பகம்,
15, 4வது குறுக்குத் தெரு,
டிரஸ்ட்புரம்,
சென்னை - 600 024.



# பாலம்

●● எனது 28 வயது மகன் சிறு வயதிலிருந்தே தலைசுற்றல் வியாதியால் அவதிப்படுகிறான். அடிக்கடி வருகிறது. பலவித உடல் பரிசோதனைகளில் கோளாறு எதுவும் கண்டுபிடிக்க முடியவில்லை. எங்கு, எந்தவித சிகிச்சை பயனளிக்கும் என்று விவரம் தெரிவிப்பவர்களுக்கு நன்றி.

– எஸ். மீனாக்ஷி,
A-45, சத்யவாணிமுத்து நகர்,
மந்தைவெளி, சென்னை – 600 028.

●● மெஸ்லியர் பாதிரியார் எழுதிய ''நான் ஏன் நாத்திகனானேன்?'' ரூஸோ எழுதிய ''சமுதாய ஒப்பந்தம்'' ஆகிய இரு நூல்கள் தேவை. விலை விவரம் தெரிவிக்கவும்.

– கோ. வீரராகவன்,
புதுக்கோட்டை சாலை,
அறந்தாங்கி – 614 616.

●● பஞ்சாயதன பூஜைக்கு சாலிகிராமம் தேவை. உதவக்கூடியவர்கள் தொடர்பு கொள்ள முகவரி :

– என். ராமசுப்பிரமணியன்,
48, லோகையா காலனி,
5வது குறுக்குத் தெரு,
சாலிக்கிராமம், சென்னை – 600 093.

●● தி.நகரில், பி.காம்., பகுதி நேரம் வீட்டிற்கு வந்து கற்றுத் தர ஆசிரியர் தேவை. எதிர்பார்க்கும் சம்பளம் என்ன என்ற தகவலுடன் தொடர்பு கொள்ளவும்.

– வி. வி. மோகன்,
308, செம்பியம் சாலை,
சென்னை – 600 066.

●● இந்தியா டுடே தமிழ் பதிப்பின் முதல் பிரதி தேவை.

– ஆர். பாஸ்கரன்,
13.E.1, சிவக் கொல்லை,
நைனாங்குளம் – 614 602.

●● குழந்தைகளுக்கான சமூக சேவையில் ஆர்வமுள்ள இளைஞர்கள், அல்லது பணி ஓய்வு பெற்றவர்கள் தொடர்பு கொள்ளவும். சிறிதளவு ஊதியம் உண்டு.

– அனைத்து நாட்டு குழந்தைகள் நல்வாழ்வு திருவனம்,
15, சிவன் கோவில் வடக்கு ரத வீதி,
பாளையங்கோட்டை – 627 002.

●● சென்னையிலிருந்து நெய்வேலிக்கு மாற்றலாகி 19.7.93 அன்று லாரியில் சாமான்களுடன் செல்கையில், செங்கல்பட்டுக்கும் திண்டிவனத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் ஒரு மூட்டை விழுந்து விட்டதைக் கவனிக்காமலிருந்து விட்டோம். பட்டுப் புடவையும் பெட்ஷீட்டும் சுற்றிய அந்த மூட்டையில் பத்து சுவாமி படங்களும் எங்கள் பாட்டனார் படங்களும் உள்ளன. கண்டெடுத்தவர் லாரியில் To pay போட்டு பின்வரும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கக் கோருகிறேன்.

– எம்.எஸ். கைலாசம்,
D 27, பெரியார் சாலை,
பிளாக் 9, நெய்வேலி – 607 801.

●● 'கருணாகரன் நினைவு திருக்குறள் நூலகம்' ஆதரவில் திருக்குறள் காட்சியகம் நிறுவப்பட்டுள்ளது. 400 தலைப்புகளில் திருக்குறள் தொடர்புடைய நூல்கள் பார்வைக்கு உள்ளன. வருகை தரவும் மேலும் நூல்கள் அன்பளிப்பாக வழங்கவும் கோருகிறேன்.

– திருக்குறள் க. பாஸ்கரன்,
X 35, மூன்றாம் முதன்மைச் சாலை,
அண்ணா நகர், சென்னை – 600 040.

●● சொந்த வீட்டில் 2-3 வயதுக் குழந்தைகளுக்குக் (Play home) காப்பகம் ஆரம்பித்து நடத்தச் சட்ட திட்டங்கள், விதிமுறைகள் ஏதும் இருப்பின் அறிந்து கொள்ள விருப்பம்.

– ரமா ரகுநாத்,
26 A, சுந்தரதாஸ் குளத் தெரு,
திருச்சி – 620 008.

●● M.LISc. Courseக்குத் தொடர்பான புத்தகங்கள் மற்றும் நோட்ஸ் தேவை. தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

– வி. ரமேஷ்,
8, அக்ரஹாரம் தெரு,
திருத்தங்கல் – 626 130.

(பாலம் மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி காரியாலயம் பொறுப்பேற்க இயலாது.)

ஸ்ரீ அம்பிகையின் பேரருளைப் பெற

லிப்கோ பெருமையுடன் ஸமர்ப்பிக்கும்

அபயாம்பிகை பட்டர் அருளிய




# அபயாம்பிகை சதகம்

(அபயாம்பிகை தரிசனம்)

விளக்கவுரை:

இலக்கியமணி மாயூரம் V. தண்டபாணி

152 பக்கங்கள் ரூ. 8

தபாலில் ரூ. 15

## லிப்கோ வெளியீடுகளில் மற்றும் சில :

| | | |
|---|---|---|
| 1. | அபிராமி அந்தாதி - மூலமும், உரையும் | ரூ. 4.00 |
| 2. | ஸ்ரீ ஸௌந்தர்யலஹரீ - மூலமும், உரையும் | ரூ. 5.00 |
| 3. | ஸகல காரிய ஸித்தியும் ஸ்ரீ தேவீ பாகவதமும் | ரூ. 10.00 |
| 4. | ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் (தமிழ்) | ரூ. 2.50 |
| 5. | ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் (ஸம்ஸ்க்ருதம்) | ரூ. 4.00 |
| 6. | ஸ்ரீ துர்கா ஸஹஸ்ரநாமம் (தமிழ்) | ரூ. 2.50 |
| 7. | ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரநாமம் (தமிழ்) | ரூ. 2.50 |
| 8. | ஸ்ரீ ஸரஸ்வதீ ஸஹஸ்ரநாமம் (தமிழ்) | ரூ. 2.50 |
| 9. | ஸுந்தர காண்டம் நவரத்ந மந்த்ர மாலா | ரூ. 5.00 |

உங்களூர் புத்தகக் கடையில் கேளுங்கள்.

லிப்கோவின் இலவச முழு விலைப் பட்டியலுக்கு எழுதுக.

## தி லிட்டில் ப்ளவர் கம்பெனி

ரங்கநாதன் தெரு, தி. நகர், சென்னை - 600 017.

(போன் : 441538)

லிப்கோவின் ஷோ ரூமிற்கு

(லிப்கோ அஸோஷியேட்ஸ்) விஜயம் செய்யுங்கள்.

★ 65 - ஆம் ஆண்டு பொன்னான ஸேவை!

**அதிரடித் திட்டம், சரிதான்; ஆனால் பள்ளி ஆசிரியர்கள் சங்கம், கோரிக்கைகளை முன் வைத்து, அவை கவனிக்கப் படாததால் வேலை நிறுத்தம், போராட்டம் என்று ஈடுபட்டு வரும் சூழ்நிலையில் அரசின் திட்டம் எப்படி நிறைவேறும்? திட்டம் நிறைவேறினாலும் மாணவர்களின் தரம் எவ்வாறு இருக்கும்?**

# கல்வித்துறையின் அதிரடித் திட்டம்!

இலவசக் கல்வி அளிக்கும் மாநிலத்தில் ஒரு மாணவன் கல்வி, உணவு, உடை, பாட நூல்கள், பல்பொடி, செருப்பு என்று சகலமும் இலவசமாகப் பெற்று ஒரே வகுப்பில் ஓராண்டுக்கு மேல் உட்கார்ந்திருப்பது என்பது கல்வித்துறைக்கு எப்பேர்ப்பட்ட களமை?

இந்தனை நாளில்லாமல் இப்போது தான் தமிழகக் கல்வித்துறைக்கு இது உறைத்திருக்கிறது!

இந்த ஆண்டைத் தோல்வி இல்லாத ஆண்டாக அறிவித்திருக்கிறார்கள். அதாவது எந்த வகுப்பிலும் எந்த மாணவனும் பெயில் ஆகக்கூடாது.

இதை எப்படி சாதிக்கப் போகிறார்கள்? மாநிலம் முழுதும், அனைத்துப் பள்ளிகளிலும் அன்றன்று முடிக்கப்பட வேண்டிய பாடத்திட்டங்களை முன்னதாக வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். ஆசிரியர்கள், எப்படிப் பாடம் நடத்த வேண்டும் என்பதைப் பயிற்சி நூல்களாக அச்சடித்துக் கொடுத்திருக்கிறார்கள். ஆசிரியர்கள் பள்ளிக்கு வராத நாட்களில் கூட பெற்றோர் ஆசிரியர் கழக நிதி வசதியுடன் உள்ளூரில் படித்தவர்கள் உதவியுடன் திட்டப்படி பாடங்களை நடத்தி முடிக்க தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுரை வழங்கப் பட்டிருக்கிறது!

மாணவர்களின் தேர்ச்சி, ஆண்டுத் தேர்வு மதிப்பெண்களைக் கொண்டு மட்டும் நிர்ணயிக்கப்படாமல், வருடம் முழுக்க நடத்தப் போகிற வாராந்திர, மாதாந்திர, காலாண்டு, அரையாண்டு, முக்காலாண்டுத் தேர்வுகளை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படவுள்ளது.

பிள்ளைகளுக்கு பெண்டு வாங்கும் வேலை. அன்றைய பாடங்களை அன்றே படித்து விடுவது மட்டுமல்லாமல் ஒவ்வொரு வாரமும் தேர்வு! 'ஓபி' அடிக்க வாய்ப்பே இல்லை. கட் அடித்தால் ஆண்டு இறுதியில் மார்க் அம்பேல்!

அரசின் இந்த அதிரடி நடவடிக்கை குறித்துச் சம்பந்தப்பட்டவர்கள் என்ன நினைக்கிறார்கள்.

பிரபல கல்வியாளரும் முன்னாள் கல்வித்துறை இயக்குநருமான கே. வேங்கடசுப்பிரமணியனுக்கு இந்நடவடிக்கை சம்மதமே.

''ஆந்திராவில் முன்பு இத்திட்டம் இருந்தது. 1 முதல் 4 ஆம் வகுப்புவரை முழுத்தேர்ச்சித் திட்டம் அமுலாய் இருந்தது. அதாவது பையன் படித்தாலும் படிக்காவிட்டாலும், பரீட்சை எழுதினாலும் எழுதாவிட்டாலும் 'தூக்கிப் போடுகிற' வழக்கம். இதனால் என்ன ஆயிற்று? ஐந்தாம் வகுப்புக்கு வருகிறவனுக்கு அ. ஆ கூட சரிவரத் தெரியாத நிலைமை.

''தற்போது, தமிழக அரசின் இத்திட்டம் இப்படியான



● கே. வேங்கடசுப்பிரமணியன்



* வசந்தா சீனிவாசன்

கேவல நிலைக்குப் போகாத பட்சத்தில் இதனை வரவேற்கலாம். சில தனியார் பள்ளிகளில் ஏற்கெனவே தினந்தோறும் தேர்வுகள் நடந்த படிதான் இருக்கின்றன. அமெரிக்காவில் தினத் தேர்வுகள் மட்டு மின்றி அறிவிக்கப் படாத திடீர்த் தேர்வு களும் கூட நடக்கின்றன.

''தினம் தினம் நாலு காட்சி, ஐந்து காட்சி என சினிமா ஆக்கிரமிக்கும் இவ் வேளையில் அரசின் இத்திட்டம், மாணவர் களுக்குப் படிப்பின் மீது கொஞ்சம் பயமும், அக்கறையும் ஏற்படுத்தும் என்றே நம்பு கிறேன்!''

ஒன்பதாம் வகுப்பு மாணவி பத்மா வதி, ''இப்படி வாரம் தோறும் பரீட்சை வைப்பதால் முழுப்பரீட்சை பயம் இல்லை. சுமை வெகுவாகக் குறையும். மேலும் தேர்வு பழகிப் போய்விடுவதால் அதை ஒரு பூதமாக நினைக்கிற மனப் போக்கு மாறிவிடும். முக்கியமான விஷயம் - படிப்பிலிருந்து கவனம் சிதறாமல் இருக் கும். மெக்கானிக்கலாகப் படிப்பு, படிப்பு, தேர்வு, படிப்பு என்று இருப்பது கொஞ்சம் கஷ்டம்தான் என்றாலும் முன்னேற்றத்துக் காக இதைப் பொறுத்துக் கொள்ள வேண் டியதுதான்'' என்கிறாள்.

இதற்கு மறுபுறமாக, ''கல்வி, அறிவு வளர்ச்சிக்கு என்பது போய், பரீட்சைக்கு மட்டும் என்று Exam oriented ஆகிவிட்டால் ஒழுங்காகப் படிக்கிற மாணவர்களுக்குக் கூட ஆர்வக் குறைவு ஏற்படுகிற வாய்ப்பு இருக்கிறது'' என்கிறார் பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு கல்வியாளர்.

**சை**தை கணபதி தேசிய நடுநிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியை வசந்தா சீனிவாசன் சொல்கிறார் : ''இத்திட்டம் ஒரு வரப்பிரசாதம். ஆசிரியர்களை வேலை வாங்க, அரசுப் பக்கம் கை காட்டி விடலாம். எல்லாருக்கும் வெற்றி என்பதை எவரும் ஏற்க மறுக்கமாட்டார்கள். ஆனால் இந்த வெற்றியை எப்படிப் பெறுகிறார்கள் என்பதில்தான் திட்டத்தின் வெற்றி அடங்கி இருக்கிறது.

ஆசிரியர்களுக்குப் பயிற்சி, வாரந் தோறும் பரீட்சை என்பதெல்லாம் வர வேற்கக் கூடிய அம்சம்தான். அதுவும் கேள் வித் தாள்களைக் கூட அரசே தயாரித்து அனுப்புகிறது. வெற்றிக்கான முழு வாய்ப்பு இது!

''வாராந்திரத் தேர்வுகளைக் கடனே என்று நடத்தாமல் முழு ஈடுபாட்டுடன் நடத்தி, மதிப்பீடு செய்து, மாணவர் களை ஊக்குவித்து, உடனுக்குடன் மேலி டத்துக்கு ரிப்போர்ட் செய்து, பெற்றோர் களுடன் கலந்து பேசி... கடினமான பணிதான். ஆனால் இதற்குப் பின்னால் கிடைக்கக் கூடிய வெற்றிக்காக செய்தே தீர வேண் டும்.




* பத்மாவதி

''அரசு அனுப் பும் கேள்வித்தாள் கள் ஏனோ தானோ வென்று இல்லாமல் தரமாக இருக்க வேண்டும். இதற்கு, தரமான 'வினா வங்கி' அமைத்து, சுதந்திரமாகச் செயல்படும் மேற்பார்வைக் குழுவுடன் இதனைத் தொடர்ந்தால் வரும் ஆண்டுகளிலும் இத் திட்டத்தைப் பயனுள்ள வகையில் தொடர லாம்!''

சந்திப்பு : பா. ராகவன்

புகைப்படங்கள் : கோபிநாத்.


ம-மறியல்! அப்படீன்னா, கைது பண்ணணும்னு அர்த்தம்... போ - போராட்டம்! அப்படீன்னா, ஜெயில்ல தள்ளணும்னு அர்த்தம்... உ - உண்ணாவிரதம்... அப்படீன்னா, அடிச்சு நொறுக்கணும்னு அர்த்தம்...
அ-அணில்
ஆ-ஆடு
ம-மறியல்
போ-போராட்டம்
உ-உண்ணாவிரதம்
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள்
ஸ்ட்ரைக் வாபஸ்
அரசின் உறுதி மொழிகள்
போ, ரைட்!
புல் ஸ்பீடுல போகச் சொல்றாருப்பா...
முறைப்படி வம்பு பண்ணினா, ப்ரேக்கை ஒரே அழுத்தா அழுத்திட்டுப் போகிறேன்!...
கெடுபிடி
பழனி, ராணிப்பேட்டை ரெண்டிலேயும் இமாலய வெற்றி! ஜெய விழா கொண்டாடுக!
அ.தி.மு.க. எதிர்ப்பு வோட்டுகள்



# கல்கி

1993
அக்டோபர் 10
மலர் : 52
இதழ் : 11
ஸ்ரீமுக
புரட்டாசி 24



தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. - பாரதியார்.

# மகாராஷ்டிர பூகம்பமும் மானங்கெட்ட அரசியலும்!

உயிரிழந்தவர்களின் உடல்கள் முடிவில்லாத ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுகின்றன; கை, காலிழந்து காயமுற்றவர்களின் பரிதாப ஓலம் விண்ணை நிறைக்கிறது; திரும்பின பக்கமெல்லாம் இடிபாடுகளிடையே உறவும் வாழ்வும் இழந்த மக்கள் திக்பிரமை பிடித்தது போல் உட்கார்ந்திருக்கிறார்கள். இதுதான் மகாராஷ்டிரா பூகம்பத்தின் விளைவான இன்றைய காட்சி.

கடந்த ஐம்பது ஆண்டுகளில் இதுபோன்ற கொடுமை நிகழ்ந்ததில்லை. காஷ்மீரம் முதல் கன்யாகுமரி வரை மக்களின் உள்ளங்கள் அனுதாபத்தில் நெகிழ்ந்து போயிருக்கின்றன. அது மட்டும் போதாது. துயருற்றிருக்கும் மக்களுக்குப் பணமாகவும் பொருளாகவும் நம்மால் இயன்ற அளவில் உதவிபுரிய வேண்டும். வழக்கமான மெத்தனம் காட்டிய தமிழக அரசை முந்திக் கொண்டு, தி.மு.க. அறிவித்துள்ள நன்கொடையை முன்னுதாரணமாகப் பின்பற்றி ஒவ்வொரு தமிழனும் உதவ வேண்டும். பிரதமர் அறிவித்துள்ள இரண்டு கோடி ரூபாய் மலையத்தனை துயருக்குக் கடுகத்தனை உதவியே.

பொருளும் பணமும் தருவதை விட, சேவை மனப்பான்மையுடன் நேரில் சென்று துயர் துடைப்புப் பணியில் ஈடுபடுவோரைக் கையெடுத்துக் கும்பிடலாம். அத்தகைய ஒரு தமிழர் படை உடனடியாக மகாராஷ்டிரம் செல்ல வேண்டும். 'அண்டை மாநிலச் சகோதரர்களின் துயரில் தமிழகம் முழுமையாகப் பங்கேற்றதுடன், துயர் துடைப்புப் பணிகளில் பல்வேறு விதமாகவும் முழு மூச்சுடன் இறங்கியது' என்று நாளை பேசப்படுமளவில், தமிழகத் தலைவர்கள் இவ்விஷயத்தில் இன்று கைகோத்துத் திட்டமிட்டுச் செயல்படலாம். இத்தகைய விவேகம் செயல்படுமா என்பது வேறு விஷயம். மக்களின் விருப்பத்தை முன்வைப்பதில் தவறில்லை. இவ்வாறு நடந்தால் ஒரு தீமையிலிருந்து நன்மையும் பிறந்ததாகும்.

இயற்கையின் சீற்றத்தை நாட்டில் நிலவும் அதர்மப் போக்குடன் ஒப்பிட்டால், அதனை 'மூட நம்பிக்கை' என்று பகுத்தறிவாளர்கள் நிச்சயம் எள்ளி நகையாடுவார்கள். ஆனால் ஆழ்ந்து சிந்தித்தால் இது மூட நம்பிக்கையல்ல என்றும் காரண காரியங்களோடு இணைந்த பின்விளைவே என்றும் தெரிய வரும். எப்படி என்று பார்ப்போம் :

பூகம்பத்தை நம்மால் தடுக்க முடியாது. ஆனால் பூகம்பத்தினால் மக்களுக்கு நேரக்கூடிய துன்பத்தை நமது புத்திசாலித்தனத்தினால் நிச்சயம் குறைக்க முடியும். அதற்கான விஞ்ஞான சாதனங்கள் உள்ளன. விஞ்ஞானிகளும் இருக்கிறார்கள். மகாராஷ்டிரத்தின் இந்தப் பகுதி, பூகம்பம் ஏற்படுவதற்கான வாய்ப்புடையது அல்ல என்று புவியியல் அறிஞர்கள் கூறியுள்ளனர். ஆனபோதிலும் அங்கேதான் நிலநடுக்கம் ஏற்பட்டு, பத்தாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இறந்து போயிருக்கிறார்கள்! இந்த பூகம்பமும் திடீரென்று தோன்றி விடவில்லை. கடந்த ஓராண்டு காலமாகவே அப்பகுதியில் இலேசான நிலநடுக்கம் விட்டு விட்டுத் தோன்றியபடி இருந்திருக்கிறது. அதாவது, இயற்கை ஒரு முன்னெச்சரிக்கையை அனுப்பியிருக்கிறது. பி.ஜே.பி. தலைவர் கோபிநாத் முண்டே இது குறித்து சட்டமன்றத்தில் பேசி, அரசின் கவனத்தை ஈர்த்தும் இருக்கிறார். உள்ளூர் பத்திரிகைகள் நிறையவே எழுதி, கவலை தெரிவித்துள்ளன. அப்படியிருந்தும் மாநில அரசு இது பற்றி சிந்திக்கவில்லை; முன்னேற்பாடான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கவில்லை. அப்பாவி மக்களை எச்சரிக்கவும் இல்லை.

இவையெல்லாம் எதை உணர்த்துகின்றன? மெத்தனப் போக்கைத்தான். மெத்தனம் எதனால் உருவாகிறது? ஒட்டுமொத்தமாக நாட்டில் நிலவும் அதர்மப் போக்கின் விளைவாகத்தான். உச்சி முதல் உள்ளங்கால் வரை அரசியல், அதர்மமாக மாறி விட்ட பிறகு, யாருக்குத்தான் செவ்வனே கடமையாற்றும் எண்ணம் ஏற்படும்? அலட்சியம், அசிரத்தை, 'நம்ம பாக்கெட் ரொம்புதா பாரு' என்னும் மனோபாவம். ஆக, அதர்மப் போக்குக்கும் இயற்கையின் சீற்றத்தால் மக்களுக்கு ஏற்படும் பேரிழப்பு, பெருந்துன்பத்துக்கும் சம்பந்தமேயில்லை என்று ஒதுக்கி விட முடியாது.

நாம் ஒவ்வொருவரும் திருந்த வேண்டும். அப்படி திருந்துவதற்கு முதல் படியாக, முதல் அடையாளமாக நம்மால் இயன்ற அளவில் மகாராஷ்டிரா, கர்நாடக மக்களின் துயரில் பங்குகொண்டு, துன்பம் துடைக்க முன்வர வேண்டும்.

# ஒரு கலக்கு கலக்கி விட்டீர் போங்கள்!

◆ தலையங்கம் எழுதிய அந்தக் கைகளைக் கண்ணில் ஒற்றிக் கொள்ள வேண்டும் போலிருக்கிறது. "லஞ்ச ஊழல் என்பது ஒரு சர்வதேசச் சமாசாரம்" என்று ஊழலுக்குக் கால்கோள் விழா நடத்திய இந்திரா முதல் இன்றைய இன்பசாகரன் வரை ஒரு தீர்க்கமான, அதே சமயம் ரத்தினச் சுருக்கமாக ஊழலாளிகளை வெளிக்காட்டிய தலையங்கம் நெஞ்சை கனக்கச் செய்து விட்டது. "மன்னன் எவ்வழியோ மக்களும் அவ்வழியே" என்பது போல் நாடு இருக்கும் போது, தலைவர்களின் தார்மீகக் கடமை உணரப்படுமா....?

சென்னை - 24, இளம்பிறை பாரூக்.

◆ கல்கி 19.9.93 இதழில் டி. சுப்பிரமணி குறிப்பிட்டிருப்பது போல அரக்கோணம் தமிழ்நாடு எஃகு ஆலை, கடந்த சில ஆண்டுகளாகவே லாபகரமாக இயங்கி வருகிறது என்றாலும், எமது நிறுவனம் சங்கங்களுக்கும் காலனிகளுக்கும் நிலம் வழங்கவில்லை.

அரக்கோணம், டி.எம். கோபிநாத்,
மக்கள் தொடர்பு அதிகாரி.

◆ கும்பகோணக்காரர்களுக்கு ரா.கி. ரங்கராஜன் கேட்டிருக்கும் கேள்விகள் அவர் மனத்தில் பல விஷயங்கள் பசுமரத்தாணி போல் இன்று வரை பதிந்திருப்பதை உணர்த்தி ஆச்சரியப்பட வைத்தது. பிழைப்புத் தேடிச் சென்ற ஊர் எதுவாக இருந்தாலும் பிறந்த மண்ணை மறக்க முடியுமா?

தொழுகியப்பட்டி, ஆர். முத்துக்குமரன்.

◆ ரா.கி. ரங்கராஜனின் பத்தொன்பது கேள்விகளில் 1, 5, 9, 12, 13, 14, 16, 19 ஆகிய எட்டு கேள்விகளுக்கு 'ஆம்' எனவும், 2, 3, 4, 6, 7, 8, 10, 11, 15, 17, 18 ஆகிய பதினோரு கேள்விகளுக்கு 'இல்லை' எனவும் பதில் கூறலாம்!

கும்பகோணம், கே.என். பாலகிருஷ்ணன்.

◆ எம்.எல்.ஏ. ராமநாதனிடம் பேட்டி எடுக்காதது கூட அ.தி.மு.க. தொண்டர்களுக்கு வருத்தமில்லை.... ஆனால் தி.மு.க.வில் ஒரு குருக்களைப் பிடித்து, 'மேடைப் பேச்சாளர்' என்று அறிமுகப்படுத்தி, கும்பகோணம் அ.தி.மு.க.வினரை ஒரு கலக்கு கலக்கி விட்டீர்கள் போங்கள்!

கும்பகோணம், ஸ்நேகா.

*(கும்பகோணம் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. ராமநாதனை முதன் முதலாகப் பேட்டி கண்டு வெளியிட்டது கல்கிதான் என்பதை ஸ்நேகாவின் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறோம். -ஆர்.)*

◆ கும்பகோணம் சாரங்கபாணிக் கோவிலின் சித்திரைத் தேர் 1984 - ம் ஆண்டுக்குப் பின் ஓடவில்லை என்ற செய்தி அதிர்ச்சி தருகிறது! கோவில் திவாரண நிதி என்ற பெயரில் தமிழக முதல்வரால் வசூலிக்கப்பட்ட நிதியிலிருந்து தேரோட்டம் நடத்த உதவி செய்யக் கூடாதா?

சேலம் - 6, வரத. சண்முக சுந்தர வடிவேலு.

◆ முதல் பக்கத்தில் ஆரம்பித்து, 64 ஆம் பக்கம் வரை கும்பகோணம் பற்றிய செய்திகள் கலவையாக இருந்த அதே சமயத்தில், உமது 'கும்பகோண வேலை'யையும் கண்டிக்காமலிருக்க முடியாது! சிறப்பிதழ் என்று சொல்லிக் கொண்டு அதே 64 பக்கம் தானா?

அந்தியூர், மு. தவசியப்பன்.

◆ ஆயிரக்கணக்கில் ஃபீஸ் கொடுக்க முன் வந்தும், நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்றும், பள்ளிகளில் இடம் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கும் இக்காலத்தில் நுழைவுத் தேர்வில் தோல்வி அடைந்தாலும், அந்த சப்ஜெக்டை நன்கு கற்றுத் தரும் 'வள்ளலார் பள்ளி' பற்றிய செய்தியை படித்ததும் இப்படியும் ஒரு பள்ளி உள்ளதா என்று வியந்து போனேன். காசுக்காக அலையும் மற்ற பள்ளிகளுக்கு இப்பள்ளி ஒரு நல்ல எடுத்துக் காட்டாக இருக்கும்.

சிவகங்கை, சி. ஸ்ரீகாந்த்.

◆ கல்கி கும்பகோணம் சிறப்பிதழில் தாராசுரம் மூதேவி கோவில் பற்றி நான் அனுப்பிய செய்தி செவி வழி கேட்ட செய்தியாகும். ஆசிரியர் குழுவை அலைய வைக்கும் நோக்கத்தில் எழுதியதல்ல. தவறுக்கு வருந்துகிறேன்.

மயிலாடுதுறை, ஆறுபாதி புகழேந்தி.

◆ உற்றார் உறவினர்கள், நண்பர்கள் கூட இறப்பு வீட்டிற்கு வராத இந்தக் காலத்தில் இப்படி ஓர் மனிதரா என்று கும்பகோணம் அப்பு என்னை ஆச்சர்யப்படுத்தி விட்டார். அப்பு உண்மையில் வித்தியாசமானவர்தான்!

தென்காசி, எஸ். ஜெகன்.

◆ ஸ்ட்ராங் காப்பியை உள்ளே இறக்கிவிட்டுத் தான் பேசுகிறீர்கள் என்பது நன்றாகவே தெரிகிறது. ஆனாலும் எங்களை ஏக்கப்பட வைத்து விட்டு, நீர் மட்டும் பஞ்சாமி அய்யர் ஹோட்டலில் காப்பி குடித்தது சரியா?

சிதம்பரம், என்.எம். கிருஷ்ணா.


◆ நாற்றுக்கள் சிறுகதை படித்தேன். கணவனால் கைவிடப்பட்ட பூவாத்தாளுக்கு தக்க சமயத்தில் நிலத்தைக் கொடுத்து உதவிய நாய்க்கர் போன்ற சில நல்ல மனிதாபிமானமுள்ள மனிதர்கள் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

மணியக்காரன்பாளையம், ஏ.ஜி. கல்யாணசுந்தரம்.

◆ தன்னுடைய மகளுக்கு தான் படும் கடன்களும், கஷ்டங்களும் தெரியக்கூடாது என்பதற்காக நடிக்கும் ஒரு தாயின் உணர்ச்சியை அழகாகப் படம்பிடித்துக் காட்டியது தமிழினியனின் 'சிறகடிக்கும் பருவத்தில்' என்ற சிறுகதை.

காட்பாடி, ஏ.எஸ். விஸ்வநாதன்.

**வட்டமேஜை**



# நிழல்

**எஸ். ஜி. பாலசுப்பிரமணியன்**

"**நா** என்ன ஐஸ்வர்யமா கேக்கறேன்...? கல்யாணமாகி, நாலு வருஷத்துல, எதுமேலயாவது ஆசைப்பட்டு, எனக்கு வாங்கித் தந்தாத்தான் ஆச்சுன்னு அடம் புடிச் சுருக்கேனா? சாதாரண நானூறு ரூபா பொடவை...! ஐயா, ஏதோ இந்த பாழாப் போன மனசு ஆசை வச்சுடுத்து...! முடியும், முடியா துன்னு பளிச்சுன்னு சொல்லிட வேண்டியதுதானே...! முடியா துன்னு ஒரே வார்த்தையில சொல் லிட்டா, எத்தனை கஷ்டப்பட்டா வது மனசை அடக்கிண்டுடுவேனே! அதென்ன, ரொட்டித் துண்டை நாய் வாய்க்குக் கிட்டே கொண்டு வந் துட்டு, சட்டுனு கைய மேல இழுத் துக்கறாப்பல, 'இந்த மாசம் வாங்கித் தரேன்', 'அடுத்த மாசம் வாங்கித் தரேன்'னு ஒரு சால்ஜாப்பு...! ஒவ்வொரு தடவையும் அந்தப் பொடவைக் கடையைத் தாண்டிப் போகும் போது, 'அடுத்த மாசம் வாங்கிட லாம்'னு எனக்குள்ளயே நா கோட்டை கட்டி, அது இல்லேன்னு ஆனவுடன் என்னை நானே தேத்திண்டு.... ஒரு தடவ, ரெண்டு தடவன்னா சரி...! போன அஞ்சு மாசமா இப்படியே போனா, யாரால தாங்கிக்க முடியும்...?"

**மை**திலி கத்தியதில் நிச்சயமாய் நியா யம் இருக்கிறது. இந்தப் புடைவை விஷய மாய், இது எங்களுக்குள் நடக்கும் இரண்டா வது சண்டை... போன ஐந்து மாதமாய், நானூறு ரூபாய் கூட என்னால், என் பிரிய மான மனைவிக்காகச் செலவழிக்க முடிய வில்லை....

மாதம் இரண்டாயிரத்து இருநூறு சம்பளத்தில், கணையாய் ஆயிரம் ரூபாயை ஊரில் அம்மா, அப்பாவுக்கு அனுப்பி விட்டு மீதிப் பணத்தில், முப்பது நாட்களை ஓட்டுவதே பெரும்பாடாய் இருக்க, நானூறு ரூபாய்க்கு நான் எங்கே போவேன்?

மைதிலிக்கு இது நன்றாகத் தெரியும். நிஜமாகவே, அவள் ஒரு நல்ல பைனான்ஸ் மினிஸ்டர். ஆயிரத்து இருநூறு ரூபாயில், குழந்தையின் பால் பவுடரிலிருந்து, என் பாக்கெட் மணி வரை எப்படிச் சமாளிக்கிறாளோ, தெரியவில்லை! ஆனாலும் பல சமயங்களில், இருபத்தைந்து தேதிக்கு மேல் டீ குடிக்கக் கூட காசு இல்லாமல் நான் ஆபீஸிற்கு வந்ததுண்டு.

இப்படி என்னதான் கஷ்டங்கள் இருந்த போதும், மைதிலிக்கு நிச்சயமாய் நான் அந்தப் புடைவையை வாங்கித் தர வேண்டும். 'சில தியாகங்கள் இலட்சியங்களை அடையும் வேகத்தை அதிகப்படுத்தும்' என்று எந்தப் புத்தகத்திலோ படித்தது நினைவுக்கு வந்தது - ஆனால் எனக்கு எதைத் தியாகம் செய்வது என்றே தெரியவில்லை... எல் லாமே அடிப்படைத் தேவைகள்!

எந்தவொரு உபயோகமான முடிவுக்கும் வரமுடியாமல், இப்படி நீளநீளமாய் யோசிப்பது இலேசான தலைவலியைத் தந்து, எனது கழிவிரக்கத்தை மேலும் அதிகப்படுத்தியது, நான் பேனாவை மூடிவைத்து விட்டு, தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்தேன்.

வீட்டில் அன்று முழுவதும் மைதிலி உம்மென்று இருந்தாலும் அடுத்த நாள் மிகவும் சகஜமாகிப் போனாள்.

அந்த மாதம் இருபத்தி எட்டாம் தேதியே சம்பளம் கொடுக்கப்பட்டு விட, நான் பால்கோவா வாங்கிக் கொண்டு (சம்பள நாளன்று மட்டும் இந்தப் பத்து ரூபாய் பால் கோவா மைதிலியால் அனுமதிக்கப்பட்ட விஷயம்) போய் அதையும் சம்பளக் கவரையும் அவளிடம் கொடுத்தேன்.

வழக்கம் போல் அதை வாங்கி, பூஜை அலமாரியில் வைத்து நமஸ்கரித்து எழுந்து, ஒரு முறை சரி பார்த்து, பீரோவில் வைத்தாள்.

நிதானமாய் இரவு சாப்பிட்டு விட்டு, குழந்தையைத் தூங்கச் செய்து விட்டு, இருவரும் அடுத்த மாத பட்ஜெட் போட ஆரம்பித்தோம்....!



''இந்த சீன்ல கதாநாயகி பாடிக்கிட்டே இந்தப் பக்கமா வர்றா! நீங்க என்ன செய்யணும் தெரியுமா?''
''காதைப் பொத்திக்கிட்டு ஓடணுமா?''
- பர்வதவர்த்தினி.

எவ்வளவு தான் யோசித்து, யோசித்துப் போட்டாலும், ஐம்பது ரூபாய் துண்டு விழுவதைத் தவிர்க்கவே முடியவில்லை...!

''ஐம்பது ரூபா தானே? சமாளிக்கலாம்'' என்றாள்.

நான் மெதுவான குரலில், ''இந்த மாசமும் 'ஸாரி' மைதிலி. என்னால உனக்கு அந்தப் புடைவை வாங்கித் தர முடியலை!'' என்றேன்.

பால்கோவா பொட்டலத்தைப் பிரித்துக் கொண்டே, ''அதனால என்னப்பா, பரவாயில்லை!'' என்றாள்.

''இருந்தாலும் உனக்கு ஏமாத்தமா இருக்கில்லே? வெளில சொல்ல மாட்டேங்கற - ரொம்ப ஸாரிப்பா...!''

''ச்....! என்னப்பா இது? எனக்கு உன் நெலமையும், நம்ம வீட்டு நெலமையும் தெரியாதா என்ன? நீ என்ன கைல காசு வச்சுண்டா இல்லேங்கற? எனக்குப் புரியறதுப்பா!''

நான் சற்று இடை வெளி விட்டு மிகவும் குழைந்த குரலில், ''அப்புறம் ஏண்டா கண்ணம்மா அடிக்கடி சண்டை போடற? நீ அப்படி பேசறப்ப வெல்லாம் எம் மனசு எவ்ளோ கஷ்டப்படறது தெரியுமா?''

மைதிலி நிதானமாய் ஒருமுறை என்னைப் பார்த்தாள். மெதுவாக, ''இனிமே கத்தாதே, புடைவை வாங்கித் தான்னு சண்டை போடாதேங்கறியா?''


நான் இதற்குப் பதில் சொல்லாமல் அமர்ந்திருக்க, அவள் பொட்டலத்திலிருந்து சிறிது பால்கோவா எடுத்துக் கொண்டு என்னை நெருங்கி வந்தாள்.

பால்கோவாவை எனக்கு ஊட்டி விட்டு விட்டு, என் உதட்டில் அழுத்தமாய் ஒரு முறை முத்தமிட்டாள்.


என் தலையை ஒருமுறை கோதிக் கொடுத்து, என் கன்னங்களைத் தன்னிரு கைகளிலும் ஏந்திக் கொண்டு, லேசான அதிகாரம் தொனிக்கும் குரலில்,

''அப்படித்தான் கத்துவேன், திட்டுவேன், இனிமே இன்னினாலும் கிள்ளுவேன். எப்பவாவது போனாப் போறதுன்னு இப்படி ஒரு முத்தம் குடுப்பேன். எல்லாத்தையும் பேசாம வாங்கிக்கணும்...! புரியறதா?'' என்றாள்.

வாயில் பால்கோவாவோடும், உதட்டில் மைதிலி தந்த முத்தத்தோடும், நான் புரிகிறது என்பது போலத் தலையாட்டினேன்.



We have a soft corner for pensioners.
LTC Presents
Pensioners Benefit Scheme
Come and find the difference only LTC provides.
LTC accepts deposits for 12 months too!
(Pensioners include Senior Citizens, Ex-service Men, Widows, etc.)
LTC
Personalised service
Special benefits
P.G. Saranyan
Chairman
LAKSHMI TRADE CREDITS LTD.
624, Anna Salai MADRAS - 600 006. Ph: 8276646, 8270311
Branches
Madras City : Ambattur Ph: 681860; Anna Nagar Ph: 6212047; Chrompet Ph: 401267; K.K. Nagar Ph: 4833917; Madipakkam Ph: 2346586; Nanganallur Ph: 2348393/2346066; West Mambalam Ph: 4830150; Valasaravakkam Ph: 4828587
Coimbatore Ph: 43576; Karaikudi Ph: 2023; Madurai Ph: 30626; Tirunelveli Ph: 322073; Trichy Ph: 25323



# தியாக பூமி

## 11. 'எனை மணந்த மணவாளன்'


பிறகு கல்யாணம் எவ்விதமான தங்கு தடையாவது, சண்டை சச்சரவாவது இல்லாமல் நடந்தேறியது. சம்பந்திகள் என்ன என்று கேட்பதற்கு முன் என்னெயாகவே கொடுத்து விடும்படி சம்பு சாஸ்திரியின் உத்தரவு. ஆகவே, அவர்களுக்கு எவ்வித மனக்குறையும் ஏற்படவில்லை. உண்மையில், இந்தக் கல்யாணத்தில் ஆன வீண் செலவுகளைப் பற்றிச் சம்பந்தியம்மாளே புகார் சொல்லும்படியிருந்தது. ''அடாடா! இது என்ன ஊதாரித்தனம்! இப்படியா பணத்தை வாரி இறைப்பார்கள்? நாங்கள் சம்பந்திகள் வந்திருப்பது முப்பது பேர். இங்கே சாப்பாடு நடக்கிறது ஐந்நூறு பேருக்கு. வருகிறவாள், போகிறவாள் எல்லாரும் இப்படியா வாரிக் கொட்டிக் கொண்டு போக வேண்டும்?'' என்று தங்கம்மாள் வயிறு எரிந்தாள். இப்படிச் செலவாகிற பணமெல்லாம் மாட்டுப் பெண் மூலமாகத் தன் பிள்ளைக்கு வந்து சேர வேண்டிய பணம் என்ற ஞாபகமானது அந்த வயிற்றெரிச்சலை அதிகமாக்கியது.

கல்யாணம் அமர்க்களமாகத்தான் நடந்தது. இந்தக் கல்யாணத்தில் எப்போது பார்த்தாலும் அண்டா நிறையக் காப்பி தயாராயிருந்ததையும், நினைத்தவர்கள் நினைத்த போது காப்பி சாப்பிட்டுக் கொண்டிருந்ததையும் பற்றி அந்தப் பிரதேசத்தில் வெகு நாளைக்குச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அக்கிரகாரத்தில் முக்கால்வாசி வீடு

களில் ஆறு மாதத்துக்குக் காப்பிக்கு வேண்டிய சர்க்கரை, கல்கண்டு இந்தக் கல்யாணத்தில் சேர்ந்து விட்டது. குடியானத் தெரு ஜனங்களுக்கும் இந்தக் கல்யாணத்தில் குதூகலந்தான். நாலு நாளும் இராத்திரியில் குடி படைகளுக்குச் சாப்பாடு போட்டு விட வேண்டுமென்று சாஸ்திரி உத்தரவிட்டிருந்தார். இந்தக் கல்யாணச் சாப்பாட்டை உத்தேசித்து குடியானத் தெருவில் சில வீடுகளுக்கு வெளியூர்களிலிருந்து உறவு முறையார் கூட வந்திருந்தார்கள். குடிபடைகளுக்குச் சாப்பாடு போட்டு, வெற்றிலை பாக்கு வாங்கிக் கொடுப்பதில் புகாருக்கு இடமில்லாமல் முன்னின்று நடத்தி வைக்கும் பொறுப்பு நல்லானுக்கு ஏற்பட்டது. அவன் இது விஷயத்தில் கொஞ்சமும் பின்வாங்கவில்லை. சாதாரணமாய், சாஸ்திரியாரின் க்ஷேம லாபத்தில் அவன் ரொம்ப அக்கறையுள்ளவனாயிருந்தும், இந்தச் சமயத்தில், 'எங்கெங்கிருந்தோ முன்பின் தெரியாத ஐயமாரெல்லாம் வந்து சாப்பிட்டுட்டுப் போறாங்களே? வருஷமெல்லாம் உழைக்கும் குடியான ஜனங்களும்தான் சாப்பிடட்டுமே! இவங்களுக்கு எஜமானிடம் நன்றி விசுவாசமாவது இருக்கும்' என்று அவன் எண்ணி, மிகவும் தாராளமாகவே வந்தவர்களுக்கெல்லாம் வாரி விட்டுக் கொண்டிருந்தான்.

இந்த மாதிரியெல்லாம் செலவாவதைப் பற்றிச் சம்பந்தியம்மாளைக் காட்டிலும் பத்து மடங்கு வயிறெரிந்து கொண்டிருந்தார்கள், மங்களமும் அவள் தாயாரும். ஆனால், இந்தக் களேபரத்தில் அவர்களால் ஒன்றும் குறுக்கிட்டுச் சொல்ல முடியவில்லை. சொன்னாலும் தங்கள் பேச்சு ஏறாதென்று அவர்களுக்குத் தெரிந்திருந்தது. ஆகவே, தாயாரும் பெண்ணும்

அமரர் கல்கி



கூடிக் கூடிப் பேசிக் கொள்வதுடன் திருப்தி அடைய வேண்டியதாயிற்று. அவர்களுடன் சில சமயம் மங்களத்தின் தம்பி செவிட்டு வைத்தியும் சேர்ந்து கொண்டான். பாவம்! செவிட்டு வைத்திக்கு, சாவித்திரியைத் தனக்குக் கல்யாணம் செய்து கொடுப்பார்கள் என்ற ஓர் ஆசை மனத்திற்குள் இருந்து கொண்டிருந்தது. அது இப்போது நிராசையாய்ப் போயிற்று. ஊரில் சிலர் அவனை இது சம்பந்தமாகப் பரிகாசமும் செய்தார்கள். ஆகவே, ஏக்கமும் பொறாமையும் முகத்தில் பொங்கி வழிய, அவன் கல்யாண வீட்டில் உள்ளுக்கும் வாசலுக்கும் போய் வந்து கொண்டிருந்தான். அடிக்கடி மங்களம் இருக்குமிடத்துக்குப் போய், ''அக்கா! கல்யாண தட்சிணை ஆளுக்கு ஒரு ரூபாயாம்!'' என்றும், ''ராத்திரி முந்நூறு தேங்காய் கிடந்தது; இப்போ ஒன்னு கூட இல்லை'' என்றும், இந்த மாதிரி ஏதாவது சொல்லிக் கொண்டிருந்தான்.


இப்படியாக அந்தக் கல்யாணத்தை மிகவும் சந்தோஷமாயும் குதூகலத்துடனும் அநுபவித்தவர்கள் பலர்; மனத்துக்குள் எரிந்து கொண்டு வெளியில் காட்டிக் கொள்ளாதிருந்தவர்கள் சிலர். அவர்களுள் எல்லாம் அளவிலாத ஆனந்தத்தில் மூழ்கிச் சொர்க்க வாழ்வையே அடைந்து விட்டதாக எண்ணிய ஒரு ஜீவனும், சொல்ல முடியாத சோக சாகரத்தில் மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருந்த ஓர் ஆத்மாவும் இருந்தார்கள். அவர்கள் மணப்பெண்ணாகிய சாவித்திரியும், மணமகனாகிய ஸ்ரீதரனுந்தான்.

''பிள்ளையாண்டானுடைய மோவாய்க் கட்டையைப் பிடித்து அப்பா, ஐயா என்று கெஞ்சியாக வேண்டும்'' என்று சம்பந்தியம்மாள் சம்பு சாஸ்திரியிடம் சொன்ன போது உண்மையையே சொன்னாள். ஆனால் அவள் சொன்ன காரணம் மட்டும் சரியல்ல. தங்கம்மாள் சென்னைப் பட்டணத்துக்குப் போய் வழக்கம் போல் தன்னுடைய சக்தி முழுவதையும் பிரயோகித்தாள். மூன்று மணி நேரம் வாக்குவாதம், கோபதாபம், அழுகை புழுகை எல்லாம் ஆன பிறகு, கடைசியாக அவள், ''இப்போது ஒன்னும் முழுகிப் போகவில்லை. எல்லாருமாகக் கிளம்பிக் கல்யாணத்துக்குப் போவோம். நீயே பொண்ணைப் பாரு. பொண்ணைப் பார்க்காமயா தாலி கட்டப் போறே? பார்த்த பிறகு உனக்குப் பிடிக்காட்டா, எங்கிட்டே சொல்லு. நான் எப்படியாவது கல்யாணத்தை நிறுத்திடறேன். எல்லாருமாத் திரும்பி வந்துடலாம்'' என்று சொன்னாள். ''அது நன்னாயிருக்குமா?'' என்று ஸ்ரீதரன் கேட்டதற்கு, ''ஏன் நன்னாயிருக்காது? இப்போது பணம் அட்வான்ஸ் வாங்கின்ட அப்புறம் ஒரு காரணமும் இல்லாமல் வாண்டான்னாத்தான் அவமானம்; அப்போ உனக்குப் பொண் பிடிக்கலைன்னா ஏதாவது நான் சாக்குச் சொல்லி விட்டுக் கிளம்பி விடறேன். உனக்கென்ன அதைப் பத்தி?'' என்றாள். இதன் மேல், ஸ்ரீதரன் வேண்டா வெறுப்பாகச் சம்மதித்தான். சம்பு சாஸ்திரியின் பெரிய மனுஷத் தன்மையைப் பற்றியும் சாவித்திரியின் அழகைப் பற்றியும் அவள் வர்ணித்ததும் ஒருவாறு அவன் மனத்தை இளகச் செய்திருந்தன.

இப்போது நெடுங்கரைக்கு வந்து அந்தப் பட்டிக்காட்டையும் 'ஜான்வாஸ' ஊர்வலத்தின் அழகையும் பார்த்த பிறகு அவன் மனம் சோர்ந்து விட்டது. அவனுக்கு மாமனாராக வரவிருந்த சம்பு சாஸ்திரி இன்னாரென்று தெரிந்ததும் அவனுக்குப் பஞ்சப் பிராணனும் போய் விட்டது. கோவிலில் வைத்து உபசாரங்கள் நடந்தபோதெல்லாம், சம்பு சாஸ்திரி குறுக்கே நெடுக்கே போய்க் கொண்டிருந்ததைப் பார்த்து, அவர் அந்தக் கோவிலின் குருக்கள் என்று அவன் எண்ணினான். அப்புறம், அவர்தான் சம்பு சாஸ்திரி என்று தெரிந்த போது, ''ஐயோ!'' என்று அசந்து போனான். 'இந்தக் கட்டுப் பொட்டிப் பிராமணனா எனக்கு மாமனார்? இவருடைய பெண்ணும் இப்படித்தானே இருக்கும்?' என்று எண்ணிய போது அவனுக்குச் சொரேல் என்றது. தன் சிநேகிதன் நாணா சொன்னதெல்லாம் நிஜந்தான், பரிகாசமல்ல என்று அவனுக்கு நிச்சயம் ஏற்பட்டது. இந்தக் கண்ராவியையெல்லாம் பார்க்க நாணா கல்யாணத்துக்கு வராமல் போனதே நல்லது என்றும் நினைத்தான்.

ஊர்வலம் முடிந்து, சம்பந்திகளுக்காக ஏற்பட்டிருந்த ஜாகைக்குப் போனதும், அம்மாவைத் தனியாக அழைத்து, அழ மாட்டாத குரலில், ''என்னால் முடியாது; இந்தக் கல்யாணம் எனக்கு வேண்டாம். இப்போதே நான் ஓடிப் போறேன்'' என்றான்.

இவர்களுக்குள் வாக்குவாதம் நடந்து கொண்டிருந்த போதுதான் தீக்ஷிதர், சம்பு சாஸ்திரியை அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தார். தங்கம்மாள் சாஸ்திரியுடன் பேரம் பேசி, அவர் அதிகப் பணம் கொடுக்கச் சம்மதித்து விட்டுப் போனதும், மறுபடியும் தன் மகனிடம் வந்தாள். ''அப்பா! குழந்தை! நீயுந்தான் இப்படிச் சொல்றேன்னு, நான் அந்தப் பிராமணன் கிட்ட ஏதாவது சாக்குக் காட்டிக் கல்யாணத்தை நிறுத்தி விடலாம்னு பார்த்தேன். அது முடியலையேடாப்பா! இன்னொரு ஆயிரம் ரூபாய் அதிகம் கொடுக்கணும்னேன். உடனே சரின்னுட்டார். என்ன பண்றதுடாப்பா குழந்தை! கல்யாணத்தை நடத்தித்தான் ஆகணும்!'' என்றாள்.



இவ்விரு குழந்தைகளும் ஆதவரற்ற நிலையில் சிவானந்த குருகுலத்தில் சேர்க்கப்பட்டு அன்பும், அரவணைப்பும் கிடைக்கப் பெற்று அமைதியான சூழ்நிலையில் வளர்கின்றனர்.

செல்வி அம்மு என்று அழைக்கப்படும் குழந்தை திருவள்ளூர் இரயில் நிலையத்தில் மூன்று மாதங்கள் நிர்க்கதியாக விடப்பட்டு பின்பு சிவானந்தா ஆசிரமத்தில் அடைக்கலம் புகுந்தது.

அஞ்சலி என்று நாங்கள் பெயரிட்டு அழைக்கப்படும் மற்றொரு குழந்தை கிழக்குத் தாம்பரம் பூங்காவில் ஆதரவற்ற நிலையில் எங்களிடம் வந்து சேர்ந்து வளர்ந்து வருகிறது.

இப்படிப்பட்ட எண்ணற்ற சிறார்களுக்கு மனமகிழ்ச்சி தருவது தங்களுடைய அன்பும், ஆசியும், பொருளுதவியும்.

அவர்களுடைய தேவையான உடையும், உணவும் நாம் எவ்வளவுதான் அளித்தாலும் பெற்றோர்கள் தங்களுக்கு இல்லையே என்ற ஏக்கம் நெஞ்சில் இருக்கத்தான் செய்யும். அதனை போக்கத்தான் நாங்களும் அனைத்து முயற்சிகளும் எடுத்துக் கொண்டு வருகிறோம்.

பண்டிகைகளும், விழாக்களும் மனித வாழ்வில் மனமகிழ்ச்சியை ஏற்படுத்தி உற்றார் உறவினருடன் பாசத்தினை பகிர்ந்து வாழ வழிவகை செய்கிறது. இப்படிப்பட்ட குழந்தைகளுக்கும், நிர்க்கதியாக நிற்கும் முதியோர்களுக்கும் தாங்கள் தானே உற்றார் உறவினர்! ஒவ்வோர் ஆண்டும் தீபாவளி திருநாளை இச் சிறார்களுக்கு இப் பத்திரிகை மூலமாக வாசகர்களின் உதவியுடன் கொடுக்கப்படும் நிதியிலிருந்து இரண்டு ஜோடி புத்தாடைகளும், பட்டாசுகளும், இனிப்புகளும் வழங்கப்பட்டு தாழ்வு மனப்பான்மையினை போக்கி சிறப்பாக கொண்டாடுகிறோம்.

சிவானந்த ஆசிரமத்திலுள்ள சுமார் 250 ஆதரவற்ற குழந்தைகளும், மற்றும் முதியோர்களும் இந்த தீபாவளி திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாட பொதுமக்கள் மனமுவந்து உதவுமாறு வேண்டுகிறோம். இதனைப் படிக்கும் தாங்கள் தங்களுடைய காணிக்கையாக ஒவ்வொருவரும் குறைந்தபட்சம் தலா ஒரு ரூபாய் இவ்வறப்பணிக்கு அர்ப்பணம் செய்தால், இத் திருப்பணி தங்கள் ஆசியுடன் பரிபூர்ணமாக நிறைவேறும் என்பதல்லாமல் இந் நாட்டில் உள்ள அனைத்து ஆதரவற்றோருக்கும் பயன் பெறும்.

பொதுமக்கள் அளிக்க விரும்பும் நன்கொடை பணம், பொருள் எதுவாக இருந்தாலும், அக் குழந்தைகளின் நலனை முன்னிட்டு ஏற்றுக் கொள்ளப்படும். வருமான வரி விலக்கு சான்றிதழ் அளிக்கப்படும். பொதுமக்கள் தங்களால் இயன்ற உதவியை பணமாக அல்லது பொருட்களாக,

நிர்வாகி,
"சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்"
நெ. 20, கம்பர் தெரு, கிழக்கு தாம்பரம்,
சென்னை - 600 059. தொலைபேசி எண்கள் : 401078, 40235
என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

சம்பு சாஸ்திரியின் தாராள சுபாவத்தை அறிந்ததும், உண்மையிலேயே தங்கம்மாளுக்கு இந்தக் கல்யாணத்தை எப்படியாவது நடத்தி விட வேண்டுமென்று உறுதி ஏற்பட்டிருந்தது.

ஸ்ரீதரனோ அத்தனைக்கத்தனை ஆத்திரம் அடைந்தான். ''நீ நாசமாய்ப் போக! பணம், பணம், பணம் என்று அடித்துக் கொள்கிறாயே? பணம் உன்னோடு கடுகாட்டுக்கு வரப் போறதா?'' என்றான்.

இதுதான் சமயமென்று தங்கம்மாள் தன் கைவரிசையை ஆரம்பித்து விட்டாள். ''ஆமாண்டாப்பா! என்னை இந்த ஊரிலேயே கடுகாட்டிலே வச்சுட்டுப் போயிடு. நான் இதோ கிணத்துல விழுந்து செத்துப் போறேன். இந்த அவமானத்தோட என்னாலே ஊருக்குத் திரும்பிப் போக முடியாது'' என்று சொல்லி அழத் தொடங்கினாள். இந்த மாதிரி சோக நாடகமெல்லாம் கொஞ்ச நேரம் நடந்த பிறகு, கடைசியில் தங்கம்மாள், ''நான் சொல்றதைக் கேள்டா, குழந்தை! நீ இப்போ மாத்திரம் என் மானத்தைக் காப்பாத்திடு, அப்புறம் உனக்கு வேணும்னா, ஆம்படையானை அழைச்சு வைச்சுக்கோ! இல்லாட்டா, வேண்டாம். அவ எனக்கு மாட்டுப் பொண்ணா இருந்துட்டுப் போகட்டும்'' என்றாள். ஸ்ரீதரன், ''அப்படின்னா, நீயே நாளைக்கு எனக்குப் பதிலாகத் தாலி கட்டி விடு'' என்றான்.

ஆனால், மறுநாள் ஸ்ரீதரன்தான் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட சுபலக்னத்தில் சாவித்திரிக்குத் தாலி கட்டினான். அதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பு முதன் முதலாக, கல்யாணப் பந்தலில் மாலை மாற்றும் சந்தர்ப்பத்தில், ஸ்ரீதரன் சாவித்திரியைப் பார்த்தான். சாவித்திரி அப்போது குனிந்த தலைநிமிராமல் இருந்தாள். கிராமாந்தர வழக்கப்படி, அவளுக்குப் பதினெட்டு முழப் புடைவை உடுத்தி, தலையில் பழைய காலத்து நகைகள் எல்லாம் அணிவித்து அலங்காரம் செய்திருந்தார்கள். அதைப் பார்த்த ஸ்ரீதரன், ''கர்நாடகம் என்றால் படு கர்நாடகம்'' என்று தீர்மானித்துக் கொண்டான். பிறகு, திருமாங்கல்ய தாரணத்துக்கு முன்பு மணமகனும் மணமகளும் மந்திர ரோச்சாடனத்துடன் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கும் கட்டம் வந்தது. இருவரையும் எதிர் எதிரே உட்கார வைத்து, ஒரு பட்டுத் துணியைப் போட்டு மூடினார்கள். மந்திரம் பண்ணி வைத்த சாஸ்திரிகள் ''முகத்தைப் பார்த்தாயா?'' என்று கேட்டார். ஆம்; ஸ்ரீதரன் சாவித்திரியின் முகத்தைப் பார்த்தான். முதலில் அவளுடைய கண்கள்தான் தெரிந்தன. அந்தக் கண்களின் பார்வையில் இருந்த ஒருவிதப் பரிதாபம் அவன் இருதயத்தை ஒரு கணநேரம் என்னவோ செய்தது. அப்புறம், முகம் தெரிந்தது. வெகு நேரம் ஹோம குண்டத்துக்கு எதிரில் இருந்து சாவித்திரியின் முகம் புகையுண்டிருந்தது. போதாததற்குக் கண்களை அடிக்கடி கசக்கியதனால் கண்ணில் இட்டிருந்த மை கன்னமெல்லாம் வழிந்திருந்தது. மூக்கிலே புல்லாக்குத் தொங்கிற்று. இந்த நிலையிலிருந்த சாவித்திரியின் முகத்தைப் பார்த்ததும் ஸ்ரீதரன், 'இவ்வளவு அவலட்சணமான முகம் இந்த உலகத்திலேயே இருக்க முடியாது' என்று தீர்மானித்து விட்டான்.

அப்புறம் அந்தக் கல்யாணத்தின் போது, சாவித்திரியின் முகத்தை இன்னொரு தடவைப் பார்க்க ஸ்ரீதரன் முயற்சி செய்யவில்லை. 'ஏதோ தலைவிதியினால் இந்தப் பந்தம் ஏற்பட்டு விட்டது; ஆனால் இப்போது தாலி கட்டுவதுடன் சரி. அப்புறம் எனக்கும் இவளுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது' என்று அடிக்கடி அவன் மனத்தில் உறுதி செய்து கொண்டான். அந்தப் பெண்ணிடம் அவனுக்கு லவலேசமும் இரக்கம் உண்டாகவில்லை. 'இவள் ஏன் பிறந்தாள்? இவள் பிறந்ததனால்தானே நாம் இந்தச் சங்கடத்தில் அகப்பட்டுக் கொள்ள நேர்ந்தது?' என்று எண்ணி எண்ணி அவன் ஆத்திரப்பட்டான்.

**சா**வித்திரியின் மனோநிலையோ இதற்கு நேர் மாறாக இருந்தது. கல்யாணம் நிச்சயமானதிலிருந்து அவள், 'ஸ்ரீதரன், ஸ்ரீதரன்' என்று மனத்திற்குள் ஜபம் செய்து கொண்டிருந்தாள். காகிதத்தையும் பென்சிலையும் எடுத்துக் கொண்டு போய்த் தனியான இடத்தில் உட்கார்ந்து கொண்டு, ''ஸ்ரீதரன், பி.ஏ.'' ''ஸ்ரீதரய்யர், பி.ஏ.'' ''மகா-ஸ்ரீ ஸ்ரீதரய்யர் அவர்கள்'' என்றெல்லாம் எழுதி எழுதிப் பார்ப்பாள். கல்யாணத் தேதி நெருங்க நெருங்க, ஸ்ரீதரனைப் பார்க்க வேண்டுமென்றும் அவளுடைய

''எதிர்த்த வீட்டு லதா யாரோ என்ஜின் டிரைவரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டாளாம்.''

''பக்கத்திலே அப்படி யாரும் இல்லையே.''

''இது ரயில்லே தண்ணி பிடிக்கப் போனப்போ ஏற்பட்ட பழக்கம்ங்க!''

– கே. வி.



ஆவலும் அதிகமாகிக் கொண்டிருந்தது.

கல்யாணத்துக்கு முதல் நாளிரவு அவளுடைய ஆவல் உச்ச நிலையை அடைந்திருந்த சமயத்தில், 'கசமுச' என்று பலரும் இரகசியம் பேசிக் கொண்டதை அவள் கவனித்தாள். வம்புக்கார ஸ்திரீகள் இரண்டொருவர் அவளிடம் வந்து, ''அடியே! சாவித்திரி! 'பொண்ணை பிடிக்கலை, கல்யாணம் வேண்டாங்'கறானாம் உன் ஆம்படையான்!'' என்று சொன்னார்கள். இது சாவித்திரியின் காதில் நாராசமாக விழுந்தது. ஆனாலும் அதை அவள் நம்பவில்லை. சம்பு சாஸ்திரி திரும்பி வந்ததும், ''என்ன அப்பா எல்லாரும் கூடிக் கூடிப் பேசிக்கிறாளே'' என்று கேட்டாள். ''உனக்கு ஒன்றுமில்லை, அம்மா! கல்யாணம்னா அப்படித்தான் இருக்கும். சம்பந்திகள் அது பண்ணலை, இது போறலை என்று சொல்லிக் கொண்டிருப்பா. நாலு பேர் நாலு வம்பு வளப்பா! அதையெல்லாம் நீ காதிலேயே போட்டுக்கப்படாது, அம்மா!'' என்றார். சாவித்திரிக்கு இதனால் சமாதானம் உண்டாயிற்று.

மறுநாள் சாவித்திரி, முதன் முதலாக ஸ்ரீதரனைப் பார்த்த போது, அவள் உடல் முழுதும் மகிழ்ச்சியினால் ஒரு குலுங்குக் குலுங்கிற்று. அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தபடி ஸ்ரீதரன் உச்சிக் குடுமியுடன் இராமல், நாகரிகமாகக் கிராப் வைத்துக் கொண்டிருப்பதையும், சிவந்த மேனியுடன் சுந்தர புருஷனாய் விளங்குவதையும் கண்டதும், கர்வத்தினால் அவளுடைய உடல் பூரித்தது. திருமாங்கல்ய தாரணத்துக்கு முன்னால், பட்டுத் துணியினால் மறைக்கப்பட்ட சமயம், ஸ்ரீதரனுடைய முகத்தைப் பார்த்த போது, அவளுக்கு மயிர்க் கூச்சல் எடுத்து, கண்களில் ஜலம் வந்து விட்டது.

அப்புறம் அவனுடைய அழகிய முகத்தை மறுபடி பார்க்க வேண்டுமென்று அடிக்கடி அவளுக்கு ஆவல் உண்டாயிற்று. சில தடவைகளில் ரொம்பவும் துணிச்சலுடன் நிமிர்ந்து பார்ப்பாள். அப்போதெல்லாம் அவன் தன்னைப் பாராமல் குனிந்து கொண்டிருப்பதையோ அல்லது வேறு பக்கம் நோக்கிக் கொண்டிருப்பதையோ, பார்த்ததும் அவளுக்கு அவமானமாய்ப் போய் விடும். 'அவர் எவ்வளவு அடக்கமாக இருக்கிறார்? நமக்கு எவ்வளவு துணிச்சல்' என்றெண்ணித் தன் ஆவலை அடக்கிக் கொண்டாள்.

கல்யாணம் நாலு நாளும் சாவித்திரி இந்த உலகத்திலேயே இருக்கவில்லை. துயரம் என்பதே இல்லாத ஆனந்த கற்பனாலோகத்தில் வசித்து வந்தாள்.



''என்னங்க? ஆபரேஷன் செய்த பேஷண்ட்களை 'மெட்டல் டிடக்டர்' வைத்துப் பரிசோதனை செய்றாங்க?''

''ஆபரேஷன் தியேட்டரில் கத்தி இரண்டு குறையுதாம்!''

- எம். பர்வதவர்த்தினி.

'கோடையிலே இளைப்பாற்றிக்
கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த
கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண்
ணீரே
உகந்ததண்ணீ ரிடைமலர்ந்த
சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங்
காற்றே
மென்காற்றில் விளைசுகமே
சுகத்திலுறும் பயனே
ஆடையிலே யெனைமணந்த மண
வாளா!...'

என்று அவளுடைய குழந்தை உள்ளம் ஓயாமல் பாடிக் கொண்டேயிருந்தது. தனக்குப் புருஷனாக வாய்த்தவர் சாதாரண மனுஷர் அல்ல, தன்னுடைய தகப்பனார் பூஜை செய்யும் ஸ்வாமிதான் தன்னைச் சிறு தாயாரின் கொடுமையிலிருந்து மீட்பதற்காக இப்படி மனுஷ ரூபத்தில் வந்திருக்கிறார் என்று எண்ணினாள்.

தன்னுடைய துயரங்கள் எல்லாம் தீர்ந்து விட்டனவென்றும், இனிமேல் தன் வாழ்க்கையில் சந்தோஷத்தைத் தவிர துக்கம் என்பதே கிடையாதென்றும் அவள் நினைத்து நினைத்து மனம் பூரித்தாள். வாழ்க்கையில் தன்னுடைய கஷ்டங்களெல்லாம் உண்மையில் அப்போதுதான் ஆரம்பமாகின்றன என்பது அந்தப் பேதைப் பெண்ணுக்கு எப்படித் தெரியும்?

கடவுளின் கருணை அற்புதமானது; அனந்தமானது. மனுஷ்யர்களுக்கு அவர்களுடைய வருங்காலத்தை அறியும் சக்தி இல்லாமல் பகவான் செய்திருக்கிறார் அல்லவா? இந்த ஒன்றிலேயே இறைவனுடைய கருணைத் திறத்தை நாம் நன்கு அறிகிறோம். வருங்காலத்தில் நிகழப் போவதெல்லாம் மட்டும் மனுஷனுக்குத் தெரிந்திருந்தால், அவன் ஒரு கணமாவது உண்மையான மகிழ்ச்சி அநுபவிக்க முடியுமா?

(தொடரும்)

போட்டிக் கதை - 7

# அப்பா கதை

'அப்பா புதுசா கடை வச்சிருக்காராம்...!'

அம்மா சொல்லி அழைச்சிட்டுப் போகும் போது எனக்கு ஒரே சந்தோஷமா இருந்தது.

அப்பாவுக்கு இது எத்தனையாவது கடைன்னு எனக்கு அவ்வளவாத் தெரியலை. ஆனா மெயின் பஜார்ல அவருக்கு வரிசையா நிறையக் கடை இருக்குங்கறது மட்டும் எனக்கு நல்லாத் தெரியும்.

எனக்குத் தெரிஞ்சு, நான் நாலாவது படிக்கிற நகராட்சி பள்ளிக்கூடத்திலிருந்து தெற்குப்புறமா இருக்கிற ரேடியோக் கடை.... காந்தி சிலைக் குக் கொஞ்சம் தள்ளி இருக்கிற 'ஷாமியானாக்' கடை.... அதுக்கும் மேற்குப்புறமா இருக்கிற சேர், டேபிள் கடை.... மூங்கில் பாலத்தோரமா இருக்கிற காப்பி, பேக்கரி கடை... பலசரக்கு, மளிகைக் கடைன்னு ஏகப்பட்ட கடை. இந்தக் கடையிலெல்லாம் அப்பா அப்பப்போ இருந்திருக்கார். இதெல்லாமுமே அப்பா கடைதான்னு நினைக்கிறப்ப எம் மனசு ரொம்ப ரொம்ப சந்தோஷப்படும்.

அம்மா சாதாரணமா என்னை அப்பாவின் கடைக்குக் கூட்டிக்கிட்டுப் போறதேயில்லை. ஏன்னா, அங்கே எங்களையெல்லாம் வரக் கூடாதுன்னு அப்பா உத்தரவே போட்டுட்டார். அதனால அந்தப் பக்கம் திரும்பிப் பார்க்கவே அக்காவுக்கும் எனக்கும் பயம்.

ஆனா ஒருநாள், 'வீட்ல அரிசியில்லே... அப்பாகிட்ட வாங்கிட்டு வரலாம்...'ன்னு அதிசயமா என்னையும் அப்பா கடைக்கு அழைச்சிட்டுப் போனா அம்மா. போகும்போதே அப்பாக் கடையில கண்டதையும் கேட்டுக் கைநீட்டக் கூடாதுன்னு கண்டிப்பா சொல்லிட்டா...

அப்போ கடையில அப்பா மட்டும் தான் இருந்தார்.

அந்தக் கடை முகப்புல பிஸ்கட், சாக்லெட்டெல்லாம் பாட்டில் பாட்டிலாப் போட்டு அடுக்கி வச்சிருந்ததைப் பார்க்கப் பார்க்க எனக்கு ஆசை வந்தது. அப்பா அதுல ஒண்ணே ஒண்ணையாவது எடுத்துத் தர மாட்டாரான்னு ஏக்கமா ஏங்கினேன். அதுலயும் அந்த 'ஃபைவ் ஸ்டார் சாக்லெட்'டை வாய் விட்டே கேட்டுப் பார்க்கலாமான்னு கூடப் பார்த்தேன். அம்மாவோட முகத்தைப் பார்க்கவே பயமா இருந்தது. 'அப்பா கிட்ட நாம கேட்டு, அம்மா அடிச்சிட்டா...?'

அப்பா இதையெல்லாம் கடைசி வரைக்கும் கண்டுக்கலை. அம்மாவைக் கையில பையோட பார்த்ததும் கல்லாவுல உட்கார்ந்திருந்த அப்பா கடைக்கு வெளியிலேயே எழுந்திரிச்சு வந்துட்டார்.

''எதுக்கு வந்தே...?''

''காலையிலேயே அரிசி தீர்ந்துடுச்சுன்னு சொன்னேன்ல...?''

''ஆமாம்... அதுக்கென்ன இப்ப...?''

''இப்ப ரேஷன் அரிசி போடறாங்க... பாத்திமா பீவி வீட்ல கார்டு வாங்கி வச்சிருக்கேன்... காசு கொடுத்தாப் போயி வாங்கிட்டு வந்திடுவேன்...!''

''முதலாளிகிட்டக் கேட்டிருக்கேன்... சாயங்காலமா அம்பதோ, நூறோ கொடுக்கறேன்னிருக்கார்... அப்ப வாங்கிக்கலாம் போ...!''

''அப்ப வரைக்கும் என்ன செய்யறது...?''

''என்கிட்டே கேட்டா...?'' அப்பாவின் முகம் 'உர்ர்'ரென்று மாறி விட்டது.

''ஒரு கால் கிலோ வெள்ளை ரவை கொடுத்தா கொஞ்சமா குழந்தைகளுக்கு உப்புமா கிண்டிடுவேன்...!''

- சொல்லும்போதே அம்மாவுக்கு ஏதோ தொண்டையில அடைபட்டது. மூக்கை சேலைத் தலைப்பால் துடைத்து விட்டுக் கொண்டாள்.

அப்பாவோ அம்மாவை எரித்து விடுபவர் போல் பார்த்தார்.

''ஓ... ரவை வேணுமா...? கடை முதலாளி ஓங்கொப்பனாச்சே... கால் கிலோ என்ன... கால் மூட்டையே எடுத்துக்கலாம் போ...! வந்திட்டா பெரிய இவளாட்டம்..''

கா. சு. வேலாயுதன்

- அப்பாவின் முணுமுணுப்பில் அம்மா முகம் கண்டிப் போனாள்.

''நீங்க ஒண்ணும் சும்மா தர வேணாம்...! கடனாக் கொடுங்க... சாயங்காலம் முதலாளி காக கொடுத்ததும் கல்லாவுல போட்டு வச்சிடலாம்...!''

''கடனா...? இங்கே முதலாளியே 'பர்சேஸ்' பண்ணினாக் கூட ரொக்க பில்... தெரியும்லே...? அப்புறம் உனக்கு மட்டும் என்னவாம்...?''

''அவர் உள்ளப்பட்டவர்... நீங்க அவர்கிட்டேயே விஷயத்தைச் சொன்னா...!''

- அம்மா இழுக்க இழுப்புக்கு அப்பா ஒத்து வரவில்லை.


''என்னன்னு..? பின்னால கல்லாவுல காக போட்டுடறேன்... இப்பக்கால் கிலோ ரவை எடுத்துக்கறேன்னா...?ம்... 'காக போடாட்டா என்னப்பா... சும்மா எடுத்துட்டுப் போக வேண்டியதுதானே...? நாங்க என்ன பார்த்துட்டா இருக்கோம்'ன்னு கேட்டுட்டா நாம எந்தக் கிணத்துக்குப் போறது...?''

அம்மா எதுவும் பேசலை. கண்ணுல மட்டும் கண்ணீர் பொங்கிப் பொங்கி வந்தது. அதுக்கும் மேலேயும் அம்மா அங்கே நிற்கலை.

அதுக்கப்புறம் அம்மாவும் அப்பா கடைக்குச் போய் வருவதைக் காணோம். அப்பப்ப சாப்பிடறதுக்குக் கூட அப்பாவே வீட்டுக்கு வந்திட்டுப் போயிட ஆரம்பித்தார்.

அதுவெல்லாம் கொஞ்ச காலம்தான்...

இப்பவெல்லாம்





"ஞாயிற்றுக் கிழமையும் அதுவுமா நாயைப் போட்டு ஏன் இந்த அடி அடிக்கறீங்க?"

"எதிர் வீட்டுக்கு வர்ற பேப்பர கவ்விட்டு வரச் சொன்னா இலவச இணைப்பை விட்டுட்டு வெறும் பேப்பர மட்டும் கொண்டு வருது!"

- அம்பை தேவா.

அந்த மளிகைக் கடை உள்பட எந்தக் கடைக்கும் போவதே இல்லை அப்பா.

அப்பா அங்கே போய் அஞ்சாறு மாசத்துக்கும் மேலேயிருக்கும்.

இராத்திரி நேரத்துல கூட வீட்ல இல்லாம இருந்த அப்பா இப்பக் கொஞ்ச காலமா ஏனோ வீடே கதின்னு கிடக்கிறார். பாதி நேரம் படுக்கையிலும்... மீதி நேரம் கவலையிலும்...

"என்னங்க... இதுக்குப் போய் அழுதிட்டு... அந்த மடம் இல்லேன்னா வேறொரு சந்தை மடம்... ஆம்பிளையாட்டம் நிமிர்ந்து உட்காருவீங்களா... பொட்டச்சியாட்டம் அழுதிட்டு... ம்...!"

- அம்மாதான் அப்பாவை அப்பவெல்லாம் என்னென்னவோ சொல்லிச் சமாதானப்படுத்தினா.

"என்னமோ சொல்வீட்டே கமதி... என் மனசு தாங்கலையே... ஒரு குன்டூசியக் கூட நான் எடுத்ததில்லை... ஆனா என்னைப் போய்... பத்தாயிரத்தை முழுங்கிட்டேன்னு... அபாண்டமா... படுபாவிக... அவங்க நல்லாயிருப்பாங்களா...?"

"கிடக்கிறாங்க விடுங்க... அவனவன் கொலை, கொள்ளை அடிச்சிட்டு ஊருக்குள்ளே யோக்கியன்களாட்டம் திரியறாங்க... நம்ம அப்படி என்ன செய்திட்டோம்... மனசாட்சிப்படி நம்ம எடுத்திருந்தாத்தானே பயம்...? நாலு பேரு புழங்கற எடம்... யார் கருட்டினான்னு யார் கண்டா... அதை விடுங்க. உங்களை நான் நம்பறேன்...!"

இதைச் சொல்லும் போது ஏனோ அம்மாவும் அப்பா கூடச் சேர்ந்து அழுதாள். அப்பா சிறுகச் சிறுக சாதாரண நிலைக்கு வந்தார்.

அதுக்கப்புறமா அப்பாவும், அம்மாவும் எங்களுக்குப் புரியாத மாதிரி நிறைய விஷயங்களைப் பேசிக்கிட்டாங்க. அடிக்கடி என்னையும் அக்காவையும் பாத்திமா பாட்டி வீட்ல விட்டுட்டு எங்கேயோ போயிட்டு வந்தாங்க. அப்படி ஒருநாள் அப்பாவோட போயிட்டு வந்தப்ப அம்மா கழுத்துல இருந்த நகையைக் காணோம். கம்மலும் இல்லை. காதுல ஏதோ பிளாஸ்டிக் கம்மலை மட்டும் மாட்டியிருந்தாள்.

அப்பொழுது அப்பாவின் முகமும், அம்மா முகமும் சோர்ந்து போய் இருந்தது. அப்பா கையில கத்தை கத்தையா பணம் வச்சிருந்தார். வீட்டுக்குள்ளே வந்த வேகத்தில அந்தப் பணத்தை அம்மா மடியில விட்டெறிஞ்சுட்டு,

"ம்... வராத கஷ்டம் வந்தப்பெல்லாம் கூட உன் அப்பன் போட்ட நகையத் தொடக் கூடாதுன்னு கங்கணம் கட்டிக்கிட்டு இருந்தேனே கமதி... இப்ப ஒரேயடியா மார்வாடி கடையில மாறிட்டு வந்து நிக்கறேனே...!"

- அப்பா இதைச் சொல்லிட்டுக் குலுங்கிக் குலுங்கி அழுதார்.


"ச்சே... ச்சே... என்னங்க இது... கம்மா கம்மா... இதையே சொல்லி அழுதிட்டு...! ஆபத்துக்குதவாத சீர்வரிசை வெட்டியாக் கழுத்துல எதுக்குங்க...? இன்னைக்கு இதை வச்சு ஆயிரமென்ன... இலட்ச இலட்சமா சம்பாதிச்சு அறுபது பவுனு கூடப் பொண்டாட்டிக்குப் பூட்டுவீங்க, விடுங்க...!"

இந்த அம்மாவும் அப்பாவும் இத்தனை பணத்தை வெச்சிக்கிட்டு என்னதான் செய்யப் போறாங்கன்னு எனக்கு ஒன்னுமே புரியலை.

இப்பவெல்லாம் அம்மாவும் அப்பாவும் ரொம்பவும்தான் மெலிஞ்சு போயிட்டாங்க. இரண்டு நாளா சரியாச் சாப்பிடாம கூட கடைக்குப் போறோம்னு போனவங்கதான். எடுபிடி வேலை செய்யணும்னு அக்காவையும் கூடவே கூட்டிட்டுப் போயிட்டாங்க. எனக்குச் சாப்பாடு தூக்கம் எல்லாம் பாத்திமா பாட்டி வீட்லதான்.

இப்ப திடீர்னு காலையில வந்து அப்பாவின் கடைக்குப் போகலாம்னு அம்மா புறப்பட வச்சதும் எனக்கு ரொம்ப சந்தோஷமாப் போச்சு.

அப்பாவோட புதுக்கடை மெயின் பஜாரை விட்டு ரொம்ப தூரம் தள்ளி உள்ளே போன ஒரு சந்துக்குள்ளே இருந்



"அந்த போலீஸ்காரர் எல்லாத்திலயும் தான்தான் முதல்ல வரணும்னு நினைப்பார்."

"அது சரி, அதுக்காக ஓடுற திருடனைப் பிடிக்காம அவனை முந்திக்கிட்டு ஓடணுமா?"

- வ. நந்தகுமார்.

ந்தது.

இது. இதுக்கு முன்னால அப்பா இருந்த மத்த கடைகளைப் போலில்லாம ரொம்பவும் சின்னதா, குறுகலா இருந்தது.

எனக்கு மனசுக்குள்ளே எதையோ பறி கொடுத்த மாதிரி ஆகிப் போச்சு. அம்மா அந்தக் கடைக்குள்ளாற தாழ்வாரம் முட்டாம குனிஞ்சு கூட்டிட்டுப் போனப்ப நான் ஏதோ போகக் கூடாத இடத்துக்குள்ளே நுழைஞ்ச மாதிரி உணர்ந்தேன்.

அப்பா பழைய கம்பீரம் குறைஞ்சு, ஒரு ஸ்டூல்ல உட்கார்ந்துட்டு ரெண்டொரு பேருக்கு எதையோ கொடுத்தபடி சில்லறைய வாங்கிப் போட்டுட்டு இருந்தார்.

கடையில அரிசி, பருப்பு, காய்கறின்னு மளிகைச் சாமான்களெல்லாம் கடை பரப்பி இருந்தது. இங்கேயும் மிட்டாய்க, சாக்லேட், பிஸ்கட்டெல்லாம் ஒரு ஓரமா அடுக்கி வச்சிருந்தது.

சுவத்துல இருந்த சாமி படத்து முன்னால புகைஞ்சு மணம் பரப்பினபடி ஊதுபத்தி. அதுக்கும் முன்னாடி தட்டுல கொஞ்சம் பழம், ஊதுபத்தி, பூ... ஆரஞ்சு மிட்டாய்கள்...!

அந்த ஆரஞ்சு மிட்டாய்களை அக்காதான் கடைக்கி வர்றவங்களுக்கு எடுத்துக் கொடுத்திட்டிருந்தாள்.

அப்பா ரொம்பவும் சோகமா இருந்தார். "ஏன் சுமதி... நம்ம... இந்தக் கடை வைக்க எத்தனை... கஷ்டப்பட்டோம்... விக்காததை வித்து.. வாங்காததை வாங்கி... எப்படியெல்லாம்... இராத்திரி பகல்னு இல்லாம அலைஞ்சோம்... ஆனா பழைய கடைக்காரங்க என்ன பேசறாங்க தெரியுமா...?"

"என்ன பேசறாங்க...?"

"இதெல்லாம் நான்... அவங்க கடையில திருடினதாமா... திருடித் திருடி புதுக் கடையே வச்சுட்டேன்னு என் காது படவே பேசறாங்க சுமதி...!"

மேலும் கதறினார் அப்பா. அம்மா சிறிது நேரம் எதுவுமே பேசவில்லை. அம்மாவும் இந்த வார்த்தையில் துவண்டு விட்டாள் போல. அப்படியே அப்பாவோட தலை முடிய வருடி விட்டாள். அம்மா வோட மடியில முகம் புதைச்சு அப்பா கொஞ்ச கொஞ்சமா அழுகையை நிறுத்தினார்.

"நாலு பேர் நாலு விதமாச் சொல்லு வாங்கதான்... ஒருத்தன் சுயமா முன்னேறுவதைப் பார்த்துப் பொறுக்காத பயல்க... சொல்லீட்டுப் போறாங்க விடுங்க... சூரியனைப் பார்த்து நாய்க குரைச்சிட்டுப் போகட்டும்... இதுக்கெல்லாம் துவண்டு போனா சொந்தத் தொழில் செஞ்சு பொழைக்க முடியுமா...? நல்ல நாளும் அதுவுமா ரெண்டு புள்ளைகளைப் பெத்த ஆம்பிளை அழுதா நல்லாவாயிருக்கு...?"

அப்பா கண்ணைத் துடைச்சிட்டு நிமிர்ந்தார். சட்டென்று எதிர்ல என்னைப் பார்த்து லேசாகச் சிரித்தவர், இறுக அணைச்சு முத்தமாக் கொடுத்தார். நான் அப்படியே சொக்கிப் போயிட்டேன்.

அப்படியே கடை பாட்டிலிலிருந்து எனக்குப் பிடிச்ச ஒரு 'ஃபைவ் ஸ்டார்' சாக்லேட் எடுத்துக் கொடுத்துட்டு கடைக்குள்ளே போனார். எனக்கு அதைப் பார்க்கப் பார்க்க ஆசையாய் இருந்தது. சாப்பிட்டு விடலாமா என்ற எண்ணம் கூட வந்தது.

அப்பாவையும் கையிலிருந்த சாக்லேட்டையும் மாறி மாறிப் பார்த்தேன். ஏனோ எனக்கு அதைச் சாப்பிட மனசில்லை.

அப்பா பார்க்காதவாறு அதை பாட்டிலிலேயே போட்டு இறுக மூடினேன். இதைப் பார்த்துட்டே உள்ளே வந்த என் அக்கா ஒரு ஆரஞ்சு மிட்டாயை என் வாயில போட்டுட்டு சிநேகமாச் சிரிச்சா.

"அப்பா... பாவம் இல்லே...?"

கேட்ட என் கண்ணுல நீர் ததும்பிடுச்சு. அவளும் ஆமாம் என்பது போல் தலையை ஆட்டி விட்டு, கையி ஓரம் நிறைய ஆரஞ்சு மிட்டாய்களைத் திணிச்சா.

என் வாயிலிருந்த ஆரஞ்சு மிட்டாய் இனித்தது.

"எனக்கு சமையல் அவ்வளவா தெரியாது. ஆனால் காப்பி, டீ மட்டும் பிரமாதமாப் போடுவேன்!"

"அது சரி. இப்ப நீங்க தந்தது அந்த இரண்டில் எது?"

- ஞா. ஞானமுத்து.



# இத்தனை நாளா

# இது தெரியாமல் போயிடுச்சே!...

பணம் எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை, குழந்தைகளை நன்கு படிக்க வைக்க வேண்டும் எனத் தீர்மானித்து, பிள்ளைகளைக் கான்வென்டில் சேர்த்தோம்.

அலுவலக விஷயமாக என் கணவர் அடிக்கடி 'டூர்' போய்விடுவதால், குழந்தைகளது படிப்பு விஷயத்தில் நான்தான் கவனம் செலுத்த வேண்டியிருந்தது.



ஆனால், எனக்கு இங்கிலீஷ் அவ்வளவாகத் தெரியாத காரணத்தினால், டீச்சர்களிடம் குழந்தைகளது படிப்பு பற்றி விசாரிக்க முடியாமலும், பாட சம்பந்தமாகக் குழந்தைகள் கேட்கும் சந்தேகங்களுக்கு பதில் சொல்ல முடியாமலும் நான் பட்ட அவஸ்தை சொல்லி மாளாது.

பம்பாயிலிருந்து வந்திருந்த என் அத்தை பெண்ணிடம் இதுபற்றி பேசிக் கொண்டிருந்தபோது, "கல்யாணமாகி பம்பாய் போன புதிதில் நானும் உன்னைப் போல இங்கிலீஷ் பேச முடியாமல் திண்டாடினேன்.

விவேகானந்தா கல்வி நிலையம் பற்றி கேள்விப்பட்டு, அவர்கள் நடத்தும் "கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸில்" சேர்ந்து இங்கிலீஷ் கற்றுக்கொண்டேன். தமிழ் நாட்டில் வசிக்கும் உனக்கு இந்த 'கோர்ஸ்' பற்றி தெரியாமல் போய்விட்டதே என்று கோபித்துக் கொண்டாள்.

உடனே, நான் விவேகானந்தா கல்வி நிலையத்திற்கு ஒரு போஸ்ட் கார்டு எழுதிப் போட்டேன்.

பயிற்சி விபரங்கள் கிடைத்த மறு வாரமே, 'கோர்ஸில்' சேர்ந்தேன்.

பாடங்கள் எல்லாம் ஈஸியா புரியற மாதிரி, ரொம்ப சிம்பிளா இருந்ததால், நேரம் கிடைக்கும் போதெல்லாம் பாடங்களைப் படிச்சு பிராக்டிஸ் செய்தேன்.

இப்போ என்னால, பயமில்லாம சகஜமா இங்கிலீஷில் பேச முடிகிறது. குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க இந்த கோர்ஸ் எனக்கு ரொம்ப 'யூஸ்ஃபுல்லா' இருக்கு.

இத்தனைநாளா இந்த கோர்ஸ் பத்தி தெரியாம போயிடுச்சேன்னு வருத்தமா இருந்தாலும், இப்போவாவது இந்த கோர்ஸ்ல சேர்ந்து இங்கிலீஷ் பேசக் கத்துக்கிட்டோமேன்னு ரொம்ப சந்தோஷமா இருக்கு. – Mrs. துர்கா பிரசாத்

வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் நீங்களும் இப்பயிற்சியினை மேற்கொள்ளலாம்.

"நேர்முகப் பயிற்சியும் உண்டு"
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

**விவேகானந்தா கல்வி நிலையம்**

9, நடேசன் தெரு, தி.நகர், சென்னை-17.

திருமணமாகிப் புருஷன் வீட்டுக்குப் போன அந்தப் பெண்ணுக்கு மகா வியப்பு. பெரும்பாலும் சினிமா பார்த்து மாமியார் என்றால் சுந்தரிபாய் போலவும், மாமனார் பி.எஸ். வீரப்பா போலவும் இருப்பார் என்று கற்பனை பண்ணிக் கொண்டு சென்ற அவளுக்கு - அன்பே உருவான மனிதர்களைக் கண்டு மிக சந்தோஷமாக இருந்தது. அவளை, அவர்கள் ஒரு வேலை செய்ய விடவில்லை. தலையில் வைத்துத் தாங்கினார்கள்.

பிறந்த வீட்டிலும் மிகவும் செல்லமாக வளர்ந்த அவளுக்கு, புகுந்த வீடும் அப்படியே அமைந்தது அதிர்ஷ்டம்!

ரொம்ப சந்தோஷமாக இருந்தாள். வந்தது வினை. திருமணமாகிப் போயிருந்த அவளது புருஷனின் தங்கை, ஏதோ பிரச்னையால் தன் தாய் வீட்டுக்கு வந்து சேர, வீட்டாரின் ஒட்டுமொத்த கவனமும் அவள் மேல்.

இவளுக்குத் தன்னை அவர்கள் ஓரம் கட்டுவது போன்ற உணர்வு ஏற்பட, துக்கம் தொண்டையை அடைக்க, அது பொறாமையாக மாற, பொறாமை எரிச்சல் தர, எரிச்சல் கோபமாக உருவெடுக்க... கோபம் மண்டைக்கு ஏறியது!

விளைவு -

மாமியார் - மருமகள் குடுமிபிடி சண்டை! தெருவுக்கு வந்து அடித்துக் கொள்ளும் அளவுக்கு முற்றி, அவள் இறுதியில் மனநல மருத்துவரிடம் அழைத்துப் போகப்பட்டாள்!

இது நடந்த கதை.

எத்தனை சிறிய விஷயம்! ஏன் அப்படி நேர்ந்தது?

மருத்துவரிடம் போகும் அளவுக்கு கோபம் ஆபத்தானதா?

இக் கதையைச் சொன்ன டாக்டர் சந்திரசேகரன் கோபம் பற்றிய பல விளக்கங்களையும் அளித்தார்.

## கோபம் என்பது என்ன?

சாப்பிடுவது, தூங்குவது, அழுவது, சிரிப்பது மாதிரி கோபப்படுவது என்பது ஒரு குணாதிசயம். ஒருவரது சந்தோஷ, துக்க உணர்வுகளைப் புரிந்து கொள்வதைப் போலவே கோப உணர்வுகளையும் புரிந்து கொள்ள வேண்டும்! இயலாமை, எரிச்சல், பரஸ்பரம் புரிந்து கொள்ளாமை - இம் மூன்று பிரதான விஷயங்களால் தோன்றும் நமது வெளிப்பாட்டுக்கே கோபம் என்று பெயர்.

## கோபம் எப்படிப் பிறக்கிறது?

கோப உணர்ச்சி ஒருவருக்குத் தோன்றுகிறதென்றால் அது தம் மீதாகிலும் அல்லது

# கோபம்:



பிறர் மீதாகிலும் தோன்றும். தம் மீதே ஒருவருக்குக் கோபம் வருகிறதென்றால் அதற்கான முக்கிய காரணம் இயலாமை. உதாரணமாக அலுவலகத்தில் கடுமையான பணி. மாலை நேரமானாலும் இருந்து முடித்து விட்டுச் செல்லும்படி மேலதிகாரி கூறுகிறார். சரிதான் என்று உட்கார்ந்து கொட்டாவி விட்டபடியே இரவு வரை இருந்து

முடிக்கிறீர்கள். மறுநாள் மேலதிகாரி கூப்பிட்டு கண்டபடி திட்டுகிறார், பணியில் ஏதோ தவறு - கூட்டல் மிஸ்டேக். டேலி ஆகவில்லை. சகஸ்ரநாமம் பாடி விட்டு மறுபடி செய்யச் சொல்கிறார்.



னும் வேண்டாம், எங்காவது ஒழி!' என்று கத்தத் தோன்றும். அத்தனை தைரியம் இல்லாத ஆசாமி எனில், குறைந்தபட்சம் நாலு தடவை ஃபைலைத் தூக்கி தொப் தொப் என்றாவது போடச் செய்யும்.

இரண்டாவது 'பிறர் மீது கோபம்'. நீங்கள் செய்த தவறுக்கு உங்கள் மேலதிகாரி காட்டுகிற கோபம் இத்தகையது. வருத்தத்தில் பிறக்கிற கோபம். ஐயோ, இன்னும் பணி முடியவில்லையே' என்கிற கவலை கலந்த வருத்தத்தால் அவர் கோபப்படுகிறார்.

## அடக்கலாமா?

கோபம் தோன்றுகிற போது உடனுக்குடன் அதனை வெளிப்படுத்தி விடுவது மிகவும் நல்லது. ஒரே விஷயம் - நமது கோபம் நியாயமானதுதானா என்பதை ஒரு முறைக்கு இரண்டு முறை யோசித்துப் பார்க்க வேண்டியது. மேலதிகாரி திட்டி விட்ட கோபத்தை, குறைந்தபட்சம் ஃபைலைத் தூக்கிக் கூடப் போடாமல் அடக்கினீர்களென்றால், அது வீட்டில் போய் மனைவி மீதோ, ஏனையோர் மீதோ சம்பந்தமேயில்லாத விஷயத்தில் காரணமேயில்லாமல் பாயத் தோன்றும். அது இயல்பு வாழ்வைப் பெரிதும் பாதிக்கும்.

நியாயமான கோபத்தை சட்சட்டென்று வெளிக்காட்டி விடுவது நல்லதென்றாலும் அப்படி வெளிக்காட்டினால் விபரீதம் நேருகிற சூழ்நிலை இருக்குமானால் 'இதற்குக் கோபப்பட வேண்டாமே' என்று நீங்களே சட்டென்று உங்களை மாற்றிக் கொண்டு விடுவதுதான் நல்லது.

## கோபத்தில் சில 'அபாய வகைகள்'

கோப உணர்வை சிலர் மிதமாகவும், சிலர் மிகையாகவும், சிலர் தீவிரமாகவும்

# ஹீரோவா? வில்லனா?

இப்போது முதலில் நம் மீது வருத்தம் வரும். 'ஏன் இப்படிச் செய்தோம்' என்று. செய்ய ஆரம்பித்ததும் எரிச்சல் வரும். 'என்னடா எழவு இது, நேற்று செய்ததையே மறுபடி செய்ய வேண்டி இருக்கிறதே' என்று. எரிச்சல் கோபமாக மாறும். 'டீ வாங்கி வரட்டுமா சார்' என்று கேட்கும் பியூனை 'ஒண்

வெளிப்படுத்துவர். சாப்பிடாமல் இருப்பது, பிளேடால் கை, கால்களில் கீறிக் கொள்வது, உச்சகட்ட வெறியில் சமயங்களில் தற்கொலை செய்து கொள்ளத் தோன்றுவது - இதெல்லாம் அபாயகரமானவை. இதே மாதிரிதான் ஒருத்தர் மேலுள்ள கோபத்தை இன்னொருத்தர் மேல் காட்டுவதும். இதற்

கெல்லாம் அடிப்படைக் காரணம் மனித மூளையின் கீழ்ப் பாகத்திலுள்ள 'Temporal lobe' என்கிற பகுதியில் ஏற்படும் மாற்றங்கள்தாம். கோபமுறைகளான மிதம், மிகை, அதி தீவிரம் - இவையெல்லாம் சுபாவம் மற்றும் வளர்ப்பு முறையைப் பொறுத்திருக்கிறது.



## இது ஒரு வியாதியா?

சாதாரணமாக, நியாயமான காரணங்களால் ஒருவருக்குத் தம் மீதோ, பிறர் மீதோ ஏற்படுகிற கோபம் வியாதி அல்ல! ஆனால் கோப வெளிப்பாடு தீவிரமாகும் போது, சம்பந்தப்பட்டவரின் மூளை, 'நீ எல்லை மீறுகிறாய்' என்று எச்சரிக்கை கொடுக்காது போனால் அது வியாதியாகி விடுகிறது. முன்பு சொன்ன Temporal lobe பகுதியில் அதிகமாக Bio-chemical மாற்றங்கள் நிகழ்ந்தால் அது மனோவியாதியில் கொண்டு போய் விட்டு விடும்! மேலும் வெகு நாட்கள் நமது கோபத்தை வெளிக்காட்டாது, உள்ளுக்குள்ளேயே போட்டுக் குமைந்து கொண்டிருந்தாலும் வியாதிகள் வரும். உதாரணமாக செப்டிக் அல்ஸர், ஆஸ்துமா, ரத்த அழுத்தம் போன்றவை. அப்படி அடக்கி வைக்கப்பட்ட கோபம் திடீரென்று சீறினால் பெரும் பிரச்னை.

அடுத்து, கோபத்தையே தமது இயல்பாகக் கொண்டிருப்பவர்கள். முந்தின பிரிவினரை மாத்திரை, மருந்து மூலம் குணப்படுத்தி விட முடியும். இந்த சுபாவக் கோபக்காரர்களின் பாடுதான் டேஞ்சர். அவர்களே முயன்றுதான் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும்!

## குழந்தைக் கோபம்

சின்னக் குழந்தைகளுக்கும் கோபம் வரும். அதனைத்தான் நாம் 'பிடிவாதம்' என்று பெரும்பாலான சமயங்களில் சொல்லி விடுகிறோம். தனக்குப் பிடித்த காரியங்கள் நடக்கவில்லையென்றாலோ, கேட்டது கிடைக்கவில்லையென்றாலோ ஊரைக் கூட்டி கலாட்டா பண்ணுவதும், அழுது புரண்டு அடம்பிடிப்பதும், தரையில் முட்டிக் கொண்டு தன்னைத்தானே வருத்திக் கொள்வதும் சில குழந்தைகளின் இயல்பாக இருக்கும்.

சரியான காரணங்களுக்காக அவர்கள் கோபப்படுகிறார்கள், அவர்கள் கோபம் நியாயமானதுதான் என்று நமக்குத் தோன்றினால் - கோபத்தை அனுமதிப்பதல்ல; அவர்களின் தேவையை நிறைவேற்றுவதுதான் மிக அவசியம். அடாவடிக் கோபம் என்றால் எல்லை மீறாது கவனித்துக் கொள்வது முக்கியம். ஆனால் கோபமே படாமல் அழுத்தமாக அவர்கள் போய் உம்மென்று உட்கார்ந்து விடுவது ஆபத்து. கோபத்தை அடக்குவது உடல்நலக் கெடுதல்.

## கோபமும் உணவும்

அதிகமாகக் கோபம் வர வர, உணவின் மீது அபார நாட்டமோ அல்லது அதீத வெறுப்போ ஏற்படும். பட்டினி கிடக்கத் தோன்றும். அல்லது பகாசுரத்தனமாகச் சாப்பிடத் தோன்றும். குறிப்பாகப் பெண்களாக இருந்தால் அளவுக்கதிகமாகச் சாப்பிடுவார்கள். ஆண்களில் சிலர் கோபத்தைத் திசை திருப்புவதாகக் கருதி மதுப் பழக்கம் அல்லது சிகரெட் பிடிப்பதில் ஈடுபட்டு விடுகிறார்கள். இதில் இரண்டு தவறு. கோபத்தைத் தவிர்ப்பது ஒரு தவறு; போதைப் பொருள் பழக்கம் மற்றொரு தவறு. இரட்டை அபாயம்.

## மனம் விட்டுப் பேசுங்கள்!

இன்று யோகா என்றும், தியானம் என்றும் Workshop வகுப்புகள் என்றும் கோபத்தை அடக்க, விலக்க பல உபாயங்கள் ஆங்காங்கே சொல்லித் தரப்படுகின்றன. டாக்டர்களும், இதயக் கோளாறுகள் மற்றும் ரத்தக் கொதிப்பு உள்ளவர்களிடம் 'நீங்கள் டென்ஷன் அடையக் கூடாது' கோபப்படக் கூடாது என்று ஒவ்வொரு முறையும் கூறுகிறார்கள். ஆனால் அடிமனதில் இருக்கும் கோப உணர்வினை, மன உளைச்சலை வெளிக்கொணர்ந்தாலே, பாதி வியாதி போய் விடும்! இதற்கு யாரிடமும் கோபப்பட வேண்டியதில்லை; உற்ற நண்பரிடமோ, மனைவியிடமோ மனம் விட்டுப் பேசினாலே கூட நல்ல பலன் கிடைக்கும்!

டாக்டர் சந்திரசேகர் சொல்லக்
கேட்டவர் : கீதா மோகன்
நடிப்பு : எஸ். ஆராவமுதன்,
ஆண்டாள்
வண்ணப்படம் : கோபிநாத்



* பட்டு சுந்தரம்



* [illegible]



* சேக் தாவூத்




மாடர்ன் ஆர்ட் - சலூன் செலவைப் பெரிதும் குறைக்கிற விஷயம் என்பதாகப் பரவலாகச் சொல்லப்படுகிறது. ஓவியர்களின் இடது கைக் கிறுக்கல் என்று கிண்டலடிப்பவர்கள் நாட்டில் இன்னமும் இருக்கிறார்கள். இதையெல்லாமும் மீறி, இந்த மேற்கத்தியக் கலை வளர்ந்தபடிதான் இருக்கிறது.

# ஒன்றுமே புரியலே, உலகத்துலே!

மக்களுக்கு மாடர்ன் ஆர்ட் எந்த அளவுக்குப் புரிகிறது என்பதற்கான ஒரு மினி சர்வே எடுக்கத் தோன்றியது. ஓவியர் மருதுவின் படங்களைச் சிலர் சிந்தனையின் முன் வைத்தோம்.

திருஞானசம்பந்தம் : நல்லாப் புரியுது சார். லெஃப்ட்டுல இருக்கறது நரசிம்ம ராவ். ரைட்டுல இருக்கறது மேத்தா. சூட்கேஸ் விஷயத்தைத்தான் வரைஞ்சிருக்காரு. ரெண்டு பேரும் முகமூடி மாட்டிக்கினு பூச்சாண்டி காட்றாங்க. அதானே?



இரண்டுக்குப் பிறகு வேண்டாம்னாங்க. அப்புறம் ஒன்று பெற்று ஒளிமயமாய் வாழ்கன்னாங்க. இனிமே, 'நாமே இருவர் நமக்கெதற்கு இன்னொருவர்'னு சொல்லப் போறாங்க. அதைத்தான் இவர் படத்துல மறைமுகமாச் சொல்லியிருக்கார்.

ஷேக் தாவூத் : வேலைக்குப் போற பொண்ணுக்கு ரெண்டு முகம்; போகாத பெண்ணுக்கு ஒரே முகம். இதான் விஷயம். அதுசரி, படத்துல இருக்கறது பொண்ணுங்க தானே?

லாவண்யா : சந்தேகமே இல்லை. படத்துல இருக்கறது அரசியல் வாதிங்கதான். முகமூடியெல்லாம் அவங்க சமாசாரம்தான். ஒரே ஒரு திருத்தம்: ஒண்ணு ரெண்டோட முடிஞ்சிடறதில்லை, அவங்களுக்கு ஹோல்ஸேலாத்தான் முகமூடிகள் வரையணும்!''

மனோகரி : இது வரதட்சணை சமாசாரங்க. பொண்ணுக்கு, குடுக்க முடியலை. ஆனா, குடுக்காட்டா நித்ய கன்னிதான். ஆம்பளைக்குப் பொண்ணுமேல ஆசைதான். ஆனா வரதட்சணையை விடவும் மனசில்லே! நைசா தான் நழுவிட்டு அப்பா, அம்மாவை வாங்க வெச்சிருவான். இந்த ரெட்டை வேஷத்தைத்தான் சிம்பாலிக்கா காட்டியிருக்காரு.

லட்சுமணன் : இது குடும்பக் கட்டுப்பாடு விஷயங்க. முதல்ல

பட்டு சுந்தரம் : மெக்கானிகல் லைஃபைத் தாண்டி ஒரு சுய முகம் இருக்குங்கறதை இந்தப்படம் சொல்கிறது.

தொகுப்பு : எஸ். சந்திரமௌளி.

புகைப்படங்கள் : பாலாஜி.

(பி.கு. : தமது படம் குறித்து மருது என்ன சொல்கிறார்? பார்க்க: பக்கம் 47)

* திருஞானசம்பந்தம்



* லாவண்யா



* மனோகரி



# நேர்த்திக் கடன்

எம்.பி குவார்ட்டர்ஸ்....

மூலைத்தார் வேட்டியும் கருட்டுமாக லானில் உட்கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தவர் சிவாஜியைப் பார்த்ததும் எழுந்து வந்தார்.

வாய் பேச மறுத்தது. என்னவோ பயம். 'இங்கிலீஷ்லே ரெண்டு வார்த்தை பேச முடியாம என்ன எம்.ஏ படிப்பு படிக்கக் கிழிச்சே...' என்கிறது போல அவர் கருட்டை எடுக்காமலேயே இவனைக் கூர்ந்து பார்க்க, காகிதத் துண்டை நீட்டினான்.

'அடய்க்கப்பென் எம்.பி... அவர் தொகுதிக்குப் போயிருக்கிறார் போலிருக்கிறதே'. வெள்ளைக்கார பாணி இங்கிலீஷ் நாட்டுச் கருட்டுப் புகையோடு முகத்தில் அறைகிறது.

சிவாஜிக்கு அடைக்கப்பன் எம்.பியைப் பார்க்க வேண்டாம். அவர் சர்வண்ட் குவார்ட்டர்ஸுக்கு வழி தெரிந்தால் போதும். அங்கே ஒரு... ஐ வாண்ட் டு மீட் எ.... 'எ'யா 'ஆன்' ஆ... ஓல்ட் ஜென்டில் மேன் ஹூஸ் நேம் இஸ் சாத்தப்பன்... 'இது இங்கிலீஷா' என்கிற பார்வை பதிலாகிறது.

யாரோ தோளில் துணிப்பையோடு அருகில் வந்ததை ஓரக் கண்ணால் பார்த்தான்.

''யார் வேணும் தம்பி...'' அப்பாடா... தமிழ்.

கருட்டுக்காரரிடம் ஏதோ சொல்ல அவர், சிரித்தபடி இவன் தோளில் தட்டி விட்டுத் திரும்பப் போனார்.

''அவர் யார் தெரியுமா... கே.கே. மஜூம்தார்.... வங்காளத்து எம்.பி... எதிர்க் கட்சி.. எப்பவும்.. பேச ஆரம்பிச்சா பிரதம மந்திரியே கூர்ந்து கவனிப்பாரு....''

நடந்து கொண்டே சொன்னார். இவர் யார்?

''சாத்தப்பச் செட்டியார்னு ஒருத்தரைப் பாக்க லெட்டர்...''

''நான்தான். சாவன்னாம்பாங்க இங்கே எல்லாரும்..''

சிவாஜி அவரை நிமிர்ந்து பார்த்தான். அறுபது வயதுக்கு மேல் தேறும். ஆறடி உயரம். லேசான கூன் முதுகு. பாதி வழுக்கைத் தலை. கிரேக்கச் சிற்பம் போல கூர்மையான மூக்கு. பைஜாமா. வார்செருப்பு.

எம்.பி. சொல்லியனுப்பிப் பார்க்க இவர் என்ன பெரிய ஆளா?

''இங்கிட்டு வா தம்பி... பேரு என்ன சொன்னே... சிவாசியா... நல்லா இரு. எந்த ஊரு?''

''நாட்டரசன் கோட்டை.''

''ஏயப்பா... கண்ணாத்தா கோயில் இருக்கிற ஊராச்சே... பர்மாவுலே இருந்த நாள் தொட்டு போகணும்னு நினைக்கறது... வருஷம்தான் போவுது...''

பர்மாக்காரர் டெல்லியில் என்ன செய்கிறார்?

''ஆச்சு முப்பது வருஷம்... ஆறு எம்.பி. பாத்தாச்சு. எல்லோருக்கும் நான்தான் குவார்ட்டர்ஸ் கவனிச்சுக்க, லெட்டர் போக்குவரத்தைக் கவனிச்சுக்க, வர்றவங்க போறவங்களைக் கவனிச்சுக்க...''

''அண்ணன் அடுத்த வாரம் வரதாச் சொன்னாப்பலே...'' சிவாஜி தனக்கும் எம்.பியோடு கொஞ்சம் நெருக்கம் உண்டு என்று காட்டிக் கொண்டான்.

''பதினாலாந்தேதி இல்லே வராக.... செஷனே பதினஞ்சு தேதிக்குத்தானே.. நம்பிக்கையில்லாத் தீர்மானம் வேறே வருது... பார்ட்டி விப் இருக்கே... வராம முடியுமா...''

டெல்லியில் கல்தூணைத் தட்டினாலும் பார்லிமெண்ட் விவகாரம் பேசும்....

''இதான் நீங்க இருக்கப்போற எடம்.... அங்கிட்டுத் தெரியறதுதான் நம்ப எம்.பியோட வீடு....''

பூட்டைத் திறந்தார். கொடியில் ஓரங்கியும், பனியனும் கண்ணில் பட்டன.

''செழியனும் ராசாமணியும் ஆபீஸ் போயிருக்காங்க... சாயந்திரம் ஆறு மணியாயிடும் வரதுக்கு....''

''அவுக யாரு?''

''உன்னைய மாதிரித்தான். நம்ப பக்கத்துப் புள்ளைங்க... ரெண்டு வருஷமா இங்கேதான் இருப்பு....''



இந்தக் கிழவரோடு தனியே தங்க வேண்டியதில்லை. வயசுக்கு ஒத்த இன்னும் இரண்டு இளவட்டங்கள்... தமிழ் பேசுகிற வர்கள்....

**ஃப**ட்பட்டி ஆரிய சமாஜவீதியில் ஊர்ந்து கொண்டிருந்தது. சாயந்திரமானாலும் தகிக்கிற அனல் சூடு. குல்பி ஐஸ்கிரீம் விற்கிற கடைகளில் நிரம்பி வழிகிற கூட்டம். எலாஸ்டிக் ஜட்டியும், மாக்சியும் பரத்திய நடைபாதைகள். ஹெல்மெட்டும் பிரம்பு நாற்காலியும் வாங்கிப் போகிற வர்கள். எண்ணெயில் பொரியும் ஜிலேபி வாசனையோடு கரோல்பாக்.

வாகன இரைச்சலை மீறி செழியன் அடுத்தவாரம் நடக்கப் போகிற அக்கிரோ குரசோவா படவிழாவைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தான்.

இரண்டே மாதத்தில், ஆயுசு பூராப் பழகிய மாதிரி அவனும், ராஜாமணியும்

இரா.முருகன்

சிவாஜிக்கு நெருக்கமானார்கள்.

''ராஷமோன்னு ஒரு படம்... கதை என்னன்னா....''

''இந்த சந்திலே ஒரு தமிழ்க்காரர் மெஸ் நடத்தறார்...''

செழியனுக்குக் கலை, இலக்கியம், கன்தாரன முகாம், பிலிம் பெஸ்டிவல். ராஜாமணிக்கு சாப்பாடு....

''சாவன்னாவையும் கூட்டி வந்திருக்கலாம்...'' பட்பட்டியிலிருந்து ஒரு பஞ்சாபிக்கிழவி இறங்க உதவிக் கொண்டு செழியன் சொன்னான்.

சாத்தப்பச் செட்டியார் காலையில் ஆபீஸ் கிளம்புகிறபோது ஐம்பது ரூபாய் கேட்டார். சாயந்திரம் ஆள் கண்ணில் படவில்லை.

''அடுத்த வாரம் எம்.பி. சிம்லாவிலிருந்து வந்ததும் தரேன்....''

''ஏழு மணி ஆச்சுடா... நடராஜன் மெஸ்ஸிலே சாப்பிட்டுட்டுப் போக வேண்டியதுதான்...'' செழியன் கடிகாரத்தைப் பார்த்தான்.

குருத்துவாராவுக்குச் சற்று முன்னால் இடப்புறம் திரும்ப, உள்ளே விரிகிற தெருவில் காய்கறிக்கடைகள். தமிழும் கன்னடமுமாக ஒரு விநோதமான கலவையில் பேசுகிற கடைக்காரர்கள். 'என்னம்மா வேணும்' என்ற கேள்விக்கு 'ஆதா கிலோ பிண்டி.... ஏக் பாவ் டிண்டா' என்கிற மடிசார் மாமி...

சட்டென்று விளக்குப் போவது. இருட்டில் முட்டி மோதிப் போகிற ஜனக்கூட்டம். மெழுகு வர்த்திகள் பூசணிக்குவியலின் மேல் ஒளிவிட ஆரம்பித்தன.

''அங்கே பார்டா... நம்ப சாவன்னா...''ராஜாமணி காட்டிய திசையில் சாவன்னா யாரோ ஒரு கடைக்காரப் பெண்ணுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார். முப்பது வயது காணும். நெற்றியில் திருநீறு பாதி இருட்டிலும் வெளீரெனத் தெரிந்தது.

''இந்த வயசிலும் கேர்ள் பிரண்டா.... மச்சம்...'' ராஜாமணி சிரித்தான். சாவன்னா பையிலிருந்து எடுத்த பணத்தை, அவள் வேண்டாம் வேண்டாம் என மறுக்க, கையில் வைத்து அழுத்திவிட்டு நடந்தார்.

''என் பணம்டா'' என்றான் ராஜாமணி.

திரும்பியபோது குவார்ட்டர்ஸ் வாசலில் தரையில் உட்கார்ந்து சாவன்னா காலில் எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தார்.

''பர்மாவிலேன்னா கைகால் பிடிக்கவிட எப்பவும் நாலுபேரு தயாரா இருப்பாங்க...''

என்னவோ முந்தாநாள்தான் அங்கிருந்து வந்தது போல....

''கரோல்பாக் பக்கம் ஆள் கிடைக்குமே'' ராஜாமணி மெல்லச் சொன்னது அவர் காதில் விழவில்லை. செழியன் ராஜாமணியை முறைத்தான்.

''சாவன்னா பர்மாவிலே படம் எடுத்ததாக் கேள்விப்பட்டேனே...'' சிவாஜி புதிதாக வாங்கிய ஷூவை அணிந்து நடைபயின்றபடி கேட்டான். லேசாகக் கடிக்கிற உணர்வு... சாவன்னாவிடம் எண்ணெய் கேட்டு வாங்கிப் போட்டுப் பார்க்கலாமா....

''பர்மாவிலே இல்லே தம்பி... இங்கே வந்ததுக்கு அப்புறம்தான்....''

குழந்தை போலச் சிரிக்கிற சாவன்னா....


''படம் என்னாச்சு?''

''கோவிந்தா... கோவிந்தா'' ராஜாமணி படுத்துக் கொண்டே சொன்னான்.

செல்லுலாயிட் கனவுகளால் சீரழிந்த சாவன்னா.....

''எல்லாம் போச்சு தம்பி... இன்னமும் ஒரே ஒரு ஆசைதான்... முடிஞ்சா நிம்மதியாக் கட்டையைச் சாச்சிடலாம்... சாலாச்சிக்காக வேண்டிக்கிட்டேன்.... உங்க ஊருக்குத்தான்... கண்மலர் காணிக்கை தரேன்னு....''

''யாரு சாவன்னா சாலாச்சி?''



''மக... பதினஞ்சு வயசுலே பர்மாவிலே வைசூரியிலே போய்ட்டா.... அடுத்த வருசமே ஆச்சியும்...''

இருட்டில் அவர் விசும்புகிற சப்தம்.

''அவளுக்கு நாலு வயசா இருக்கும் போது கண் நோவு வந்தது. கண்ணாத்தாளுக்கு நேர்ந்துக்கிட்டு சரியாப் போச்சு. நேர்த்திக் கடனை இன்னமும்தான் கழிக்கறேன்... சாலாச்சி போனா என்ன... கண்ணும் முழியும் அவ போற வரைக்கும் நல்லா வச்சிருந்தது தெய்வம்தானே... கடன் இன்னும் நிக்குது சிவாஜி.''

அவர் குரல் மெல்லத் தேய, சிவாஜி தூக்கம் கலைந்து இருட்டில் வெறித்துக் கொண்டிருந்தான்.

டிசம்பர் குளிரில் டில்லி உறைந்து கொண்டிருந்தது. கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ் பதினொன்று மணிநேரம் லேட். ஆட்டோ யாரும் வரத் தயாரில்லை என்று சொல்லிவிட, நல்ல வேளையாக மினிபஸ் கிடைத்தது. தீன்ஜனவரி தெரு பக்கம்

சிவாஜி இறங்கிக் கொண்டான். நடக்க வேண்டும் போல கால் நமநமத்தது.

வழக்கம் போல எம்.பி. குவார்ட்டர்ஸ் அமைதியில் மூழ்கி இருந்தது. லோக்சபை கலைக்கப்பட்டு அடுத்த தேர்தலுக்காக நாடே தயாராகிக் கொண்டு இருக்கிறது. அடைக்கப்பன் எம்.பிக்கு மறுபடி டிக்கட் கிடைத்து, திரும்பவும் ஜெயித்து... தங்க வேறு இடம் பார்க்க வேண்டி இருக்குமா?

கதவு பூட்டி இருந்தது. செழியனும் ராஜாமணியும் எங்கே? வருவதாக ஊரிலிருந்து எழுதின கடிதம் கிடைத்திருக்காதோ? சாவன்னா எங்கே போனார்?

தன்னிடமிருந்த சாவியால் கதவைத் திறந்தான். செழியனின் ஸ்வெட்டரும், ராஜாமணியின் புல்-ஓவரும் ஸ்வெட்டரும் தாறுமாறாக இறைந்து கிடந்தன. தரையெல்லாம் குப்பையும் கூளமும்.

பெட்டியைக் கட்டிலில் வைத்தான். அம்மா தெக்கத்தி மிட்டாயும் இன்னும் ஏதேதோ எண்ணெய்ப் பலகாரமும் கொடுத்து அனுப்பியிருக்கிறாள்.

சாவன்னாவுக்காக கண்ணாத்தா கோயில் பிரசாதம் கொண்டு வந்து இருக்கிறான்.

ராத்திரி பதினொரு மணிக்கு காலிங் பெல் சப்தம். செழியனும் ராஜாமணியும். களைத்த கண்கள்.

''எப்ப வந்தே சிவாஜி?'' ராஜாமணி குரலில் உயிர் இல்லை.

செழியன் சாக்ஸோடு நாடாக்கட்டிலில் தொப்பென்று விழுந்தான். முனையில் வைத்திருந்த லெதர் பை சரிந்து பலகாரம் உருண்டது.

''அம்மா கொடுத்து விட்டுச்சு... நாளைக்கு சாப்பிடலாம்... சாவன்னாவுக்கு தனியா வாசனைப் புகையிலை கூட வாங்கியாந்திருக்கேன்....''

செழியன் ராஜாமணி முகத்தைப் பார்த்தான்.

''சாவன்னா போய்ச் சேர்ந்தாச்சு சிவாஜி. இன்னியோட நாலுநாள் ஆச்சு...''

ராஜாமணி மெல்லச் சொன்னான்.

''இவன் ஆபிஸுக்குப் போய்ட்டான். நானும் கிளம்பிட்டு இருந்தேன்... சாவன்னா திடீர்னு மாரைப் பிடிச்சுக்கிட்டு உக்காந்தாரு... வென்னீர் வச்சுத்தான்னாரு.. கொண்டு வந்து கொடுத்தேன்... ஒரு உதவி செய்யணும்னாரு... சொன்னதும் உசிரு போச்சு.....''

செழியன் கண்கள் நிறைந்தன. சிவாஜிக்கு வாய்விட்டு அழ வேண்டும் போல... ஒரு சமவயது சிநேகிதனை இழந்த துக்கம்...

''நாட்டரசன்கோட்டையிலே வெள்ளியிலே கண்மலர் நேர்ச்சை தரணும்னு சொல்லிக்கிட்டே இருந்தார். நானாவது கொடுத்திருக்கலாம்.... தோணவே இல்லை. அம்புட்டு தூரம் போய்ட்டு சும்மா வந்திருக்கேன்....''

சிவாஜிக்குத் தன் பேரிலேயே வெறுப்பு வந்தது.

''எல்லா நேர்த்திக் கடனும் கழிச்சாச்சு சிவாஜி. காலையிலே கூட வா....''

காலையில் ஐந்து மணிக்கே அவர்கள் புறப்பட்டார்கள். பனி மூட்டத்தில் இந்தியா கேட் வழியாக வேகமாகப் போகிற ஆட்டோ. சிவாஜி ஸ்வெட்டரைக் காதுக்குப் பின்னால் உயர்த்திக் கொண்டான்.

''இறங்கு சிவாஜி... இது லயன்ஸ் கண் ஆஸ்பத்திரி....''

வாசலில் நின்ற பெண் இவர்களைப் பார்த்து ஓடி வந்தாள்.

''அண்ணா... பத்து மணிக்கு ரெடியா இருக்கச் சொன்னாங்க....''

கரோல்பாக் கறிகாய்க்கடைப் பெண்.

''பிள்ளை எங்கே?'' செழியன் கேட்டான்.

''உள்ளே இருக்கானுங்க...''

கட்டிலில் படுத்திருந்த சின்னப் பையனின் கண்களைச் சுற்றிக் கட்டுத்துணி.

''நீ எம்மவ சாலாச்சி போல இருக்கே... அதான் உன்பேர்லே வாஞ்சைம்பாரு.... உசிரு போற நேரத்துலே கூட என்னை நினைச்சுக்கிட்டு... உங்க மூலம் என் பிள்ளைக்குக் கண்ணு கொடுத்தாரே.... தெய்வம் எங்க அய்யா....'' செழியனைக் கடந்து விழிகள் நிலைக்க, கும்பிடக்குவிந்த கைகள்.

சின்னப் பையனை மெல்லத் தொட்டான்.

''உன் மாமன்மாரெல்லாம் உன்னைப் பாக்க வந்திருக்காங்கடா... ஐயாவோட கண்ணாலே முதல்லே அவங்களைத்தான் நீ பாக்கணும்... அந்த வயசுலே கண்ணைப் பறிச்சுக்கிட்ட தெய்வத்தைக் கூட அப்புறம் பாத்துக்கலாம்....''

''கார்னியல் டிரான்ஸ்பிளாண்ட்... சாவன்னா போய் ரெண்டு மணி நேரத்துலே எடுத்து இவனுக்கு வச்சது...'' செழியன் மெல்லச் சொன்னான்.

சிவாஜி கட்டில் பக்கம் குனிந்து திக திகக்கிற குரலில் கேட்டான்.

''பேரு என்ன தம்பி?''

''கண்ணப்பனுங்க....''

''உங்க வீட்டுக்கு வந்த திருடனோட அங்க அடையாளங்களைச் சொல்ல முடியுமா?''

''அதெல்லாம் எதுக்கு சார்? இந்தாங்க, அவன் கொடுத்துட்டுப் போன விசிட்டிங் கார்ட்!''

– ஞா. ஞானமுத்து.

# ஸ்ரீ தேவியின் பேரருளைப் பெற நவராத்திரியி

| நாள் | ஒன்பது பொருள்களைக் கொண்டு | ஒன்பது விதமான கோலங்கள் போட வேண்டும். | சுமங்கலிகளுக்கும் கன்னி பெண்களுக்கும் நீராடக் கொடுக்க வேண்டும். | | சக்தியுள்ளவர்கள் பெண்களை வீட்டுக்கு அழைத்து நவரத்தினம் கொடுக்கலாம். | வசதியற்றவர்கள் இவைகளைக் கொடுக்கலாம். |
|---|---|---|---|---|---|---|
| 1 | அரிசிமா | பொட்டு | பாசிலை | எண்ணெய் | பொன் | சோழி |
| 2 | கோதுமைமா | கட்டம் | பூலாங்கிழங்கு | மஞ்சள் | வெள்ளி | குன்றிமணி |
| 3 | முத்து | மலர் | சண்பக மொட்டு | குங்குமம் | முத்து | தட்டைப் பவளம் |
| 4 | அட்சதை | படிக்கட்டு | கஸ்தூரி மஞ்சள் | பன்னீர் | பவளம் | கிளிஞ்சல் |
| 5 | கடலை | பறவையினம் | இரவியப்பட்டை | சந்தனம் | வைடூரியம் | செப்பு |
| 6 | பருப்பு | தேவிநாமம் | காசுக்கட்டி | வாசனைத் தைலம் | கோமேதகம் | பதுமை |
| 7 | மலர் | நிர்டாணி | லாவுராஸம் | நலங்கு மஞ்சள் | புஷ்பராகம் | அம்மானை |
| 8 | காசு | பத்மம் | கஸ்தூரிகா பத்ரம் | மருதோன்றி | மரகதம் | பந்து |
| 9 | கற்பூரம் | அபூதம் | கோரோஜனம் | புஷ்பநீர் | வைரம் | கழற்சிக்காய் |

இவைகளை செய்ய முடியாதவர்கள் கீழ்க்கண்ட எமது இனிப்பு கா

**இனிப்பு :** பாதாம் அல்வா, கோதுமை அல்வா, பால் அல்வா, முந்தி
பப்டி, பாதுஷா, குலாப்ஜாமூன், ரஸமலாய், கர்ஜிக்காய் பேடா, பருப்பு

**காரம் :** தட்டை, தேன்குழல், கைமுறுக்கு, மிக்ஸர், சமோசா, சீ

**திருமண வைபவங்களுக்கு :** சீர் அதிரசம், சீர் முறுக்கு, பருப்பு

## தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு, காந்தி நகர், அடையாறு, சென்னை-600 020

# ...செய்ய வேண்டிய சில அனுஷ்டானங்கள்

| ...குமரிகளுக்கும், சுமங்கலிகளுக்கும், பக்தியுடன் தன் கையால் பொட்டு இடலாம். | தினசரி காலை, மாலை மேற்கண்ட ராகங்களில் ஸ்ரீ தேவி சம்பந்தமாக பாடலாம். | மேற்கண்ட வாத்தியப் பின்னணிகளுடன் பாடலாம். | மேற்கண்ட மலர்களைக் கொண்டு மாலை அணிவிக்கலாம். | மேற்கண்ட தழைகளைக் கட்டி மாலைகளாகக் கட்டி சாத்தலாம். | பெண் குழந்தைகளுக்கு ஒவ்வொரு நாளும் நிவேதிதமாகக் கொடுக்கலாம். | பாலா என்னும் பருவத் திருமேனியின் [illegible] | மேற்கண்ட பிரசாதங்களை விநியோகிக்கலாம். |
|---|---|---|---|---|---|---|---|
| ...குரு | தோடி | மிருதங்கம் | மல்லிகை | வில்வம் | வாழை | சுண்டல் | வெண்பொங்கல் |
| ...ஜவ்வாது | கல்யாணி | புல்லாங்குழல் | முல்லை | துளசி | மா | வறுவல் | புளியோதரை |
| ...கஸ்தூரி | காம்போதி | வீணை | சம்பங்கி | மரு | பலா | துவையல் | சர்க்கரைப் பொங்கல் |
| ...அரகஜா | பைரவி | கோட்டு வாத்தியம் | ஜாதி | கதிர்ப்பச்சை | கொய்யா | பொரியல் | கதம்பம் |
| ...சந்தனம் | பந்துவராளி | ஜல்லரி | பாரிஜாதம் | விபூதிப்பச்சை | மாதுளை | அப்பளம் | ததியோதனம் |
| ...குங்குமம் | நீலாம்பரி | பேரி | செம்பருத்தி | சந்தனஇலை | நாரத்தை | வடகம் | தேங்காய்சாதம் |
| ...சாந்து | பிலஹரீ | படகம் | தாழம்பூ | தும்பைஇலை | பேரிச்சை | சூரணம் | எலுமிச்சம் பழம் சாதம் |
| ...ரிசூர்ணம் | புன்னாக வராளி | கும்மி | ரோஜா | பன்னீர் இலை | திராட்சை | முறுக்கு | பாய சான்னம் |
| ...மை | வஸந்தா | கோலாட்டம் | தாமரை | மருக் கொழுந்து | நாவல் | திரட்டுப்பால் | அக்காரஅடிசில் |

...வகைகளை வாங்கி விநியோகிக்கவும்.

...தலி, பாதம் கத்தரி, ஜாங்கிரி, லட்டு, மைசூர்பாகு, சாக்லட் கேக், சோன்
...போளி, தேங்காய் போளி, சம்சம் சம்பாக்களி, கோவா சேன்டுவிச் முதலியன.

...முதலியன.

...தேங்காய், கட்டிப்பருப்பு, திரட்டுப் பால், முள்ளு தேன்குழல் முதலியன.

...ன் : 412557

## 39. பார்த்தனுக்கு சாரதி



மனித மனம் விசித்திரமானது. நீண்ட காலப் பழக்கம் உள்ளவரை விட சொற்ப காலப் பழக்கமே உள்ள சிலரிடம் அதீதப் பற்று ஏற்படுத்திக் கொள்கிறது. அதற்குக் காரணமோ, காரியமோ, விளக்கமோ கூற இயலுவதில்லை. அந்தப் பற்றும் காதல் என்னும் அற்புத உணர்வாக இருந்து விட்டால் அதன் வயப்பட்டவர்களிடம் தோன்றும் மாறுதல்கள் எத்தனையெத்தனையோ. அதனால் உருவாகும் பற்றும் பாசமும் உயிர் உள்ளவரை அகலுவதேயில்லை. காதல் உணர்வு எத்தனையோ காவியங்களைப் படைத்திருக்கிறது. எத்தனையோ மன்னர்களை முடியிழக்கச் செய்திருக்கிறது. பெரும் அறிவாளிகளையும் அடிமுட்டாளாக்கியிருக்கிறது. பரம கோழையாயிருப்பவனை அசகாய வீரனாக்கியிருக்கிறது. உணவும் உறக்கமும் கூட மறந்து விடுகிறது. மனம், இல்லாததை இருப்பதாகவும், இருப்பதை இல்லாததாகவும் எண்ணி கற்பனையில் மிதக்கிறது!

அம்மங்கையின் நிலையும் இப்படித்தானிருந்தது. தனிமையிலமர்ந்து சிந்தனையில் மூழ்கி விடுவதும், சிரித்துக் கொள்வதும், கண்ணீர் விடுவதுமாக அவள் போக்கே மாறியிருந்தது. துள்ளல் மிகுந்த நடை அமைதியான மெல்லிய நடையானது. நேரான பார்வை மாறி நிலத்தையும் வானத்தையும் வெறித்தது. ஓயாது பேசும் பவள இதழ்கள் திறப்பதும் முத்துச் சரவரிசையைக் காட்டுவதும் அரிதாகியது. எப்போதாவது ஒலிக்கும் சிரிப்பும் ஜீவனற்று இருந்தது.

மதுராந்தகனைப் பற்றி செய்தி சொல்லக்கூடியவர் இருவர்தாம். ஒருவர் பேரமைச்சர் நம்பிப் பல்லவராயர். அந்தப் பொல்லாத கிழவரோ அரையனைத் தவிர மற்றெல்லாவற்றையும் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். மற்றொருவன் விக்கிரமன். அவன் கண்களில் தென்படுவதே இல்லை. அரண்மனையில் தங்கும் நேரங்களிலும் ஓலைகளுடன் வீரர்களை திசைக்கொருவராக அனுப்புவதும் அமைச்சருடன் தர்க்கிப்பதுமாக இருந்தான். அம்மங்கையைப் பற்றி எவரும் கவலைப்பட்டதாகவே தோன்றவில்லை. வைகுந்தன் ஆலயம் மட்டுமே அவளுக்கு ஆறுதலளித்தது.

அன்று மாலை இருள் கவியும் நேரத்தில் நந்தவனத்துப் பொய்கையினருகில் அவள் சோகச் சித்திரமாக அமர்ந்திருந்தாள். பொய்கையின் அல்லி விழிகள் அவளைப் பரிதாபத்துடன் பார்த்தன. அவள் கரிய விழிகளைத் தனது இணையென்று எண்ணியதாலோ என்னவோ கயல் ஒன்று துள்ளிக் குதித்து நீரில் பாய்ந்தது.

மதுராந்தகன் அவளை மேலை மங்கலத்திலிருந்து மீட்ட நிகழ்ச்சிகள் அவள் நினைவில் வலம்வந்து கொண்டிருந்தன. அவன் வெகு அலட்சியமாக உப்பரிகைத் தூணில் சாய்ந்து நின்றதும், கூர்மையாகப் பளிச்சிட்ட அவன் விழிகளும், நீளமான அந்த வாளும், மாறவர்மன் கூச்சலைக் கேட்டும் பதற்றமடையாத அவன் நிதானமும் அவள் இதழ்களில் புன்னகை ஒன்றை மலரச் செய்திருந்தன.

அவளுக்குப் பின்னால் சற்றுத் தொலைவில் பேச்சுக் குரல்கள் அவள் சிந்தனையைக் கலைத்தன. மெலிதாக ஒலித்த கார்குழலியின் குரலைத் தொடர்ந்து, விக்கிரமனின் குரல் சற்று பலமாகக் கேட்டது.



# மகள்

விஷ்வக்சேனன்

''கார்குழலி, நாளை நீ மதுரைக்குக் கிளம்ப வேண்டும்.''

''மதுரைக்கா?'' கார்குழலியின் குரலில் அதிர்ச்சி தெரிந்தது.

''ஆம். மதுரைக்குத்தான். இந்தப் போர் முடியும் இடம் அதுதான். அந்த நேரத்தில் நீ அங்கிருக்க வேண்டும் என்பது மன்னர் உத்தரவு.''

''அம்மங்கை?''

''அவளும் உன்னுடன் வருவாள்.''

''நீங்களும் வருகிறீர்களா?''

''இல்லை. நான் படைகளுடன் கோட்டாற்றுக்குச் செல்ல வேண்டும்.''

''எங்களுடன் வரப் போவது யார், ஜெயந்தனா?''

''இல்லை. பெரிய காவல் படையே வருகிறது. நீ அஞ்ச வேண்டிய அவசியமேயில்லை.''

தீர்மானத்துடன் ஒலித்த பதில், அதற்கு மேல் ஏதும் கேட்பது கூடாதென்பதைத் தெளிவாக்கவே கார்குழலி மௌனமானாள்.

இருவர் காலடியோசையும் அம்மங்கையை அடுத்திருந்த மலர்ச் செடிகளை நெருங்கியது.

கார்குழலி மீண்டும் வினவினாள்.

''அம்மங்கையின் நிலை மனத்தை உருக்குகிறது இளவரசே. அவர் எங்கிருக்கிறார் என்பதையாவது அவளுக்குத் தெரிவிக்கலாகாதா?''

விக்கிரமன் குரல் சற்று நெகிழ்ந்திருந்தது.

''கார்குழலி, அவன் இப்போது இருப்பது எதிரிகளின் கோட்டையில். நாம் வெளிப்படுத்தும் சிறு தகவலும் அவனுக்குப் பேராபத்தாக முடியலாம். இன்னும் இரு தினங்களில் அவன் அங்கிருந்து மீண்டு விடுவான். பிறகு நானே இதைப் பற்றித் தெரிவிக்கிறேன். அவளை வீணாகக் கலங்க வைப்பதில் எனக்கு விருப்பமில்லை. உண்மை அல்லாதவற்றை நான் கூறுவதும் கிடையாது.''

மலர்ச் செடியின் மறுபுறத்திலிருந்த அம்மங்கைக்குத் தன்னிடம் விக்கிரமன் அதிகம் பேசுவதைத் தவிர்க்கும் காரணம் இப்போது புரிந்தது. அவள் விழிகளிலிருந்து இரு முத்துக்கள் உதிர்ந்து புல்தரையில் உருண்டன.

அதற்கு மேலும் அங்கு தான் அவர்கள் அறியாமல் மறைந்து அமர்ந்திருப்பதும் அவர்கள் அந்தரங்க உரையாடலைக் கேட்பதும் முறையல்ல என்பதை உணர்ந்த அம்மங்கை இருளோடு இருளாக நகர்ந்தாள்.

## அருள்வாக்கு

கிருஷ்ண பரமாத்மா சரீரத்தை பரித்தியாகம் பண்ணிவிட்டு, லோகத்தை விட்டுப் புறப்பட்டவுடன், ஒரு பெரிய இருட்டு வந்து சூழ்ந்து கொண்டு விட்டது. கிருஷ்ண பரமாத்மா பேரிலும் இருட்டு



(கிருஷ்ண-கறுப்பு); அவர் பிறந்ததும் இருட்டு; காராக்கிருஹத்திலே நட்ட நடுநிசியிலே அவர் பிறந்தார். ஆனால் அவரே லோகத்துக்கெல்லாம் ஞான ஜோதியாக இருந்தார். கருணை ஜோதியாக அருட் பெருஞ்ஜோதியாக இருந்தார். அவர் மறைந்ததும் ஞானத்துக்குப் பெரிய ஹானி உண்டாகி பெரிய இருள் சூழ்ந்து விட்டது. கெட்ட சக்திகளுக்கு ஒரு ரூபமாக இருக்கப்பட்ட கலி புருஷனுக்கு அதிகாரம் ஏற்பட்டு விட்டது. இதெல்லாம் எதற்காகவோ பரமாத்மாவே விளையாடிப் பார்த்துக் கொள்கிற லீலைதான்.

ஒரே ஜோதியாக வந்தார்; அப்புறம் ஒரே இருட்டு வந்து விடுமோ என்று பயப்படும் படியான நிலையை உண்டுபண்ணினார்; இதற்கப்புறம் ஒரு கருணை உண்டாகி, 'லோகம் இப்படி ஒரேயடியாக வீணாகி விட வேண்டாம்; கலிக்குக் கொஞ்சம் மாற்று

அடுத்த நாள் பொழுது புலர்ந்த பின் அம்மங்கையைக் கண்ட கார்குழலியும், புவனமகாதேவியும் வியப்புக் கலந்த மகிழ்ச்சியில் திகைத்தனர். அம்மங்கையின் கலகலப்பும் நகைப்பும் மீண்டும் அரண்மனையில் எதிரொலித்தன. அவளையும் கார்குழலியையும் மதுரைக்குப் பயணப்பட விக்கிரமன் பணித்த போது சிரித்தபடியே ஒப்புக் கொண்டாள்.

பயணப்படுவதற்கு முன் ஆலயத்துக்குச் சென்ற அம்மங்கை, பிரமித்தாள். என்ன காரணத்தாலோ அன்று வைகுந்தனுக்கு அலங்காரங்கள் அபரிமிதமாயிருந்தன. விக்கிரமன் யாரோ ஒரு வீரருடன் காலையிலேயே வந்து சென்றதாகவும் அறிந்து கொண்டாள். ரத்தினக் கிரீடமும், கற்கள் பதிக்கப் பெற்ற சுதர்சனமும், பாஞ்சஜன்யமும் மின்னின. இடையில் தரித்திருந்த வாள், போருக்கு சன்னத்தமாயிருப்பதை உணர்த்தியது. மாறாமலிருந்தது வாத்சல்யம் ததும்பும் அந்தப் பார்வையும், புன்னகையும்தாம். அந்தப் புன்னகையிலும் ஏதேதோ அர்த்தங்கள் இருப்பதாகப் பட்டது அம்மங்கைக்கு.

மனநிறைவோடு வெளியே வந்தவள், ஆலய வாயிலில் காத்து நின்றவனைக் கண்டு பிரமித்தாள். புழுதி படிந்த உடையுடன் வழக்கமான விஷமப் புன்னகையுடன் கைகளைக் கட்டியபடி நின்றிருந்தான் ஜெயந்தன். ஏதோ நீண்ட பயணத்திலிருந்து வந்தவனாக இருந்தது அவன் தோற்றம். முகத்தில் களைப்புத் தெரிந்தாலும், புத்தி அசாத்திய விழிப்புடனிருப்பதை பளிச் பளிச்சென்று மின்னிய விழிகள் கூறின.

''ஜெயந்தா, நீ எப்போது வந்தாய்? எங்கிருந்து வருகிறாய்? நீ மட்டும்தான்...'' என்று தொடர்ந்து கேட்டுக் கொண்டே போனவளை அவன் கரங்கள் வணங்கித் தடுத்தன.

''இளவரசி, உங்கள் கேள்விகளுக்குப் பதிலளித்துக் கொண்டிருக்க அவகாசமில்லை. உங்களை அழைத்துக் கொண்டு மதுரை செல்ல அரண்மனையில் ரதம் காத்திருக்கிறது'' என்றான் ஜெயந்தன்.

பொங்கிய சினத்தை அடக்கியபடி ரதத்தில் ஏறியமர்ந்த அம்மங்கை கேட்டாள் : ''ஜெயந்தா...''

''என்ன இளவரசி?''

''நீ எங்கேயிருந்து வருகிறாய்?''

''தற்சமயம் உறையூர் அரண்மனையிலிருந்து.''

அவன் வேண்டுமென்றே இடக்கான பதில் கூறுவதை உணர்ந்தாலும் அரையன் இருக்குமிடமும் நிலையும் அவன் அறிந்திருப்பான் என்று திட்டவட்டமாகப் புரிந்திருந்ததால் அம்மங்கை பொங்கி வந்த சினத்தை அடக்கியபடி மீண்டும் கேட்டாள்:

''ஜெயந்தா, உங்கள் படைத்தலைவர் இப்போது எங்கிருக்கிறார்?''

''யார் காலிங்கராயரா? நான் அவரைக் கண்டு பல நாட்களாகி விட்டதே!'' அவன்

மருந்து - கலியின் விஷத்தை முறிக்கிற மருந்து கொடுத்து ரக்ஷிக்கலாம்' என்று நினைத்தார். வேதந்தான் அந்த மருந்து. கலிபுருஷன் அதைக் கபளீகரம் பண்ணி விடாமல் காப்பாற்றி விட்டால் போதும்; லோகம் பிழைத்துக் கொள்ளும்; இருட்டிலே அது ஒரு விளக்காக வழிகாட்டிக் கொண்டிருக்கும் என்று பரம கருணையோடு எண்ணினார். பழைய மாதிரி வேதம் ஜோதியாகப் பிரகாசிப்பது கலியில் ஸாத்யமில்லை. கலிபுருஷனுக்கு அதிகாரம் கொடுத்தபின் அப்படிப் பண்ணுவதற்கில்லை. ஆனாலும், அது குறைந்த அளவுக்காவது எவ்வளவு இருக்க வேண்டுமோ அந்த அளவு இருக்கும்படி பண்ண வேண்டும் என்று நினைத்தார். தம்முடைய அம்சாவதாரமான வேத வியாஸ மஹரிஷி மூலமாக இந்தப் பெரிய உபகாரத்தைச் செய்தார்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

பதில் மீண்டும் அவள் கோபத்தைக் கிளறியது.

''சரி போகட்டும். எங்களுடன் காவலாக மதுரைக்கு வரப் போவது யார்?'' - அம்மங்கை தொடர்ந்து கேட்டாள்.

ஜெயந்தனின் பதில் அவளைத் திகைக்க வைத்தது.

''சமுத்திரபந்தன்'' என்றவன் திரும்பிப் பாராமலே சிரித்துக் கொள்வது அவளுக்குத் தெரிந்தது.

''யார் மதுராந்தகரா?'' அவள் குரல் குழறி ஒலித்தது.

''இல்லை. உண்மையான சமுத்திர பந்தன். சோழர் படையின் ஒற்றர்களில் ஒருவர்.''

ரதம் இதற்குள் அரண்மனையை நெருங்கி, வாயிலை அடைந்தது. அம்மங்கை குழப்பம் விரிந்த விழிகளுடன் இறங்கினாள்.

வாயிலில் மற்றொரு ரதம் நின்றிருந்தது. பார்த்தவுடன் அது போர்களில் பயன்படுத்தப்படும் ரதம் என்பது புரிந்தது. அதன் முகப்பில் பெரிதாக புலிச் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது.

உள்ளே பயணத்திற்குத் தயாராகக் கார்குழலி காத்திருக்க, பணியாட்கள் பரபரப்புடன் நடமாடிக் கொண்டிருந்தனர்.

கூடத்தைத் தாண்டிய ஜெயந்தன் நிற்காது மேன்மாடத்தை நோக்கிச் செல்லவே, அம்மங்கையும் தொடர்ந்தாள்.

மேன்மாடத்து அறையில் இருக்கையில் விக்கிரமன் அமர்ந்திருக்க, எதிரில் புதிதாக ஒருவர் அமர்ந்திருந்தார்.

விக்கிரமனை விடச் சற்று உயர்ந்த தோற்றமும் செவிகள் வரை நீண்ட பெரும் மீசையும், திறந்திருந்த கரங்களின் திண்மையும், உறுதியாக மேடிட்ட புஜங்களும் நிச்சயம் இவர் சமுத்திரபந்தனாக வேடமிட்ட மதுராந்தகனல்ல என்பதை அம்மங்கைக்குத் தெளிவாக்கின.

தோள்களிலிருந்து இடுப்பு வரை தரித்திருந்த இரும்பு வலை அவர் ஏதோ போர்க்களத்திலிருந்து வருவதாக உணர்த்தியது. அளவுக்கதிகமாக அடர்த்தியாயிருந்த புருவங்களின் கீழ் இரு கூரிய விழிகள் அவளை உற்று நோக்கின. அந்தப் பார்வை அவள் உள்ளத்தையே சென்று ஊடுருவி விடுவதைப்போலிருந்தது. அதில் ஒரு கருணையும் வாத்சல்யமும் கூடத் தெரிந்தது அவளுக்கு.

அவர் இடையிலிருந்த வாளைக் கண்ட அவள் தலை சுழலத் தொடங்கியது. அரையன் மதுராந்தகன் தரித்திருந்த வாளைப் போலவே மிக நீண்டு வளைந்த அந்த வாளின் பிடியிலும் புலிச்சின்னம் பளிச்சிட்டது. அவள் திகைப்பைக் கண்ட விக்கிரமன் இதழ்களில் முறுவலொன்று படிந்தது.

''அம்மங்கா, இவர்தான் உண்மையான சமுத்திரபந்தன். நமது படையின் ஒற்றர். இவர் பெயரைப் புனைந்து கொண்டுதான் மதுராந்தகன் சேரநாடு சென்றான். இவருக்கு ராஜ நாராயணன் என்பது பெற்றோர்கள் இட்ட பெயர்'' என்றான் விக்கிரமன்.

## ஒன்றுமே புரியலே...

மருதுவின் விளக்கம் :

''இது ஒன்றும் மண்டை காய வைக்கிற சமாச்சாரம் இல்லை. ரொம்ப சுலபம். 'பொய்மை' - இதுதான் விஷயம். ஒருவரிடமிருந்து அடுத்தவரிடம் போகும் போது பொய், மேலும் பெருகி விடுவதைத்தான், ஒரு உருவம் ஒரு முகமூடியையும், அடுத்த உருவம் இரண்டு முகமூடிகளையும் வைத்திருப்பதாகக் காட்டியிருக்கிறேன். மனிதனின் அகமும் புறமும் வெவ்வேறானவை. மாடர்ன் ஆர்ட்டுக்கு ஒரு தலைப்பு தருவது வழக்கம்தான். அதன் அடிப்படையில் சிந்தித்தால், ரசிகனுக்கு ஓவியமும் புரியும், ஓவியனுடைய மனமும் புரியும்.''



''இவர்... இவர்...'' என்று தடுமாறிய அம்மங்கையைப் புன்முறுவலுடன் பார்த்த அந்த மனிதர்,

''இளவரசி, நான் மதுராந்தகனுக்கு மாமன் முறையாக வேண்டும். நான்தான் உங்களை மதுரைக்கு அழைத்துச் செல்ல வந்திருக்கிறேன்'' என்றார்.

அந்தக் குரலைத் தான் எங்கோ கேட்டிருப்பதாகப்பட்டது அம்மங்கைக்கு. அவர் யாராயிருந்தாலும் குரலை மாற்றிப் பேசுவதாகவும் பட்டது. காரணமும் விளங்கவில்லை அவளுக்கு.

இருக்கையை விட்டு எழுந்த அந்த மனிதர் அவளை நெருங்கி அவள் குழல் களைப் பெரும் வாஞ்சையுடன் தடவி னார்.

''குழந்தாய், நானிருக்கும் போது உனக்கு எந்தத் தீங்கும் வராது. பயணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்'' என் றார்.

அவரது கரங்கள் பட்டதும் அம்மங்கை யின் உடல் ஒருமுறை சிலிர்த்தது.

அடுத்த இரு நாழிகைகளில் பயணத் திற்குத் தயாராக வெளிவந்த அம்மங்கை வாயிலையடைந்ததும் பிரமித்தாள்.

அங்கிருந்து தொடங்கி கோட்டை மதி லையும் தாண்டி வெகு தூரத்துக்கு அணி வகுத்து நின்றிருந்தது சோழர் படை. அது வரை அத்தனை படை வீரர் அங்கு இல்லா மல் திடீரென்று தோன்றியது பெரும் வியப் பாக இருந்தது அவளுக்கு.

முகப்பில் பூரண கவசத்துடனும் நீண்ட வாளுடனும் விக்கிரமன் புரவியில் சித்த மாக அமர்ந்திருந்தான்.

அம்மங்கையைக் கண்டதும் புன்முறுவ லுடன் கையசைத்தவன், படைகளின் முன் தன் புரவியை நடத்தினான். ராஜநடை நடந்த அந்தப் புரவியைத் தொடர்ந்து, படைகள் தெற்கு வாசல் வழியே வெளி யேறத் தொடங்கின.

கொம்பு, முரசு முழக்கங்களுடன் படை, கோட்டை மதிலைத் தாண்டும் வரை படிகளில் நின்றபடியே பார்த்துக் கொண் டிருந்த ராஜ நாராயணன், தயாராக வந்து நின்ற ரதத்தின் சாரதி ஸ்தானத்தில் ஏறி யமர்ந்தான்.

அம்மங்கையும் கார்குழலியும் ஏறிக் கொள்ள, புவனமாதேவியும் மங்கையர்க் கரசியும் மேன்மாடத்திலிருந்து விடை கொடுத்தனர்.

ரதம் வடக்கு வாசல் வழியாக வெளி யேறியது.

ராஜநாராயணன் என்னும் சமுத்திர பந்தன், கோட்டை வாயிலைத் தாண்டிய தும் மதுரைக்குச் செல்லும் சாலையில் ரதத் தைப் பறக்க விட்டான்.

முப்பது நாற்பது வீரர்களே தொடர்ந்து வர, ரதம் விரையவும் இளவரசிகளின் முகத் தில் மோதிய காற்று மூச்சைத் திணறடித்து, கண்களில் நீரை வரவழைத்தது!

அந்தளை வேகமாகச் சென்ற குதிரை களின் கடிவாளக் கயிறுகளை இடது கை யால் அலட்சியமாகப் பற்றியபடி வலது கையை முகவாயில் கொடுத்து ஏதோ சிந்த னையில் ஆழ்ந்தபடியிருந்தான் சமுத்திர பந்தன்.

'பார்த்தனுக்கு அந்தப் பரந்தாமன் செய்த ரத சாரத்தியம் இப்படித்தா னிருந்திருக்குமோ' என எண்ணினாள் அம்மங்கை.

(தொடரும்)



"எதுக்குத்தான் டிரீட் கேட்கிறதுன்னு கிடையாதா, சுத்த மோசம்..."

"ஏன், என்ன ஆச்சு?"

"இந்த ஆபீசுக்கு டிரான்ஸ்ஃபர் ஆகி வந்து முதன் முதலா தூங்கியிருக்கீங்க. அதுக்கு ட்ரீட் எங்கேன்னு கேட்கறாங்களே...!"


- புதுவண்டி ரவீந்திரன்

"சித்திரகுப்தா! 17.09.93 அன்று இந்தியாவில் இறந்தவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது ஏன்?"

"அன்று இந்தியாவில் டாக்டர்கள் ஒருநாள் வேலை நிறுத்தம் செய்தார்கள் பிரபு, அதனால்தான்!"

- க. நமசிவாயம்





"முனியம்மா, லாட்டரியில் உனக்கு ஐந்து லட்ச ரூபாய் விழுந்திருக்காமே, என்ன செய்யப் போறே?"

"நீங்க விரும்பினா உங்களை என் வீட்டில் வேலைக்கு வெச்சுக்கிறேன்!"

- எம். அசோக்ராஜா

"காலம் ரொம்ப முன்னேறிடுச்சு போங்க."

"எப்படிச் சொல்றீங்க?"

"அதோ பாருங்க... யாரோ ஒருத்தர், செருப்புக்கு மேல குங்குமப் பொட்டு வச்ச எலுமிச்சம் பழத்தை, மந்திரிச்ச மாதிரி வச்சிட்டுப் போயிருக்கார்!"

- சீர்காழி. வி. ரேவதி





"ஐஸ்கிரீம்தான்... பின்னே இந்த வெயிலுக்குத் தீயைத் தூக்கிக்கிட்டு ஓட முடியுமா...?"

- நிலா

"ஆண்டெனாவை இந்த மாதிரி வச்சா ஸ்டார் டி.வி. தெரியும்னு யாருப்பா சொன்னது...?"

- நிலா



# மடிங்கு

## 11

கஸ்தூரிரங்கன், தனக்கு முன்னால் பொருத்தப் பட்டிருந்த பின்பார்வைக் கண்ணாடியில் பார்த்தான். இரண்டு வெளிச்சப் பொட்டுக்கள். பொதுவாக வண்டி ஓட்டும் போது அவன் சந்தேகப்படுவதில்லை. ஆனால் இப்போது சந்தேகப்பட வேண்டியிருந்தது.

மகாபலிபுரத்தில் இருந்து இந்த நேரத்தில் யாரும் சென்னை நோக்கி வர மாட்டார்கள். அந்த வெளிச்சப் பொட்டுகள் மிகத் தற்செயலாக அவன் பார்வையில் பட்டதா? ஏதோ ஒரு அப்பாவி குடும்பத் தலைவன், மனைவி மக்களை அழைத்துக் கொண்டு சென்னை திரும்புகிறானா? இல்லை, அவன் வேனைப் பின் தொடர்கிறதா?

கஸ்தூரிரங்கன் வேகத்தை அதிகப்படுத்தினான்.

''என்னய்யா இது? திடீர்னு ஃபாஸ்டாப் போறானே!''

''ஆமா சார்''

''ஏதோ ஸ்மக்ளிங் விவகாரந்தான்யா''

''ஆமா சார்''

''சொல்லிட்டே இருந்தாப் போதுமா? அவன் பறக்கிறானே. மிதிய்யா ஆக்ஸிலேட்டரை''

''நம்ம வண்டில பிக்-அப் போறாது சார்''

''பேரிச்சம் பழத்துக்குப் போட்டுடலாம்''

''சரி சார்... சார்?''

''இடியட். போ. இன்னும் மிதி..''

பின்னால் வந்த வெளிச்சப் புள்ளிகள், கஸ்தூரிரங்கன் வேகத்தை அதிகப்படுத்தியதும் முதலில் பின் வாங்கி, பின் வெகு வேகமாக முன்னேறத் தொடங்கின.

போலீசாக இருக்கலாம். அல்லது, ஆகாத ஆசாமி களாக இருக்கலாம்.


கஸ்தூரிரங்கனுக்குப் புல்லரித்தது. பின்தொடரு பவர்களின் உத்தேசம் என்ன என்று தெரியவில்லை. ஆனால் அவர்களின் பின்தொடர்தல் இப்போதைக்கு விலக்கப்பட வேண்டிய ஒன்று. வேகத்தை அதிகப் படுத்தினான். விடிகாலை நேரத்திற்கே உரிய செயல்கள் இயல்பாக நிகழ்ந்து கொண்டிருந்தன. காற்று குளிரைக் கொஞ்சம் அதிகமாய்ச் சேர்த்துக் கொண்டிருந்தது. அரசாங்கப் பால் வாங்காத மக்களுக்காக ஒன்றிரண்டு மாடுகள் பால் கறக்கச் சென்றன. கிராம வயல்களில் இருந்து பறிக்கப்பட்ட காய் வகைகள் ட்ரை சைக்கிளில் டர்ர் என்று பயணம் செய்தன. டூரிங் டாக்கீஸின் அன் றையப் புதுப்பட அறிவிப்பைச் செய்ய, இரண்டு பக்கங் களிலும் தட்டி போஸ்டர்களுடன் இரண்டு காளை மாடு கள் கூண்டு வண்டியை இழுத்துக் கொண்டு ஒரு கிராமத்து மண் பாதையில் நுழைய முயன்று கொண்டிருக்க, வினாடி நேரத்திற்குள் என்ன செய்வது என்று தீர்மானித்தான் கஸ்தூரிரங்கன்.

காளை மாடுகளை முந்திக் கொண்டு அவன் அந்தக் கிரா மத்துச் சாலையில் நுழைந்தான். வண்டிக்காரன் தூங்கிக் கொண் டிருந்தான். காளைகள் அவனது வேனின் குறுக்கீட்டால் திகைத் துப் பின் சுதாரித்து மண் பாதை யில் நுழைந்து அடைத்துக் கொண்டு, வேன் கிளப்பி விட்ட புழுதியினூடே பாதை தெரியா விட்டாலும் உத்தேசமாய் நடந் தன.



பின்னால் வந்த வெளிச்சப் பொட்டுக்கள் வேனைத் தொடர்வதாக இருந்தால், இந்த மண் பாதைக்குள் புகுந்து மீள்வதற்குள் போதும் போதுமென்றாகி விடும்.

கஸ்தூரிரங்கன், அந்தப் பாதையில் பழக்கப்பட்டவன் போலச் சென்றான். கடற்கரையோரக் கிராமம். முந்திரிச் செடிகளின் புதர்கள் பாதையின் இரு பக்கங்களிலும். அப்புறம் எல்லை அம்மன் கோவில். பலி பீடம். அய்யனார். நட்டு வைத்த வேல்கள். பஞ்சாயத்து ஆபீஸ். பாதையின் நடுவில் சாக்கடை. தேசப் படத்தில் ஆறு போல் ஓடியது. குட்டிப் பன்றிகள் வால் சுழற்றி ஓடின.



கஸ்தூரிரங்கன் வேனை லாவகமாகத் திருப்பி, குடிசைகளின் நடுவே இருந்த தெருவில் செலுத்தி, இரண்டு மூன்று திருப்பங்களுக்குப் பின், ஒரு மைதானத்தை அடைந்து நிறுத்தினான். மைதானத்தின் எல்லாக் கரைகளிலும் கற்கள் நடப்பட்டு இருந்தன. காமராஜ் நகர், பாரதி நகர் என்று புதிது புதிதாக போர்டுகள் செருகப்பட்டிருந்தன.

இறங்கினான். அவசரமாகச் செயல்பட்டான். வேனைப் பழையபடி சபரி உணவு விடுதியினுடையது என்ற நிலைக்கு மாற்றினான். மறுபடி வேனில் ஏறினான். கிளப்பினான். இரண்டு நிமிடங்களுக்குள் அத்தனையும் முடித்துக் கொண்டு, வேனை ஓட்டிக் கொண்டு வேறு பாதை வழியாகச் சுற்றி அவன் மறுபடி பிரதான சாலையை அடைந்தான்.

ஆச்சரியம் காத்திருந்தது. இன்னும் வெளிச்சம் வரவில்லை என்பது ஒருபுறம் இருக்க, சற்று நேரத்திற்கு முன் அவனது வேனின் கண்ணாடியில் தெரிந்த வெளிச்சப் பொட்டுக்கள் இப்போது சிவப்பு விளக்குகளாக ஒளிர்ந்தன. அது ஒரு போலீஸ் ஜீப். அவனுக்கு நூறடி முன்னால் போய்க் கொண்டிருந்தது. கஸ்தூரிரங்கன் ஒரு பெருமூச்சு விட்டான். தனக்குள் சிரித்துக் கொண்டான். வேனின் வேகத்தை அதிகப்படுத்தி, போலீஸ் ஜீப்பைக் கடந்து சென்றான்.

இன்ஸ்பெக்டர் தேவசகாயம் திகைத்தார். சற்று முன் ஒரு கிளைச் சாலையில் திரும்பிய அந்த வேனைத் தேடி அவரும் அதே சாலையில் திரும்பி, மாட்டு வண்டியால் தடுக்கப்பட்டு, வண்டிக்காரனை எழுப்பி அதட்டி, ஓரங்கட்டச் சொல்லி, ஜீப்பை விரைந்து செலுத்தச் சொல்லி, பாதை வளைந்த பக்கமெல்லாம் திருப்பி மறுபடி பிரதான சாலைக்கே வந்து பார்த்தால் வேன் மாயமாகி இருந்தது. அவருக்குக் கோபம் தலைக்கு மேல் ஏறியது. எவ்வளவு சுலபமாக அவன் ஏமாற்றி விட்டான்? அல்லது தான் ஏமாந்து விட்டோம்?

ஆத்திரத்தை எல்லாம் சேர்த்து வெறும் ஹுங்காரமாய் வெளிப்படுத்திய போது, அந்த சாதுவான வேன் அவர் ஜீப்பைக் கடந்தது.

''இந்த வேனாய்யா?''

''இருக்காதுங்க. அதே ஆளா இருந்தா இவ்வளவு தைரியமா நம்மளை முந்திக்கிட்டுப் போவானா?''

''அதுவும் சரிதான். எதுக்கும் அதை ஓவர்டேக் பண்ணி மடக்குய்யா''

''சரி சார்''

கஸ்தூரிரங்கன் வேனின் ப்ரேக்கைப் பலம் கொண்ட மட்டும் அழுத்தினான். ஜன்னல் வழியாகத் தலையை நீட்டி, போலீஸ் ஜீப்பையும், இன்ஸ்பெக்டரையும் பார்த்தான்.

இன்ஸ்பெக்டர் தேவசகாயம் தன் கைக் கழி

# தலை வைத்து

சுபா

யால், கஸ்தூரிரங்கனைக் கீழே இறங்கச் சொல்லி சைகை செய்தார்.

இறங்கினான்.

''என்னப்பா வண்டில?''

''காணான் சார்''

இன்ஸ்பெக்டர் ஒரு தடவை வேனின் போர்டு படித்தார்.

''எங்கேர்ந்து எடுத்துட்டுப் போறே?''

''மகாபலிபுரம்கிட்டேர்ந்து ஒரு ஃபார்ம் ஹவுஸ்லேர்ந்து''

''டோரைத் திற''

திறந்தான். இன்ஸ்பெக்டருடன் இருந்த கான்ஸ்டபிள் டார்ச் விளக்கின் வெளிச்சத்தை வேனின் உட்புறம் செலுத்த, பிளாஸ்டிக் பைகளில் காணான்.

''எந்த ஃபார்ம் ஹவுஸ்லேர்ந்து எடுக்கிறே?''

பேர் சொன்னான்.

''சரி, போ''

கஸ்தூரிரங்கன் வேனைக் கிளப்பினான். அவன் பெற்று வந்த 'மீன்' கூடை வேனில் ரப்பர் விரிப்பிற்குக் கீழே, ஸ்டெப்னி டயர் வைக்கும் இடத்தில் பத்திரமாக இருந்தது.

ரியர் வ்யூ மிர்ரரில், உள்ளங்கையில் கழியைத் தட்டிக் கொண்டு யோசிக்கும் இன்ஸ்பெக்டர் தெரிந்தார். மகாபலிபுரம் ஃபார்ம் ஹவுஸை அவர் விசாரித்தாலும் விசாரிக்கக்கூடும். 'தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டும் - சபரிக்குப் போனதும்' என்று நினைத்துக் கொண்டு, உதட்டில் ஓர் உற்சாக விசில் மெட்டுடன் வேனை விரைவாகச் செலுத்தினான்!

**சு**கீதா உற்சாக மலையின் உச்சியில் இருந்தாள். அதிகாலையில் எழுந்து கொண்டாள். படுக்கை அறையின் ஜன்னலை அகலத் திறந்து, வெளியே தெரிந்த மரக்கிளையில் அமர்ந்திருந்த ஒரு மரங்கொத்தியைப் பார்த்து 'ஹலோ' சொன்னாள். மரங்கொத்தி அவளுடைய உற்சாகம் புரியாமல் பயந்து பறந்தது. சோம்பல் முறித்தாள். பாத்ரூமில் நுழைந்து குளித்து, ஆடை மாற்றிக் கொண்டு வெளிப்பட்ட போது அவள் முகத்தில் சின்னச் சின்ன தண்ணீர் முத்துக்கள்.

கண்ணாடி முன் நின்றாள். கொஞ்சம் கவனம் எடுத்துக் கொண்டாள். பவுடர் ஒத்தடம் கொடுத்து முகத்தில் பூச்சு அதிகமில்லையே என்று பார்த்தாள். கஸ்தூரிரங்கனுக்குப் பிடிக்கக்கூடும் என்று அழகாக மை தீட்டிக் கொண்டாள்.

முதல் நாள் மாலை வராததற்காகக் கோபித்துக் கொள்ளப் போகிறான். ஃபோனாவது பண்ணியிருக்கலாமே என்று திட்டப் போகிறான். ம்ஹூம். கோபிக்க மாட்டான். திட்ட மாட்டான். புதுக் காதலியை யாராவது திட்டுவார்களோ?

கண்ணாடி முன் தன்னைப் பார்த்துக் கொண்டு, திருப்தியடைந்து வெளியில் வந்து, தங்கம் நீட்டிய காப்பியை மறுத்தாள்.

''எனக்கு அங்க ஃபர்ஸ்ட் க்ளாஸ் காப்பி கிடைக்கும் தங்கம்''

''சுகீதா''

''என்ன தங்கம்?''

''எனக்கொரு சந்தேகம்''

''என்ன? சொல்லு, சீக்கிரம் சொல்லு''

''நீ அந்தப் பையனை...?''

''ஆமா''

''அட, வெக்கத்தைப் பாரு. பையன் நல்லா ராஜா மாதிரித்தான் இருக்கான். நான் தான் வீட்டுக்கு வந்தன்னிக்கே பாத்தேனே. எனக்கு அப்பவே ஒன் நெனப்பு புரிஞ்சி போச்சி. அதென்னவோ, பலாப் பழத்தை ஈ சுத்திச் சுத்தி வராப்பல, ஒன் கண்ணு அந்தப் பையன் மேலயே இருந்துதே. நீயும் வேற எங்கயாவது பாப்பே, பாப்பேன்னு நான் நெனச்சி நெனச்சி ஏமாந்ததுதான் மிச்சம்.''

''போ, தங்கம். புடிச்சிருக்குதா அவரை?''

''ரொம்ப''

''ஐய. ரொம்ப கண்ணை விரிக்காதே தங்கம். அப்புறம் எனக்குப் பதிலா நீ அவரைக் கொத்திக்கிட்டுப் போய்டுவியோன்னு எனக்குக் கவலையா இருக்கும்.''

''இங்க பாருடியம்மா. கல்யாணம் ஆன பொம்பளையைப் பாத்துப் பேசற பேச்சா இது?''

சுகீதா சிரித்தாள்.

''அப்பாவுக்குத் தெரியுமா கண்ணு?''


''நீதான் சொல்லப் போறே''

''ஐயய்யோ''

''ஏன்? நான்தான் பயப்படணும். வெட்கப்படணும். ஒனக்கென்ன? சமயம் பாத்து நீதான் சொல்லணும். என்ன?''

''ஆவட்டும். காப்பி?''

''சொன்னேனே. நீயே குடி''




''என்னங்க... அருகம்புல் வாங்கித் தாங்க!''
- ரவீந்திரன்

தங்கம் எதுவும் பேசுமுன் அவள் வீட்டிலிருந்து வெளியே வந்து விட்டாள். வண்டியை அதன் ஸீட்டின் மேல் ஒருமுறை தட்டி நகர்த்தினாள். உட்கார்ந்தாள். ஸ்டார்ட் செய்தாள். விர்ர்ர். கஸ்தூரிரங்கனைப் பார்க்கப் போகும் சந்தோஷம், சற்றுமுன் தங்கம் அவளுடைய காதலை அங்கீகரித்ததால் ஏற்பட்ட சந்தோஷம், எல்லாமாகச் சேர்ந்து அவளை ட்ராஃபிக்கில் பறக்க வைத்தன. அவள் இதயம் 'ரங்கா', 'ரங்கா' என்று மகிழ்ச்சிக் குரல் கொடுத்தது. மடிந்த வயிற்றுக்குள் பிள்ளைப் பூச்சி உலாவல் போல ஒரு கிளுகிளுப்பு.

அவள் சபரியை அடைந்த போது காலை ஆறு முப்பது. மணல்வெளி நாற்காலிகளில் காலை உடற்பயிற்சிக்கு வந்தவர்கள் காப்பிக்காக உட்கார்ந்திருந்தார்கள்.

'தூர்வாசன்' அவளைப் பார்த்து, ''மார்னிங் அக்கா'' என்றான்.

''மார்னிங். எங்க பாஸ்?''

கட்டை விரலை உட்பக்கம் காட்டினான் தூர்வாசன்.

உள்ளே நுழைந்தாள். விசாலிப்பாட்டி தெரிந்தாள். மனப்பறவை படபடவென்று தன் சிறகுகளை அசைத்துத் தன் சந்தோஷத்தைத் தெரிவித்தது.

**''நமது உள்மனம் சந்தோஷமாக இருக்கும் தருணங்களில் யாரைக் கண்டாலும் சந்தோஷமாகத்தான் இருக்கும். பசுவைக் கண்டால் சந்தோஷம். வருடிக் கொடுப்போம். நாயைக் கண்டால் தட்டிக் கொடுப்போம். குழந்தைகளைக் கண்டால் கொஞ்சுவோம். நமது உள்ளத்தின் ஒவ்வொரு அசைவும், நம் உடல் செய்கைகளில் நிச்சயம் பிரதிபலிக்கும்.''**

இப்போது சுகேதாவிற்கு விசாலிப் பாட்டியைக் கட்டிக் கொண்டு கூத்தாடத் தோன்றியது. இந்தக் கிழம்தானே முதலில் வரிகளுக்கு இடையில் படித்த கிழம்?

''வாம்மா, சுகேதா! காப்பி சாப்பிடறயா?''

''அதுக்காகத்தான் வந்தேன் பாட்டி''

விசாலிப்பாட்டி காப்பியை நுரை சிதற ஆற்றி அவளிடம் நீட்டினாள். அவள் கையில் வாங்கிக் கொண்டு திரும்பிய போது ரங்கா உள்ளிருந்து வெளிப்பட்டான்.

''ரங்கா''

கஸ்தூரிரங்கன் திரும்பினான். அவளைப் பார்த்தான். அவன் முகம் சோர்ந்திருந்தது. வெளுத்திருந்தது. பஞ்சத்தில் அடிபட்டவன் போல. பயத்தில் அடிபட்டவன் போல.

''யெஸ்?'' என்றான் அவளை அடையாளம் காணாத ஒரு முக பாவத்துடன்.

''என்ன ரங்கா?'' என்றாள் அவள் கொஞ்சலாய்.

''யார் நீங்க? கஸ்டமருக்கெல்லாம் இவ்வளவு தூரம் வர பர்மிஷன் கெடையாது'' என்றான் ஸ்பஷ்டமாக.

(தொடரும்)

## குடை விளம்பரம்!

விதம் விதமான விளம்பர உத்திகளில் இப்போது குடை விளம்பரம் ஒரு உத்தி!

பம்பாய் போன்ற நகரங்களில் பருவ மழை பெய்யும் மூன்று மாதங்களில் குடை விரிக்காதவர் கிடையாது. அதனால் குடைகளில் விளம்பரம் அச்சிட்டுத் தருகிறார்கள். ரூ. 75 முதல் ரூ. 300 வரை, விளம்பரம் அச்சிட்ட ஒரு குடைக்குச் செலவாகும்.

பல்வேறு நிறுவனங்கள் தங்கள் சக்திக்கும் தேவைக்கும் ஏற்ப விளம்பரக் குடைகளுக்கு ஆர்டர் தந்து மக்களுக்கு விநியோகிக்கின்றன!

- சித்தார்த்



"தொடரும் இனிய  உறவுகள்..."

# மறக்க முடியாத உதவி

அப்பாவுக்குச் சொந்த வியாபாரம். அதில் எத்தனையோ ஏற்ற இறக்கங்கள். சமயங்களில் சமாளிக்க முடியாத சூழ்நிலையும் கூட. அவருடைய நண்பர் ஒருவருடைய ஆலோசனையின்படி ஸ்ரீராமில் இரண்டு சீட்டுகளில் சேர்ந்திருந்தார். தேவையான சமயங்களில் எடுத்துப் பயன்படுத்திக் கொண்டார்.

வியாபாரம் பெருகத் தொடங்கியது. ஸ்ரீராம் சீட்டுகளில் சேருவது தொடர்ந்தது. பணம் சேரத் தொடங்கியது. நல்ல வரன் ஒன்று அமைந்தபோது, அதிகம் சிரமப்படாமல் என் திருமணத்தை விமரிசையாக அவரால் நடத்த முடிந்தது.

தந்தையின் முன்னேற்றத்தை அருகில் இருந்து கவனித்து வந்ததால் "ஸ்ரீராம்" என்கிற பெயர் என் மனத்தில் ஆழப் பதிந்து போயிருந்தது.

என் திருமண வாழ்க்கை தொடங்கியது. தனிக் குடித்தனம்.

கணவர் கம்ப்யூட்டர் பொறியாளர். நீண்ட நாட்களாகவே அவருக்குச் சொந்தமாக ஒரு கம்ப்யூட்டர் வாங்க வேண்டும் என்று எண்ணம்.

பணத்துக்கு என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தார். வங்கிக் கடன் வாங்கினாலும் ஓரளவாவது நாமும் பணம் போட வேண்டும். அதற்கு என்ன செய்வது என அவருக்குப் புரியவில்லை. எப்போதும் சிந்தனைதான்.

தனிக் குடித்தனம் தொடங்கிய மூன்று ஆண்டுகளில் ரூ. 500/- சீட்டு ஒன்றில் ஸ்ரீராமில் நான் சேமித்து வந்தேன். இச்சந்தர்ப்பத்தில் அதை நான் பயன்படுத்திக் கொண்டேன். அவருக்குத் தேவைப்படும் தொகையை நான் கொடுத்த போது என் கணவருக்கு எல்லையில்லா சந்தோஷம்.



அன்று என் தந்தைக்கு உதவியதைப் போலவே இன்று என் கணவரின் தேவையைப் பூர்த்தி செய்ய உதவியதும் ஸ்ரீராம் தான்.


மறக்க முடியாத உதவி அது.

அனுராதா சுப்ரமணியன்,
சென்னை –600 017.

● கே. ஆர். உபேந்திரன், தஞ்சை.

? *"ஆளுனரிடமிருந்து அறிக்கை வந்தாலொழிய தமிழக அரசைக் கலைக்க வேண்டிய அவசியம் இல்லை" என்று சவான் கூறியிருப்பது பற்றி...?*

! ஆளுனரின் அறிக்கையின்றியே கலைக்க முடியும் என்ற மோசமான முன்னுதாரணம் தமக்குச் சம்மதமில்லை என்பதை இது உணர்த்துவதானால் அந்த மட்டில் மகிழ்ச்சி.



* தொடரும் பயணம்

# அரசியல் தலைவர்கள் ஏன் தீக்குளிப்பதில்லை?



* செயல்பாடு எப்படி?



* முடியாது! முடியாது!

● கே. என். பாலகிருஷ்ணன், கும்பகோணம்.

? *சிறப்பிதழ் தயாரிக்கப் பாடுபட்ட பல வாசகர்களை ஓரம் கட்டியதன் மூலம் 'கும்பகோணம் வேலை'யைக் காண்பித்து விட்டீர்களே?*

! கும்பகோணம் வேலை என்பதற்கான உண்மை விளக்கத்தைப் படித்த பிறகும் கும்பகோணத்துக்காரரான நீங்களே இப்படி எழுதுவது ஆச்சர்யம். வாசகர்கள் எழுதும் எல்லாவற்றையும் பிரசுரிக்க முடியாது. தேர்ந்தெடுத்துத்தான் போட வேண்டும். தவிர ஆசிரியர் குழு நேரில் சென்று வாசகர்கள் எழுதியவற்றைச் சரி பார்த்த பிறகே கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன. இதில் ஓரம் கட்டுதல் என்ற பேச்சுக்கே இடமில்லை.

● வி. பரமசிவம், மதுரை.

? *"ஆட்டுக்குத் தாடி போன்றது கவர்னர் பதவி" என்று முன்பு சொன்ன கருணாநிதி இப்போது மட்டும் "அரசியல் சட்ட விதிகளை நிலைநாட்டுவது கவர்னர் பொறுப்பு" என்று சொல்வது சரியா?*

! ஏதோ இப்போதாவது கவர்னர் பதவிக்கும் ஓர் அர்த்தம் இருக்கிறது என்று ஒப்புக் கொண்டிருக்கிறாரே!

● ஆர். முத்துக்குமரன், தோழகிரிபட்டி. ❑

? *ராணிப்பேட்டை தேர்தல் முடிவுகள், அ.தி.மு.க. வுக்குச் சாதகமாக அமைந்துள்ளதே, இனி முதல்வரின் செயல்பாடு எப்படி இருக்கும்?*

! தமக்கு ஆதரவாக வோட்டுப் போட்டவர்களை விட எதிர்த்து வோட்டுப் போட்டவர்களே பழநியிலும் சரி, ராணிப்பேட்டையிலும் சரி, மிக அதிகம் என்பதை உணர்ந்தாரானால் முதல்வரின் எதிர்காலச் செயல்பாடு அடக்கத்துடன் அமையும். அப்படி உணராத பட்சம் ஆணவம் அதிகரிக்கும்.

● பி. ராஜன், தாராபுரம்.

? *சமீபத்தில் உங்களை வருத்தத்துக்கு ஆளாக்கிய செய்தி?*

! நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தின் விசாரணைக்கு மருத்துவர்கள் உட்பட வேண்டும் என்றும், கூடாது என்றும் இருவித கருத்துக்கள் உள்ளது நமக்குத் தெரியும். சமீபத்தில், திருச்சி நுகர்வோர் பாதுகாப்புக் குழுவின் செயலாளர் புஷ்பவனம், நுகர்வோர் பாதுகாப்புக் குழுவின் தலைவருக்கு அரசு மருத்துவமனையில் அளிக்கப்படும் சிகிச்சை பற்றி டாக்டர்களைச் சில கேள்விகள் கேட்கப் போக, டாக்டர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டிருக்கிறார். என்ன பேசப்பட்டது என்பதை நாம் அருகிலிருந்து கேட்கவில்லை என்றாலும் வாய்ச் சொல் முற்றி அடிதடியில் முடிவதென்பது நல்லதல்ல. அதுவும் படித்தவர்கள் இப்படி பண்பு தவறி நடக்கவே கூடாது.

● த. குணசேகரன், கவுந்தப்பாடி.

? *"ஜெயலலிதா எந்தக் காலத்திலும் எம்.ஜி.ஆர். ஆக முடியாது" என்று வாழப்பாடி கூறுகிறாரே?*

! வாழப்பாடி எந்தக் காலத்திலும் காமராஜர் ஆக முடியாது என்பதையும் அவர் ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

● இரா. மகாராஜன், ஆரல்வாய்மொழி.

*? ரூ. 420 கோடி செலவு செய்து ஏவப்பட்ட ராக்கெட் புஸ்வாணமாகி விட்டது பற்றி...?*

! விஞ்ஞான முயற்சியில், ஆய்வுகள் எல்லாமே நூறு சதம் வெற்றி பெற்று விட முடியாது. தோல்விகளை ஆராய்ந்து, தவறுகளைத் திருத்திக் கொண்டு, படிப்படியாகத்தான் முன்னேற வேண்டும். ராக்கெட் டெக்னாலஜியில் ஏற்கெனவே முன்னேறியுள்ள நாடுகளும் இதுபோன்ற நஷ்டங்களைத் தாங்கியுள்ளன. இந்த விஷயத்தில் ஏவுகணை ரகசியங்களும் உள்ளடங்கியிருப்பதால் பாதுகாப்பு நோக்கில் அயல் நாடுகளின் விஞ்ஞான ஒத்துழைப்பு கிடைக்காது. எனவே, இன்றைய புஸ்வாணம், நாளைய விண்ணளாவும் சீற்றமாக உருமாறக் காத்திருக்க வேண்டியது தான்.

● சி. சொ. பழநிசாமி, பகவபட்டி.

*? உலகப் பெரும் இசை அமைப்பாளர் வரிசையில் இடம்பெற்றுள்ள இளைய ராஜாவை அட்டைப்படம் போட்டு சிறப்புச் செய்யாதது ஏன்?*

! இந்த அளவுக்கு அவர் உயரப் போகிறார் என்பதை அன்றே கல்கி உணர்ந்து, முதன் முதலாக அட்டைப் படத்தில் பிரசுரித்து கவர் ஸ்டோரியும் எழுதியதால் தான்.



* தாடியும் ஆளுனரும்!



* உலகப் பெரும்...



* "கலைப்பு இல்லை"

● எல். மாறன், மேல்பட்டி.

*? இஸ்லாம் சகோதரர்கள் முதல்வரின் வேண்டுகோளை ஏற்று மிலாதுநபி ஊர்வலத்தை ரத்து செய்து விட, இந்து சகோதரர்களுக்கு வேண்டுகோள் விடுத்த முதல்வரே மீண்டும் அனுமதி வழங்கியது அவருக்கு அழகா? இதுதான் மதச்சார்பின்மையா?*

! இதற்கு முதல்வரைக் குறைகூற முடியாது. அவர் வேண்டுகோள்தான் விட முடியும்; கட்டாயப்படுத்த இயலாது. தடைவிதிப்பதும் சாத்தியமில்லை. அவர் வேண்டுகோளை இஸ்லாமிய சகோதரர்கள் ஏற்றது போல் இந்து முன்னணியினரும் ஏற்று, இரு சாராரும் ஒற்றுமை ஊர்வலமே நடத்தியிருக்கலாம். வாய்ப்பை நழுவ விட்டு விட்டார்கள். போகட்டும், எப்படியோ நடந்து முடிந்த ஊர்வலம், விக்னமின்றி நடந்ததற்கு விநாயகருக்குக் கும்பிடு.

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
ஆர். முத்துக்குமரன்,
தோழகிரிபட்டி,
குருங்குளம் (அஞ்சல்) - 613 303.

● யாதவன், திருச்சி.

*? ராணிப்பேட்டை - பழநி தேர்தல் முடிவுகள் குறித்து...?*

! ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற இரு கட்சி ஜனநாயக அமைப்பு முறை இங்கு அமுலானாலொழிய, மக்களின் உண்மையான கருத்து தேர்தல் முடிவுகளில் பிரதிபலிக்கப்படாது என்பதற்கு மீண்டும் ஓர் எடுத்துக்காட்டு.

● ரம்யா, கோவை.

*? அரசியல் தலைவர்கள் ஏன் தீக்குளிப்பதில்லை?*

! அதற்குத்தான் அப்பாவித் தொண்டர்கள் இருக்கிறார்களே! தலைவர்களே தீக்குளிக்க ஆரம்பித்தால் அவர்களுடைய கசிந்துருகும் இதயத்தையும் கொடை உள்ளத்தையும் எப்படி வெளிக்காட்டிக் கொள்வதாம்!

● ஆர். ரமேஷ்பாபு, விருத்தாசலம்.

*? நான்கு ஆண்டுகளுக்கு முன் விட்ட கலைப் பயணத்தை மீண்டும் தொடர வந்திருக்கும் நதியா பற்றி?*

! நதியா, ஆறா, ஓடையா, வாய்க்காலா என்று பின்னால் கணிக்கலாம்; இப்போதைக்கு நல் மனத்துடன் வாழ்த்தி வரவேற்கலாம்.

# சக்கரவர்த்தித் திருமகன்

## 53. மற்றொரு தகப்பன்

இரு சகோதரர்களும் மலையிலும் வனத்திலும் ஆற்றங் கரையிலும் தேடித் தேடி 'சீதா! சீதா!' என்று கூக்குரலிட்டுப் பார்த்து ஒன்றும் பயன்படவில்லை. ஒரு துப்பும் கிடைக்கவில்லை. இன்னது செய்வது என்று ஒன்றும் தோன்றாமல் துக்கத்தின் வேகத்தால் கோதாவரியையும் தேவதைகளையும் பஞ்சபூதங்களையும் ராமன் கூவிக் கூவிக் கதறினான். ஆறுகளுக்கும் தேவதைகளுக்கும் பஞ்ச பூதங்களுக்குமே ராக்ஷசேந்திரனிடம் உள்ள பயத்தால் எந்த மலையும் ஆறும் வாயுவுங்கூட பதில் தரவில்லை என்கிறார் கவி முனிவர்.

ஒரு மான் கூட்டம் மட்டும் சைகையால் தெற்கு முகம் நோக்கிப் போய்த் தேடுங்கள் என்று குறிப்பிட்டதாக அறிந்து ராம லக்ஷ்மணர்கள் தெற்கு நோக்கிச் சென்றார்கள். அங்கே வழியில் ஓரிடத்தில் புஷ்பங்கள் தரையில் சிதறிக் கிடந்திருப்பதைக் கண்டார்கள்.

அதைக் கண்டதும் ''இதோ நான் கொடுத்த புஷ்பம்! சீதையின் தலையிலிருந்து உதிர்ந்த புஷ்பமே'' என்று ராமன் துப்பு அறிந்த உற்சாகமும் கூடவே துயரமும் அடைந்தான். சீதைக்கு என்ன நேர்ந்து விட்டதோ என்கிற பயம் முன்னை விட அதிகமாய் விட்டது. கதறிக் கதறி அழுதான்.

புஷ்பங்கள் கிடந்த இடத்தைச் சுற்றி காட்டில் தேடிப் பார்த்தார்கள். பூமியில் ராக்ஷசேந்திரனுடைய பெருங் காலடிச் சுவடுகளும் சீதையின் காலடி பதிந்த குறிப்புகளும் கண்டார்கள். சீதையின் ஆபரணங்களிலிருந்து சிந்திக் கிடந்த தங்க மணிகளையும் கண்டார்கள். அவற்றைப் பார்த்து ராமன், ''பார்த்தாயா, அவளைப் பிடித்துத் தின்பதற்காக அரக்கன் துரத்தித் துரத்தி ஹிம்சித்திருக்கிறான்!'' என்று சொல்லிப் பிரலாபிக்கலானான்.

பிறகு உடைந்து கிடந்த தேரின் பல பாகங்களைக் கண்டார்கள். ரத்தம் சிந்தியிருப்பதையும் கண்டார்கள். ராக்ஷசேந்திரனுடைய தலைப்பாகையும் ஆபரணங்களும் தரையில் சிதறிக் கிடப்பதைப் பார்த்தார்கள்.

'இது என்ன?' என்று திகைத்து யோசிக்கலானார்கள். ஒடிந்த பெரிய வில்லையும், கிழிந்து போய்க் கிடந்த தேர்க் கொடிகளையும் கவசத்தையும் கண்டார்கள். பிறகு சாரதியும் ரதத்தை இழுத்த பூதக் கழுதைகளும் செத்துக் கிடப்பதைக் கண்டார்கள். பெரியதொரு யுத்தம் அந்த இடத்தில் நடந்திருப்பதாகப் பல* சின்னங்களைப் பார்த்தார்கள்.



''சீதையின்



உடலைத் தின்பதற்காக இரு அரக்கர்கள் தங்களுக்குள் பெருஞ் சண்டையிட்டிருக்கிறார்கள்'' என்றான் ராமன்.

இப்படி நானாவிதமாக ஊகித்துக் கொண்டு, ''தருமம் சீதையைக் காப்பாற்றவில்லையே! எந்த தெய்வமும் அவள் துணைக்கு வந்து நிற்கவில்லையே! இந்த உலகத்தை அழித்து விடுவதே சரி. நான் கற்ற அஸ்திரங்கள் பயன்படாமல் போகுமா, பார்க்கலாம்!'' என்றான் ராமன். தன் மன நிலையை முற்றிலும் இழந்து இவ்வாறு பேசினான்.

ராமனுடைய மனக் குழப்பத்தையும் ஆற்றாமையையும் கண்டு தம்பி லக்ஷ்மணன் தைரியம் சொல்லிக் கொண்டே வந்தான். ''பெருந் துயரம் ஏற்பட்டால் எல்லாருக்குமே மனம் கலங்கி சுவாதீனமற்றுப் போய் விடுகிறது. சகஜமாக உனக்குள்ள குணங்களை ஏன் விட்டு விட்டாய்? உலகத்தையெல்லாம் வெறுக்கவோ கோபிக்கவோ காரணமில்லை. ஒருவன் செய்த துஷ்டச் செயலை வைத்து நாம் உலகத்தையெல்லாம் பழிக்கலாமா? முந்தியெல்லாம் அண்ணா, என்னை நீ சாந்தப்படுத்திச் சரியான மார்க்கத்தில் நிறுத்திக் காப்பாற்றி வந்திருக்கிறாயே! உன் மனம் பெரும் துயரத்தால் கலங்கிப் போயிருக்கிறபடியால், சிறியவனாகிய நான் உனக்குத் தைரியம் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. உன்னுடைய இயற்கை தைரியத்தை நான் தட்டி எழுப்புகிறேன். உலகத்தை வெறுப்பது நியாயமல்ல. நம்முடைய பகைவன் யார் என்பதைக் கண்டு பிடித்துப் பிறகு செய்ய வேண்டியதைச் செய்வோம்.''

இவ்வாறு லக்ஷ்மணன் ஆறுதலும் தைரியமும் தரக்கூடிய மொழிகளைப் பிரியமாகச் சொல்லிக் கொண்டே சென்றான். கொஞ்ச தூரம் சென்றதும் தரையில் அசையாமல் குற்றுயிராய்க் கிடந்த ஜடாயுவைக் கண்டார்கள். சிறகுகள் வெட்டப்பட்டு உயிர் போகும் நிலையில் தரையில் கிடந்த பறவையைத் தூரத்திலிருந்து பார்த்த ராமன் யார் என்று தெரிந்து கொள்ளவில்லை. அது ஒரு அரக்கன், மாய வேஷம் போட்டுக் கொண்டு தங்களை ஏமாற்றுவதற்காகவே அப்படித் தரையில் கிடப்பதாக எண்ணினான்.

மாரீசன் செய்த
மோசம்

ராஜாஜி



### அடுத்த இதழில்.....

- **சோலைவனத்தில் கொலுவிருக்கும் வைஷ்ணவி தேவி!**
  **- நவராத்திரி சிறப்புக் கட்டுரை.**

- **'கொஞ்சம் நிலவு; கொஞ்சம் நெருப்பு'**
  **- புதுப்புயல் அனுபமா ஸ்பெஷல் பேட்டி!**

ராமன் மனத்தை இவ்வாறு எண்ணச் செய்தது. மகா கோபாவேசமாக ''அதோ, அரக்கன்! சீதையைத் தின்று விட்டுப் படுத்திருக்கிறான்'' என்று சொல்லி, வில்லும் அம்புமாகப் பறவை யிருந்த இடம் பாய்ந்தான்.

அப்போது ஜடாயு ஹீனமான சுவரத்தில், ''அப்பா, ராமனே! என்னை நீ கொல்ல வேண்டாம், என் உயிர் இன்னும் ஒரு கணம்தான் இருக்கும். நீ இந்த வனத்தில் தேடித் தேடி அலைகிற உன் தேவியானவள் ராவணனால் தூக்கிப் போகப்பட்டாள். அத்துடன் என் உயிரையும் தூக்கிச் சென்று விட்டான். சீதா தேவியைத் தன் மாய ரதத்தில் தூக்கிச் செல்வதைப் பார்த்து நான் தடுத்து அவனுடன் போர் செய்தேன். அவன் வில்லையும் ரதத்தையும் உடைத்துப் பொடியாக்கினேன். அவனுடைய சாரதியையும் வதம் செய்தேன். தரையில் கிடப்பதெல்லாவற்றையும் பார், அந்த யுத்தத்தின் சின்னங்கள். முடிவில் ராக்ஷசன், நான் களைப்பாயிருந்த சமயம் பார்த்து என் சிறகுகளைக் கத்தியால் வெட்டி என்னை வீழ்த்தி விட்டான். சீதையைத் தூக்கிக் கொண்டு ஆகாய மார்க்கமாய்ச் சென்று விட்டான். சிறகுகளை இழந்து தரையில் கிடந்த என்னால் அதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியவில்லை. உயிரை இவ்வளவு நேரம் வைத்துக் கொண்டு உனக்கு விஷயம் சொன்னேன்'' என்றான்.

ஜடாயுவின் சொல்லைக் கேட்டதும் ராமன் கண்களினின்று கண்ணீர் ஆறுபோல் பெருகிற்று. வில்லை வீசி எறிந்து விட்டு, பறவையைக் கட்டி அணைத்துக் கொண்டான். ராஜ குமாரர்களுடைய துக்கம் எல்லை கடந்து போயிற்று. 'கோ' வென்று அழுது கொண்டு பூமியில் புரண்டார்கள்.

''லக்ஷ்மணா! என்னைப் போன்ற துர்ப்பாக்கியசாலி எவனுமில்லை. நாட்டை இழந்து காட்டுக்கு வந்து இங்கே சீதையையும் இழந்தேன். தசரதனுக்குப் பதில் நமக்குத் தந்தையாக இருந்த இந்த ஜடாயுவையும் நான் கொன்றேன். எனக்காகத் தன் உயிரை விட்டான். சீதையை இழந்த துக்கத்தை விட இது அதிக துக்கமாயிருக்கிறது. நான் நெருப்பில் விழுந்தாலும் என்னுடைய துர்ப்பாக்கியம் அந்த நெருப்பையும் அணைத்து விடும். கடலில் விழுந்தேனானால் கடலில் உள்ள நீரும் என்னுடைய துர்ப்பாக்கியத்தால் வற்றிப் போகும். நான் பெரும் பாவி. லக்ஷ்மணா! ஒரு நாள் உன்னையும் நான் இழந்து விடுவேனோ?'' என்று ராமன் அழுது புரண்டான்.

ஜடாயுவைக் கட்டியணைத்துக் கொண்டு ''என் அப்பனே, என் சீதையை நீ கண்டாயா?'' என்றான். ஜடாயு பேச்சிழந்து தரையில் உணர்வற்று விழுந்தான்.

மரணத் தறுவாயிலிருந்த கழுகரசன் சரியாகப் பேசச் சக்தியின்றி மறுபடியும் ஹீனஸ்வரத்தில், ''பயப்படாதே, ராமா! சீதையை நீ மீண்டும் அடைவாய்!'' என்று சொல்லிவிட்டு வாயில் ரத்தமும் மாமிசமும் கக்கி உயிர் நீத்தான்.

மோகத்தாலும் மயக்கத்தாலும் தாம் செய்ய வேண்டியதைச் சமயத்தில் செய்யாமலும் செய்யக் கூடாததைச் செய்தும் சீதையை இழந்தார்கள்.

அயோத்தியில் தந்தை இறந்தான். அவனுக்கு உத்தரக்கிரியைகள் பரதனும் சத்ருக்கனனும் செய்தார்கள். ராமனும் லக்ஷ்மணனும் அந்த ஆறுதலைக்கூட அடைய சந்தர்ப்பம் இல்லாமல் வனத்திலிருந்தார்கள்.

தாங்கள் அஜாக்கிரதையாக இருந்ததால் சீதைக்கு உண்டான அபாயத்தினின்று அவளைத் தப்புவிக்க, ஆயுத பாணியாயிருந்த அரக்கனோடு சிறகுகளும் காலும் மூக்கும் தவிர வேறு ஆயுதமின்றி ஜடாயு கடும் போர் செய்து தன் உயிரைத் தத்தம் செய்து விட்டதைக்

கண்டார்கள். இந்த ஜடாயு தங்கள் தந்தைக்குச் சமானம் என்று பாவித்து அந்தப் பறவைக்கு உத்தரக் கிரியை தகப்பனாருக்குச் செய்வது போல் ராஜகுமாரர்கள் இருவரும் செய்து ஓரளவு ஆறுதல் அடைந்தார்கள். இறந்த வீரனுக்கு வேறு என்ன அவர்கள் செய்ய முடியும்?

பாகவத பக்தர்கள் ஜடாயுவை மிகப் பெரிய பக்த சிரேஷ்டனாக வணங்குகிறார்கள். அந்த ஏழைப் பறவை ராக்ஷசேந்திரனுடன் சண்டையிட்டுக் கஷ்டப்படும்போது பார்த்துக் கொண்டிருந்த சீதையின் உள்ளத்தில் எவ்வாறு அன்பும் நன்றியும் துக்கமும் பொங்கியிருக்கும் என்பதை நம் கற்பனா சக்தியைக் கொண்டு 'உணர வேண்டும். உணர்ந்தால் பிராட்டியின் அருளால் தூய்மையும் பக்தியும் அடைவோம். பக்தர்கள் ஜடாயுவை ஒரு ஆழ்வாராகக் கருதி பக்தி செய்வதில் என்ன வியப்பு? பின்னால், ராமன் இலங்கையில் யுத்தம் செய்து வெற்றி அடையப் போகிறான். ஆனால், அதை சீதை நேரில் காணுவதில்லை; அசோக வனத்தில் சிறைபட்டுக் கிடக்கிறாள். போர்க்கள நிகழ்ச்சியையும் புருஷனுடைய புகழையும் பிறர் சொல்லித்தான் அறிந்து திருப்தி அடையப் போகிறாள். ஆனால் ஜடாயுவின் பக்தியையும் வீரத்தையும் தண்டகாரண்யத்தில் பிராட்டி தன் கண்ணாலேயே பார்த்தாள். வில்லும் வாளும் கொண்ட அரக்கனை ஆயுதமொன்றும் இல்லாமல் எதிர்த்து, அவன் கர்வத்தை அடக்கி, முடிவில் தன் உயிரைத் தத்தம் செய்த வீரன் ஜடாயு. இலங்கையில் நடந்த யுத்தத்தைக் காட்டிலும் ராவண - ஜடாயு யுத்தமே மேலானது என்று கூடச் சொல்லலாம். இதனாலேதான் பக்தர்கள் பரதனை ஆழ்வான் என்று துதிப்பதுபோல், ஜடாயுவையும் ஆழ்வான் என்று பெயர் சூட்டிக் கொண்டாடுகிறார்கள்.

"லக்ஷ்மணா! உலர்ந்த கட்டைகளைத் திரட்டி அடுக்குவாய், நான் நெருப்புக் கடைகிறேன். நமக்காக உயிர் விட்ட கழுகரசனுக்காக தசரதனுக்குச் செய்யத் தப்பிப் போன கிரியைகளைச் செய்வோம்'' என்றான்.

''வேள்வித் தீயில் ஆகுதி விட்டு யாகம் செய்த சிலர்களுக்கு எந்தப் பதவி உரியதோ, தவம் செய்யும் வானப் பிரஸ்தர்களுக்கு எந்த கதி உரியதோ, பூமி தானம் செய்யும் புண்ணியவான்களுக்கு எந்தப் புண்ணியலோகம் உரியதோ, யுத்தத்தில் பின்வாங்காத வீரனுக்கு எந்த உலகம் உரியதோ, அவையெல்லாம் உனதாகுக, என்னால் சம்ஸ்காரம் செய்யப்பட்ட கழுகரசனே!'' என்று சொல்லி ராஜகுமாரர்கள் நீர்க் கடனும் செலுத்தினார்கள். அதன் மேல் ராமன் மனத் தளர்ச்சி நீங்கித் தைரியம் அடைந்தான்.

(தொடரும்)

# இது தாண்டா சாதனை!

ஆர்யபட்டா 1975 ஆம் ஆண்டு வெற்றிகரமாக விண்வெளிக்கு அனுப்பப்பட்ட போது, அந்த சாதனைக்குக் காரணமான திட்ட இயக்குனர் யு.ஆர். ராவ் சோகமான மனிதராகக் காட்சி அளித்தார். காரணம் – அந்தத் திட்டம் முடிவுற்றதால் சுமார் பதினைந்து அன்றாடத் தொழிலாளர்கள் (சமையல்காரர், சர்வர்கள் போன்றவர்கள்) வேலை இழக்க நேரிட்டது. ராவ் டெல்லி சென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்தித்தார். ஆர்யபட்டாவின் வெற்றிக்கு அந்த அன்றாடத் தொழிலாளர்களின் பங்கும் உள்ளது என்றும், அவர்களை வீட்டுக்கு அனுப்புவது கொடூரம் என்றும் வாதாடினார். ஒரு வழியாக மேலதிகாரிகளும் அவர்களைத் திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்ளச் சம்மதம் தெரிவித்தனர். அந்தத் தொழிலாளர்கள் ராவைச் சந்தித்து நன்றி சொன்ன போது, ராவ் உணர்ச்சி மேலிட்டு அழுதுவிட்டார். "அந்தத் தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்தியதுதான் ஆர்யபட்டாவை விண்வெளிக்கு அனுப்பியதை விட மிகப் பெரிய சாதனை'' என்று தமது அதிகாரிகளிடம் மனம் நெகிழ்ந்து கூறினார்.

– வி.என். கோபால்

நன்றி : எக்ஸ்பிரஸ்



# பொறந்தாலும் ஆம்பளையா பொறக்கக் கூடாது

**டை**ட்டிலும், போஸ்டரில் முந்திரிக் கொட்டை மாதிரி தட்டுப்படும் பாண்டியராஜன் விழிகளும் தமாஷ் படம் என்பதை முன்னதாகச் சொல்லி விடுகின்றன. எனவே இந்த எதிர்பார்ப்பில் செல்லுகிறவர்களுக்கு அவ்வளவாக ஏமாற்றமில்லை.

குடும்பப் பெருமை, பணச்செருக்கு என்று வசதியான வில்லியாக ஸ்ரீவித்யா. புருஷன் ஆர். சுந்தர்ராஜன். சரியான காம்பினேஷன். ''இந்த வீட்டுல இதுவரைக்கும் பொம்பளை ராஜ்ஜியம்தான். நீ வந்தப்புறமாவது மாறுதா பார்ப்போம்'' என்று ஆர். சு. தன் பையனிடம் பேச, உடனே குழந்தையைப் பிடுங்கி, நிஜாரை அவிழ்த்து பாவாடை சட்டை மாட்டி விடுவதும், லட்சுமி நாராயணனைச் சுருக்கி லட்சுமி ஆக்குவதும்... ஸ்ரீவித்யா இம்மாம் பெரிய வில்லியா?

மருமகள் வந்தால் பெண்டாட்டியை அடக்கலாம் என்று கணக்குப் பண்ணி, 'சிங்கப்பூர் ரிட்டர்ன்' என்று ஒரு மீன்காரியை சுந்தர்ராஜன் அழைத்து வந்துவிட, படம் களை கட்ட ஆரம்பிக்கிறது.

ஐஸ்வர்யா - பாண்டியராஜன் ஏணி வைத்தாலும் எட்டாத ஜோடி. ஐஸுடன் பாண்டியராஜன் பேசுகிற சீனிலெல்லாம் இரண்டு படி மேலே நின்று பேச வேண்டிய பரிதாபம். தவிரவும் அவரது பிரசித்தி பெற்ற திருட்டு முழி, ஐஸின் உருட்டு முழியின் முன் அம்பேல் ஜூட்!

மேலும் அவரது டிரேட் மார்க் வழிசல்களுக்கு டைரக்டர் இடம் விடுகிறவராகத் தெரியவில்லை. திரைக்கதை முழுக்க ஸ்ரீவித்யாவையும் ஐஸையும் சுற்றித்தான்!

இன்டர்வெல் வரை ஒரு மாதிரியாகப் போய்க் கொண்டிருந்து விட்டு, திடீரென்று ஸ்ரீவித்யா கர்ப்பம் என்று திசை மாறுகிற போது சகலரும் ஒரு பாடு குழம்பிப் போயிருக்கிறார்கள்.


சுகட்டுமேனிக்கு வசனங்களில் பகைமைப் புரட்சி. எதிர்பார்த்த நாடக முடிவு எனினும் உபயோகமான விஷயத்தை உருப்படியாகச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த ஒரே காரணத்திற்காக மட்டுமே படம் நெடுக விரவிக் கிடக்கும் ஏனைய அபத்தங்களை மனம் ஒப்பினால் மன்னித்து விடலாம்.

\- ஆர்.பி.ஆர்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

# உங்கள் மகள் சிரமப்பட்டுப் படிப்பது மட்டுமே போதாது.
# அவளுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க நீங்கள் திட்டமிட வேண்டும்.




இரவு முழுதும் கண்விழித்து படித்து, முன்னேற வேண்டும் என்ற மன உறுதி. அதோடு யூடிஐ வழங்கும் 'காலேஜ் & கேரியர் ஃபண்டில்' நீங்கள் செய்யும் முதலீட்டைப் பயன்படுத்தி, அவள் அந்த உச்ச நிலையை எய்தும் குறிக்கோளை சாதிப்பதற்கு சாத்தியமாகும்.

உங்களுடைய குழந்தை/மகள் 15 வயதிற்குட்பட்டிருப்பின், நீங்கள் இப்போதே முதலீடு செய்து அவளுடைய ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழிவகுக்கலாம். அது அவளுடைய கல்லூரி மேற்படிப்பிற்கோ அல்லது தொழில் துவங்கவோ கை கொடுத்து உதவும். ஃபண்டின், படிப்படியாக பணத்தை திருப்பி எடுக்கவல்ல சௌகரியம், அந்த படிப்பின் மேலும் மற்ற செலவுகளுக்கு தேவையான போது பெரிதும் உதவிடும். ஆண்டாண்டு தோறும் அதிகமாய் முதலீடு செய்வீர்களேயானால், அவளுடைய எதிர்காலம் அதிக ஒளிமயமாய் அமையும். இந்த ஃபண்ட் வளர்ந்து கொண்டே இருக்கிறது. உங்கள் குழந்தை வளர்வதைப் போன்றே வளரும் வகையில் உங்கள் பணத்தை யூடிஐ முதலீடு செய்வதுதான் அதற்குக் காரணம்.

## சிறப்பு அம்சங்கள்

- ☐ ஒரு ஓப்பன் — எண்டெட் திட்டம்.
- ☐ 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான திட்டம். 18 லிருந்து 23 வயதுவரை படிப்படியான முறையில் பணத்தைத் திருப்பி எடுக்கவல்லது.
- ☐ ஒவ்வொரு யூனிட்டும் ரூ.10, குறைந்தபட்ச முதலீடு ரூ.2000, மற்றும் அதற்கு மேல் ரூ.500-ன் மடங்கில், 15 வயதுக்குட்பட்ட உங்கள் குழந்தைக்கு.
- ☐ பண்டில் ஏற்படும் வளர்ச்சி போனஸ் யூனிட்டுகளாக அதற்குரிய காலவரையில் சேர்க்கப்படும்.
- ☐ ஒவ்வொரு ஆண்டும் இருமுறை பகுதியளவு பணத்தைத் திருப்பி எடுத்தல் அனுமதிக்கப்படும் — 18 வயதில் 50% பிறகு ஒவ்வொரு ஆண்டும் அதோடு 10% கூடுதலாக 23 வயதுவரை.
- ☐ ஒன்றுவிட்ட அடுத்த குழந்தைக்கு (15 வயதுக்குட்பட்டவர்) நியமன வசதி.

விண்ணப்ப பாரங்களுக்கு ஏதேனும் யூனிட் ட்ரஸ்ட் காரியாலயம், முக்கிய பிரதிநிதி அல்லது ஏஜெண்டுகளையோ அணுகவும்.

யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா

உங்கள் ஒளிமயமான எதிர்காலத்திற்காக

**CHILDREN'S COLLEGE AND CAREER FUND**
UNIT PLAN-93

**திட்டம் துவங்கிய தேதி: ஜூலை 12, 1993**

மண்டல அலுவலகம்: 29, இராஜாஜி சாலை, சென்னை 600 001. போன்: 517101
கிளை அலுவலகங்கள்: • **கோயம்புத்தூர்**. போன்: 210399 • **சென்னை**. போன்: 517101, 517150
• **மதுரை**. போன்: 38186 • **திருச்சி**. போன்: 32619

UTI.57.93 TM C

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

